முதற் பதிப்பு : ஜனவரி 2015



ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளின்
ஆன்மீக அன்பர்களுக்கு சமர்ப்பணம்

ஒளியச்சு & அச்சிட்டோர்
**பரணி கிராஃபிக்ஸ்**
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 2813 1102



ஓம் தத் ஸத்
ஸ்ரீ குருப்யோ நம :

## குரு ஸ்துதி

1. பவித்ரம் விலக்ஷணானந்தம் புண்யம் சிரவண கீர்த்தனம்
பிரம்மம் பரமானந்தம் சுலபம் சுது ஷ்கரம்
2. விலக்ஷணானந்தம் தேவம் பாப பர்வத மர்த்தனம்
அவதாரம் ஹ்ருதயானந்தம் விலக்ஷணமதி மத்புதம்
3. நமஸ்தே விலக்ஷணானந்தாய ஞானினே யோகினே நம :
ஞான சூர்ய பிரகாசாய ஆத்மனே பரமாத்மனே
4. ஸ்ரீ விலக்ஷண குரோர்பாதம் ஸ்மரணே ஜன்ம நாசனம்
தரிசனம் பாவனம் ஜன்மம் வந்தனம் ம்ருத்யுநாசனம்
5. ஏகம் சாஸ்திரம் ஸ்ரீ விலக்ஷணானந்த கீதம்
ஏகோ தேவோ ஸ்ரீ விலக்ஷணானந்த ஏவ:
ஏகோ மந்த்ரோ ஸ்ரீ விலக்ஷணானந்த நாம
கர்மாப்யேகம் ஸ்ரீ விலக்ஷணானந்த ஸேவா.

## த்யான ஸ்லோகம்

1. திரிபுவன பூர்ண ப்ரகாசா ஸர்வேச்வர ஜகதீசா
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்யபதே
2. பரமாத்மா பரஞ்ஜோதி பராத்பரா பரிபூர்ணா
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்ய பதே
3. முனிஜன மானஸ ஹம்ஸா பக்த ப்ருந்த ஹ்ருதய நிவாஸா
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்ய பதே
4. குருவர தைர்ய ஸமுத்ரா சரணாகத ரக்ஷண முத்ரா
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்ய பதே
5. ஸத்ஜன ரக்ஷண ச்ரேஷ்டா ஸர்வதயோக கரிஷ்டா
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்ய பதே
6. நிர்குண நிர்விகாரா பூர்ணானந்த அவதாரா
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்ய பதே
7. அவதாரண அதிச்ரேஷ்டா த்ரிபுவன துர்லபவரிஷ்டா
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்ய பதே
8. காஷாயாம்பர வசன ஹ்ருதயாகாச விஹரணா
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்ய பதே
9. தண்டகமண்டலு தாரிண மண்டன பூஷித கிரண
ஸ்ரீ விலக்ஷண ஸ்ரீ விலக்ஷண ஜெய த்ரைலோக்ய பதே
10. ஸ்ரீ விலக்ஷண குரோர் ஸ்தோத்ரம் பக்திமான் யப்படேந்நர :
ஸர்வஸித்தி மவாப்னோதி புக்திம் முக்திஞ்ச விந்ததி.

## என்னுரை

ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீயின் 120வது ஜெயந்தி விழாவையொட்டி பிரசுரிக்கப்படும் ஞான ரகஸ்யம் என்ற புத்தகத்தின் நிறைவுப் பகுதியின் மூலம் ஸ்ரீ ஸ்வாமிகளின் உபதேசங்களை பூரணமாக ஆன்மீக அன்பர்களுக்கு அர்ப்பணம் செய்த திருப்தியுடன் இதனை பூர்த்தி செய்கிறேன்.

அன்பர்கள் யதேச்சையாக ஒரு சில உபதேசங்களை கண்ணுற்றாலும் கூட அதனுடைய ஆழத்தையும், சிறப்பையும் அறிய இயலும்.

ஸ்ரீ ஸ்வாமிகள் சநாதன ஆன்மீக பெட்டகத்திலிருந்து வேதம், உபநிஷத், ஸ்ரீ பகவத் கீதை, கைவல்ய நவநீதம், யோக வாசிஷ்டம், ஆழ்வார்களின் அருள் மொழிகள் முதலிய எண்ணிலடங்கா நூல்களை பலவித கோணங்களிலிருந்து ஆராய்ந்து அதன் சாரமாக சத்விஷயங்களை அருளியிருக்கிறார். இதனை அவரவர்கள் பக்குவத்திற்கு ஏற்ப நடைமுறையில் அப்யசித்தால் அதன் பலன்களை நன்குணற முடியும்.

இறுதியாக ஞான ரகஸ்யம் நான்கு பகுதிகளையும் இந்த நான்கு வருடங்களில் சிறப்பாக நிறைவு செய்தேன் என்றால் எனக்கு உறுதுணையாயிருந்து அதன் பூரண உழைப்பில் பங்கேற்ற எனது அருமை மகள் திருமதி இந்திரா பாலாஜியையே சாரும். இந்திராவிற்கு ஸ்ரீ குருவின் பூரண ஆசிகள் என்றுமுண்டு.

இனி மதுரை ஜில்லாவை சேர்ந்த ஸ்ரீ ஸ்ரீனிவாசன் அவர்கள் 1944வது வருடம் ஸ்ரீ ஸ்வாமிகள் ஜீவிய வந்தராக இருந்த பொழுது ஆற்றிய உரையை காண்போம்.

**– டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா**



ஓம்
தத் ஸத்

## எமது குருநாதர்

பொன்னும், மணியும், செந்நெல்லும், வாழையும், கொழிக்கும் நாடு நம் பரத கண்டம், மஹரிஷிகளும், அவதார புருஷர்களும் தோன்றிய கண்டம், அஹிம்சையை விரதமெனக் கொண்டு மிருக பலத்தைத் துச்சமெனக் கருதி மனச்சாந்தியை அடைவதற்கு ஆத்ம விசாரணை செய்து வாழ்ந்து வரும் மணி நாடு நம் பொன்னாடு. நம் நாட்டு மக்களுக்கு மதம்ஓர் பெரிய வழிகாட்டி. விரிந்த நோக்கத்தோடு, நம் மஹரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட ஹிந்து மதம் கடவுள் ஒன்றேயன்றிப் பலவல்ல என்று நிரூபித்துக் காட்டிய பெருமை கொண்ட மதம், இன்று கால வித்தியாசத்தால் பல்வேறு மதங்கள், எண்ண முடியாத கடவுள்கள், சமரஸத் தன்மையற்ற குறுகிய நோக்கங்கள் பூண்ட ஏட்டிலடங்காப் பிரிவுகளாகித் தத்தளித்து, அலைகடல் துரும்பைபோல் அலைந்து நிற்கிறது. இச்சமயம் நமது தேவை யாது? சுருங்கச் சொல்லின், நமக்குக் காலதேச வர்த்தமானங்களுக்கேற்பவும், சுருதி, யுக்தி அனுபவத்திற்கொட்டியும், நாட்டு மக்களெல்லோரும் ஜாதி வித்தியாசமின்றி சகோதர சகோதரிகள்போல் ஒன்றுபட்டு அன்போடு, தோளோடு தோள் பொருந்தி வாழ்வதற்கு வேண்டிய ஒரே கடவுளையும், ஒரே மதத்தையும், சமரஸ ஞானத்தையும் போதிக்கவல்ல ஆசான் வேண்டும்; இன்றைய நிலைமையில் உலக மக்களெல்லோரும் கீதாசார்யனை உண்மையான ஆசான் என்று பாகுபாடின்றிக் கொண்டாடுகிறார்கள். காரணமென்ன? மேற்கூறிய மக்கள் தேவையை, தற்கால மடாதிபதிகளைப்போலல்லாமல், கட்டுப்பாடின்றி சுதந்திரத்துடன் உண்மையான ஆத்ம சமரஸ ஞானத்தை, கெம்பீரத்தோடும், வீரத்தோடும் பார்த்தனுக்குப் போதித்தான் கீதாசார்யன். கீதாசார்யன் ஒரு பெரும் கர்மவீரன். அத்தகைய சிறந்த கர்மவீரன் நாட்டுப்பணியில் வாழக்கையைச் சிலவிடும் நல்லறிஞன், எட்டுவித சந்யாச ஆஸ்ரமங்களையும் தாண்டிநின்று காஷாய கமண்டலதாரியாக் காட்சியளிப்பவன். ஜனக மஹா ராஜனைப்போல் நிராசையாய் வாழ்க்கை வாழ்பவன். பக்தர்களுக்கு அவரவர் மனநிலைக்கு ஏற்றவாறு தரிசனமளிப்பவன், பிரவர்த்தி ஞானி, சுதந்திர புருஷன், ஸ்ரீ வேங்கடேசனின்

ஹம்சாவதார விலக்ஷண ரூபன், ஒரே கடவுள், ஒரே மதம் இவைகளைப் போதித்து உலக சுதந்திரத்திற்கு வாழ்க்கையை அர்ப்பணம் செய்வதே தனது லட்சியமெனக் கொண்டு இன்று இப்பரதகண்டத்தில் சஞ்சரித்துவரும் மஹான் யார்? இந்திர பதவி கிட்டிய காலத்தும், காலன் குறுகும் காலத்தும் சந்தோஷமோ துக்கமோ இன்றி, பற்றற்று விளங்கும் பரமன் யார்? அப்பரமனே எமது குருநாதர். அவரே எம்மை ஆட்கொள்ள வந்த கடவுள். இத்தகைய சற்குரு தோன்றிய நகரம், பரத கண்டத்தில் தென்னிந் தியாவில் சுரபி நதி பாயும் பிரதேசத்தில் உள்ள பாண்டிய நாட்டைச் சேர்ந்த தேவாரத் திருப்பதியே. இன்று பரமாத்மா என்னும் நாமத்தோடு திருப்பாற் கடல் மத்தியில் வாழும் ஸ்ரீமந் நாராயணனைப்போல், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில், அகண்ட காவேரிக் கரையின்கண் விளங்கா நிற்கும் மணமேடு என்ற கிராமத்தில் கடல்போல் பசுமை நிறத்தோடு சூழ்ந்து நிற்கும் நெற்கழனிகளின் நடுவே அமைந்த மாளிகையொன்றில் ஓங்காரக் குல்லாயுடன் ஆசானுபாகுவாய் கொளக்குடி மக்கள் செய்த தவப்பயனாய் பக்தர்களுக்குக் காட்சியளித்து ஞானோபதேசம் செய்து வருகிறார். இம்மஹான் விஜய வருடம் மார்கழி மாதம், சதய நக்ஷத்திரம் குருவாரத்தன்று திருவவதாரம் செய்தவர். இத்தகைய பரம புருஷர்களால்தான் நம் நாடு சுபீக்ஷமடையப் போகிறது. எம் குருநாதர் காலத்தை எதிர் நோக்கி நிற்கிறார். பக்தர்கள், ஆத்ம விசாரணை செய்பவர்கள், இகபர நல்வாழ்வு விரும்புவர்கள் எல்லோரும், மன உறுதி கொண்டு பரமாத்ம தரிசனம் செய்து அவரது பிறந்த தின விழாவை "பரமாத்ம ஜெயந்தியாக" ஒவ்வொரு வருஷம் மார்கழி மாதமும் கொண்டாடி வருவோமாக. நாமும் சுகமடைவோம்; நாடும் வளம் பெறும். மக்கள் பெரு வாழ்வு வாழ்வார்கள். உலகமும் உன்னதமடையும். பரமாத்மாவுக்கு சகல மங்களங்களும் ஜெயமும் உண்டாகட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*27–5–1944*

தாஸன்,
**கே. ஸ்ரீநிவாசன்**, டீச்சர்
நெ. 139, தெற்கு மாட வீதி,
மதுரை.



## ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்ம சுவாமிகள் அருளிய
## குணசீலம்
## வேங்கடேச திருப்பதிகம்

1. திருவளருந் திருமார்புந் தெய்வ நோக்குந்
திரண்டெழுந்த நாறுபுயமுந் திகிரி சங்கும்
மருமருவுந் துளபமணி மாலை மார்பும்
மங்கையிரு மார்பிடையு மணி துலங்க
வருமுனிவன் குணசீலன் றவத்திற் காக
மாதவத்தின் சுடராகிப் பொன்னி மேய
வருமுதலே வேங்கடவ ஸ்ரீநிவாஸ
மலரடிக்கே யெனதுமுடி வாழ வம்மா.

2. குணங்கடந்த குணசீலன் பொன்னி நாப்பண்
குணமடக்கித் தவம் புரியக் கொழுந்து போல
மணமலிந்த மாதவியாள் வலப் பாகத்து
மந்தார முகினிறத்து மலையேமுள்ளான்
கணமலிந்த வடியார்கள் சூழ வந்து
காட்சியளித் துய்வித்த ககன யீச
அணைமீது வரவணையிற் பள்ளி கொள்ளு
மச்சுதனே நினது பதம் பணிந்திட்டேனே.

3. பாகார்ந்த மொழிமடவா ராசை நீக்கிப்
பற்றறுத்து வகமடக்கிப் பதிவு கொண்டு
சாகாத கல்வி கொடு குணசீலன்றான்
தவம்புரிய மனமிரங்கி வேங்கடேசன்
ஓகார மொழிகொடு நல்லுவண மேறி
ஒய்யாரமான நடைப் பொன்னி யுற்று
ஆகாய மஹராசன் புதல்வி கேள்வ
னடியிணையி லனவரத மிறைஞ்சு கேனே.

4. மண்ணளந்து விண்ணளந்து மனதை மாய்த்து
மாவலியைப் பாதலத்தி லழுத்தி விட்டுக்
கண்ணளந்து வேங்கடத்தின் கமல மேய
காரணனார் குணசீலன் றவத்திற் காகப்
பெண்ணளந்த பெருமானும் பிரமன் றானும்
பேசரிய முனிங்கணங்க ளமரர் சூழ

எண்ணளந்த வெம்பெருமான் கோலத்தோடு
மேழுந்தருளி நின்றவன்றா னெனக் காமம்மா.

5. கண்ணாயிரத் துடையோன் றடை செய்தாலும்
கலங்காத குணசீலன் கலியை வென்று
எண்ணாத நினைவறுத்து வேக மெய்தி
இருந்தவத்தி லிருந்த குணசீல மன்னன்
உண்ணாக்கி னடிச் சென்று உச்சியேறி
உரகபட மீதமர்ந்த வொருவன் றன்னை
அண்ணாந்த காவிரியின் வடபாற் கண்டு
அதுவதுவா யானவவன் பெருமை யென்னே.

6. கண்டேனின் றிருவடியைக் கமலக் கண்ணைக்
கரியதிரு மேனிமிசை மின்னல் போலக்
கொண்டேனென் மரகதத்தை யிளையா டன்னைக்
கொண்டல் படிந் தமுதமெனக் கரியமேகம்
விண்டோய்ந்த நாற்புயமும் விளைந்த சங்கும்
விரிந்தகண்ட காவிரியின் வடபாற் றோன்றி
மண்டோய்ந்த குணசீலன் முன்னின் றாண்டாய்
மாதவனே நினது திருவடி கண்டேனே.

7. ஆரணமு மாமகமும் புகல வொண்ணா
வருந்தவமே யேழுமலை வாழுமீச
காரணமே கஞ்சனைமுன் குத்தி வீழ்த்திக்
காசினியை யுய்வித்த கமலக் கண்ணா
நாரணனே குணசீலன் பிறவி தீர
நற்பொன்னி வடகரையிற் றுலங்கி நின்றாய்
பூரணமே புண்ணியமே நினது பாதப்
பொருப்பிடையே யெனதுமனம் புகுந்த வாறே.

8. ஆசையெலாம் விட்டொழித்தே னனைத்தும் வேண்டேன்
அனந்தன்மலைப் பெருமானே வேங்கடப் போம்
மாசின்மணி மறைப்பொருளே துரிய வாழ்வே
மாதவனே மூவடிவா யிலங்குஞ் சோதி
காசினியிற் சீவருக்குப் பவரோ கத்தைக்
கழித்திடவு நினைத்தவர மளிக்க நேர்ந்தும்
யீசனென வடிவுகொடு குணசீலற் கா
வெழுந்தருளு மெம்மானைக் கண்டே னின்றே.



9. அஞ்சஞ்சுமேழெட்டு மறுபான் மூன்றும்
அவதாரம் பத்துடனே தள்ளி யம்பால்
விஞ்சுமதி லகநிறுத்தி நிஷ்டை கூடி
விளங்குகின்ற விசலமதில் ஸ்ரீநி வாசன்
கொஞ்சுமொழி ஸ்ரீதேவி தனையுங் கண்டு
குணசீலன் றவம்புரிந்த கூர்மை காண
மஞ்சுபடி திருமலையி னின்றெ ழுந்த
மாதவநின் றிருவடிக்கா ளாகின் றேனே.

10. அஞ்சுகத்தி னருஞ்சீடன் குணசீலன் பே
ரருந்தவத்தோன் காவிரியின் வடபாற் கொன்றை
நஞ்சுடையோன் சூதமரத் தடியிற் றங்கி
நாலாறு தத்துவமு நலியத் தாண்டிக்
கொஞ்சுமொழி மாதாவி னடிப ணிந்து
கொண்டலெழு மாதவனை யுளத் திருத்தி
விஞ்சு தவஞ் செய்திட்ட வியப்பிற்காக
விளங்கிவரு வேங்கடவ வணங்கி னேனே.

11. அண்டமெலாங் கிடுகிடுத்து விழுந்திட்டாலும்
அமரர்முனி தேவரெலா மழிந்திட்டாலும்
கொண்டலிடிந் திப்புவியில் வீழ்ந்திட்டாலும்
குணங்கலங்காக் குணசீல முனிவற்காகப்
பண்டெழுந்த பரமேசன் வேங்க டத்தான்
பதிகமிதை விலக்ஷணா னந்தனென் பான்
குண்டலியை நின்றெழும்பிக் கவிதை செய்தான்
குணநீத பரமாத்ம முனிவன் றானே.

## வாழித் திருநாமம்

வைகுந்த நாதன் வாழி வடமலைப் பெருமான்வாழி
கைவந்த குணசீலப்பேர்க் காவிரி நதியும் வாழி
பொய்யொழித் தருளேகொண்ட புண்ணிய வடியர்வாழி
செய்யவேங் கடவன்வாழி ஸ்ரீதேவி வாழி வாழி.

–: ஓம் தத் ஸத் :–

## 1 வது நாள்

* சிரிப்பு அழுகை தூக்கம் உதாரம் பயம் திருட்டு அதிகாரம் தந்திரம் வஞ்சகம் வியாபாரம் உத்யோகம் கிருஷி வியபிசாரம் உபதேசம் பிரியம் இவ்வகைகளால் திரவ்யத்தைச் சம்பாதித்துப் புண்ணியம் தர்மம் செய்கிறவர்கள் முறையே மின்னல் மேகம் இடி நட்சத்திரம் மிருத்யு சந்திரன் வாயு வருணன் குபேரன் ஸ்வர்கம் பிதுர்லோகம் கந்தர்வலோகம் துருவலோகம் நாகலோகம் முதலிய உலகங்களை அடைந்து மீண்டும் பூமியில் ஜனிக்கிறார்கள்.

## 2 வது நாள்

* பிரகிருதியைத் தாண்டுவது அமானுஷ யோகம்.
* பிரகிருதியில் நிலைத்து விடுவது சாங்கிய யோகம்
* அபேத மதம் அழிவில்லாதது; பேத மதம் அழிவுள்ளது.

## 3 வது நாள்

* உண்பதற்கும் உடுப்பதற்கும் போகிப்பதற்கும் தூங்குவதற்கும் மரணமடைவதற்கும் அவதாரமாயிருக்கிறவர்களை மனிதக் கழுதை யென்று வேதம் கூறுகிறது.
* புத்தியைக் கொண்டு புத்தியுள்ளவர்களால் புத்தியுள்ள காலத்தில் புத்திக்குத் தக்கபடி புத்தி சாதுர்யத்தால் புத்திக்கு எட்டினவரை புத்தியாலுண்டாக்கப்பட்டது மதங்கள்.

## 4 வது நாள்

* பக்தி யோகத்தினால் குண சகித முக்தியையும் ஞான யோகத்தினால் குண ரகித முக்தியையும் அடையலாம்.
* சங்கல்பமும் வசனமும் யாதொரு இயற்கைகளுமில்லாதவன் விதேக முக்தன்.

## 5 வது நாள்

* வஞ்சகமின்றி எவனெவனுக்கு எதெது கிடைக்கிறதோ அவையவைகளை அப்படியப்படியே சர்வேஸ்வர பகவானுக்கு அர்ப்பணஞ் செய்து புஜிக்க வேண்டும்.
* ஸ்திரீகளை அடிமைகளாக வைத்துக் கொள்ளக் கூடிய ஆஸ்ரமங்களை துறவிகள் வெறுக்கிறார்கள்.

## 6 வது நாள்

* யோகிகளுக்கு சாங்கியத்திலும் வேதத்திலும் ஆதரவிருக்கிறது.
* சூட்சும புத்தியில்லாதவர்களுடன் பழகுவது தீமையை விளைவித்து விடும்.
* பேசிப் பேசி உலக வுபகாரஞ் செய்வதைவிடப் பேசாமற் செய்வது நல்லது.
* பிரஹ்மத்தை யறியப் பக்தி யோகம் வேண்டியதில்லை.

## 7 வது நாள்


* திரிமூர்த்திகளது பதவிகளைப் பெறுவதைக் காட்டிலும் யாதொரு மறைப்புமில்லாத ஞானம் பெறுவதே சிலாக்கியம்.
* பரமாத்மாவை மறைத்து விடுகிற செய்கைகளே சகல மதங்களிலும் அதிகமாய்க் காணப்படுகின்றன.

## 8 வது நாள்

* சொந்த ஆத்மாவை அறியாதவர்கள் அன்னியமாகத் தெய்வத்தை நாடுகின்றனர்.
* உருவ முக்தியை விரும்புபவர்கள் உபாஸனையையும் பத முக்தியை விரும்புபவர்கள் கரும யோகத்தையும் செய்கிறார்கள்.

## 9 வது நாள்

* நேரே பரப்பிரஹ்மத்தை அடைய முயற்சிக்கின்ற மஹாத்மாக்கள் திரிமூர்த்திகள் மற்ற தேவர்கள் ரிஷிகள் சித்தர்கள் வேதங்கள் உலகங்கள் இவர்களைப் பூஜித்துச் சகாயமாக்கிக் கொள்ளுகிறார்கள்.
* பிரபஞ்சத்தின் பெரும் பகுதியினர் அதோமுக காரியங்களைச் செய்து கொண்டு ஊர்த்துவ முகமாய்ச் செல்வதற்கு ஆசைப்படுகின்றனர்.




## 10 வது நாள்

* சகல தத்துவங்களையும் சாஸ்திரங்களால் தாண்டிச் செல்பவர்கள் மன தினாற் கடந்து போகிறவர்கள் அனுபவத்தினால் தள்ளிச் செல்பவர்கள் என்று மூன்று பிரிவினர் இருக்கிறார்கள்.
* அக்னி சூர்யன் வாயு இம்மூவரும் எல்லோருடைய சரீரங்களிலுமிருந்து அவரவர்கள் செய்கிற பாப புண்ணியங்களுக்குச் சாட்சியாயிருக்கின்றனர்.

## 11 வது நாள்

* இகலோகத்தில் தான் செய்த கர்மமானது யாதொரு தடையுமின்றிப் பரலோகத்தில் தனக்கே வந்து சேருகிறது.
* ஞானத்தை வேண்டி நிற்பவன் எப்போதும் ஒருவனாகவே சஞ்சரிக்க வேண்டும்.




## 12 வது நாள்

* எவ்வளவு பெரிய ஞானியானாலும் மனம் தேகம் பிராணன் இவைகள் இரும்பு போலிருக்கிறவரை பூர்ண மஹானென்று சொல்லுவது சுருதி சம்மதமல்ல.
* எவன் மனது ஆத்மாவில் ஒரு முகூர்த்த காலம் நிலைத்துக் கீழிறங்கப் படுகிறதோ அவன் மத்திய போகசாலி யென்றறிக.

## 13 வது நாள்

* எவன் மூன்றவஸ்தைகளையும் மெதுவாகத் தாண்ட ஆரம்பிக்கிறானோ அவன் துரியானுபவத்தினின்று கீழிறங்குவது கடினம்.
* எவனுக்கு பிரஹ்மானுபவம் வந்து அங்கேயே நிலைத்து விடுகிறானோ அவன் விடுதிப் பிராரத்தமுடையவன்.




## 14 வது நாள்

* சங்கல்பத்தை விட்டவன் தத்துவ ஞானி.
* விரதானுஷ்டானமில்லாதிருப்பது பிராம்மணனுக்கு தோஷம் உத்ஸாகத் தோடிருப்பது ஸ்திரீகளுக்குத் தோஷம். ஸ்திரீ சங்கமம் சந்நியாசிகளுக்குத் தோஷம்.

## 15 வது நாள்

* பிரமலோகம் வைகுண்டம் கைலாசம் யமலோகம் தேவலோகம் நட்சத்திர வுலகம் பிரபஞ்சத் தோற்றம் குரு சிஷ்யன் வேதம் சாஸ்திரம் நன்மை தீமை இவைகளாகத் தோற்றுவிப்பது மனது.
* தேவயானா மார்க்கத்திலிருப்பவர் விஷ்ணு; பிதுர்யானா மார்க்கத்திலிருப்பவர் சூர்யன்; இரண்டு மார்க்கத்தையுந் தாண்டினவர்கள் ஞானிகள்.




## 16 வது நாள்

* வித்தைக்குச் சமமான நேத்திரமில்லை. சத்தியத்திற்கு நிகரான தவமில்லை. ஆசைக்கு நிகரான துக்கமில்லை. தியாகத்திற்குச் சரியான சுகமில்லை.
* ஒன்றுமில்லாதிருத்தல் மிகுந்த சந்தோஷமடையாமை சபல கர்மமின்றியிருத்தல் ஒன்றையும் பிரார்த்தியாதிருத்தல் ஒன்றிலும் நியமமுமின்றியிருத்தல் இவைகள் பிரஹ்ம ஞானியின் லக்ஷணம்.

## 17 வது நாள்

* காற்றடிக்கும்போது வேதாத்தியயனமோ வேதாந்திர சாஸ்திர படனமோ செய்யக் கூடாது.
* பிரஹ்மத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பவனுக்கு மேல் முகமாகச் செல்லக் கூடிய ஒவ்வொரு படிகளும் தானே தோன்ற ஆரம்பிக்கின்றன.




## 18 வது நாள்

* வேத சாஸ்திரங்கள் பாஷ்யங்கள் இவைளைக் கற்றும் பிரஹ்ம ஞானி களைக் கண்டு சம்பாஷித்தும் தேச யாத்திரை செய்தும் உண்மையான சந்தேகந் தீரமாட்டாது.
* ஜகத் பிரீதியில்லாத சகஜ நிஷ்டையில் நிலைத்த ஞானிகளும் அந்த நிலை யிலிருந்து கீழிறங்குவார்களானால் அவர்களைப் பிரஹ்ம சக்திகளான மாயையின் கணங்கள் பற்றிக் கொள்ளுகின்றன.

## 19 வது நாள்


* உடலிருக்கிற போதே நேரே மீளாத முக்தியை விரும்புகிற முமூட்சுக்கள் இந்த மஹத் சாஸ்திரத்தை அஷ்டீஸ்வர யோக நியமப்படி அனுஷ்டிப்பார்கள்.
* ஆயிரம் அஸ்வமேதங்களும் நூறு வாஜபேயங்களும் லட்சம் ராஜ சூயங் களும் யோக மஹிமையின் வீசத்தின் ஒரு பாகங் கூடக் கிடையாது.



## 20 வது நாள்

* தீவிர புத்தியுள்ளவன் தன் சரீரத்தாலும் மற்ற யாராலும் ஒன்றையும் எதிர் பார்க்கக் கூடாது.
* சுகருக்கு இருபத்தைந்தாவது வயதில் வியாசர் உபதேசித்திருக்கிறார்.
* உலக போகங்களைத் தள்ளிவிட்டுச் சரீரத்தினாலும் மனத்தினாலும் அடையப்படாதது போன்ற தவத்தைச் செய்கிறவனால் கிடைக்காத தொன்றுமேயில்லை.

## 21 வது நாள்



* தபோவனங்களிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்து உலக காம போகங்களை அறியாமல் மரணமடைந்தவர்களுடைய தர்மமானது மிகவும் அற்பமென்று பீஷ்மர் சொல்லுகிறார்.
* தான் ஒருவனேயென்றும் தனக்கு ஒருவரும் சொந்தமுடையவர்களில்லையென்றும் நினைக்கிறவன் ஆத்ம பலத்தை அடைகிறான்.

## 22 வது நாள்

* யோகி பிரணவ ஜெபம் தியானம் செய்ய வேண்டும்.
* இந்திரியங்களை அடக்குவதினாலேயே தவம் விருத்தியாகிறது.
* பகிர்முக திருஷ்டியுடையவர்களால் புகழப்படுவதைக் காட்டிலும் அந்தர்முக திருஷ்டியுள்ளவர்களால் நிந்திக்கப்படுவது விசேஷம்.

## 23 வது நாள்



* வெளி வேஷங்களைப் போட்டுக் கொண்டு ஏகாக்கிர புத்தியின்றிச் செய்யப்படுகிற யோகங்களையும் பகிர்முக நிஷ்டைகளையும் பார்த்துத் தேவர்களும் மனோ நிலைமையை அறிந்தவர்களும் நகைக்கிறார்கள்.
* முக்குணங்களை இல்லாமற் செய்ய வேண்டுமானால் மனத்தை இல்லாமற் செய்யவேண்டும்.

## 24 வது நாள்

* பிரசித்த ஞானியாய் பிரபஞ்சத்தை நோக்கிப் புறப்படுவது தெய்வீக ஆஞ்ஞாரூப அதிகார அவதார புருஷர்களுக்கன்றி மற்றையோர்களுக்கு ஆபத்தை விளைவித்து விடும்.
* உண்மையான வைதீக மதத்திற்கும் சாங்கிய மதத்திற்கும் மோட்ச வாதத்தில் வித்தியாசமில்லை. ஞானத்திலும் அதை அடைகிற மார்க்கங்களிலும் சிறிது வித்தியாசமிருக்கிறது.

## 25 வது நாள்

* சாங்கிய ஞான புருஷர்கள் சூர்ய மண்டல மார்க்கமாக மேற் சென்று ஜீவ சுபாவ மார்க்கத்தை விட்டுச் சத்துவ குண நாராயண ஸ்வரூபத்தின் வழி யாய்ப் பரமாத்மாவை அடைகிறார்கள்.
* உலக வஸ்துக்கள் முதல் ஹிரண்யகர்ப்பன் வரையுள்ள துக்கங்களை நன்றாக விசாரித்தறிந்தவன் பிரஹ்மத்தை அறிய இச்சிக்கிறான்.

## 26 வது நாள்

* விதேக முக்தி காலத்திலன்றி ஜீவன் முக்தியில் கூட உண்மையான சாந்தியை அடைய முடியாது.
* பாஷா ஞானத்தை விரும்புகிறவர்கள் பதவி ஞானத்தையும் இச்சிக் கிறார்கள்.

## 27 வது நாள்

* யாதொரு தடையுமின்றி க்ஷேமத்தோடு யோக மார்க்கத்தில் யாரும் செல்ல முடியாது.
* பிரபஞ்சக் குருடர்களைக் காட்டிலும் பிறவிக் குருடர்கள் விசேஷம்.
* ஒருவன் செய்கிற பாப புண்ணிய கருமங்கள் அன்றே ஆகாமியமாக மாறி இருபத்திரண்டாவது வருஷத்தில் சஞ்சிதமாக விளைந்து அறுபத்தாறாவது வருஷத்துக் கடைசியில் அனுபவ பிராரத்தமாக முடிகிறது.

## 28 வது நாள்

* ஜாக்கிர சொப்பன புருஷர்களைப் பலத்தாலிழுத்து அவர்களைச் சுழுப்தி புருஷனிலாக்கி மூவரையும் துரிய புருஷனிடத்தில் விட்டு இந்நால்வரையும் அதீத புருஷனிடத்து அழுத்தி விடுதல் துரிய பிராணாயாமம்.

## 29 வது நாள்

* உடலை வசப்படுத்திக் கொண்டு உடலைக் கருமேந்திரியத்தி லடக்கிக் கருமேந்திரியத்தை ஞானேந்திரியத்தி லடக்கி அதைப் பிராணனி லடக்கி பிராணனை மனத்தி லடக்கி மனத்தைப் பிராக்ஞனிடத்திலும் பிராக்ஞனை ஜீவனிடத்திலு மடக்கி ஜீவனைப் பிரத்ய காத்மாவிற் சேர்த்துச் சைதன்யத்திற் கலந்து விடுவது சகஸ்திராப்பிரமேய சகஜ யோகம்.

## 30 வது நாள்

* யோகியானவன் யோக மஹிமையால் விஷ்ணு, பிரம்மா சிவன் முதலிய மூர்த்தித் தன்மைகளையும் அடைந்து சிருஷ்டிக் கிரமங்களையும் செய்கிறான்.
* ஆனந்தம் பிரீதி கெட்ட விஷயத்தில் நடுக்கம் மனத்தின் பிரகாசம் புண்ணியத்தையே நாடுதல் சந்தோஷம் சிரத்தை நேராயிருத்தல் தியாகத்தில் நாட்டம் ஐஸ்வர்யம் இவைகள் சத்துவ குண காரியங்கள்.




## 31 வது நாள்

* ஆஸ்திகத் தன்மை கொடை ஈயாதவனாயிறாமை சுகதுக்கங்களைச் சேவித்தல் பேதப்படுத்தல் புருஷாகாரம் காமம் குரோதம் மதம் கர்வத்தினாலும் துவேஷத்தினாலுமுண்டாகிற அதிகப் பேச்சு இவைகள் ரஜோ குண காரியங்கள்.
* தாமதம் மோஹம் மஹா மோஹம் தாமிஸ்ரம் அந்ததாமிஸ்வரம் நித்திரை சோம்பல் அஜாக்ரதை போகம் இவைகள் தாமத குண காரியங்கள்.


## 32 வது நாள்

* கெட்ட குணங்களுண்டானபோது சத்துவ குணமானது ஒரு மூலையில் பதுங்கி ஒதுங்கிப் படுத்துக் கொள்ளுகிறது.
* பிராணிகள் ஒன்றையொன்று பட்சிப்பதைக் கண்டு அறிவுள்ளவன் உலகத்தில் வசிக்க கஷ்டப்படுகிறான்.
* சாங்கிய மதத்திற் பிரவேசித்து ஞானம் பூர்த்தியாகாவிடில் தேவர்களுக்கு அதிகாரியாயிருந்து விட்டு மீண்டும் பூமியில் பிறக்கிறார்கள்.



## 33 வது நாள்

* பாபத்தை அடியோடு விட்டுவிடுவதுபோல புண்ணியத்தையும் விட்டுவிட வேண்டுமென்று சாங்கிய மதம் கூறுகிறது.
* சகல மதங்களுக்கும் உலகங்களுக்கும் பொதுவான கடவுள் மீறுகிற மதங் களையும் உலகங்களையும் தேவர்களையும் யாரையும் அப்போதைக்கப்போது அடக்கிக் கொண்டு வருகிறார்.




## 34 வது நாள்

* யோகியானவன் யாதொரு சம்பந்தமுமின்றிய ஆத்மாவைப் பார்க்கும்போது பேசுவதற்கு வெட்கப்படுகிறான்.
* தீர்த்த யாத்திரை தேச யாத்திரை மூர்த்தி தரிசனம் உத்ஸவம் ஜனக் கூட்டம் பிரசங்கம் பலருக்குப் போதித்தல் பேசுதல் அறுசுவை யுணவு இவைகளை யோகி விட்டுவிட வேண்டும்.

## 35 வது நாள்

* ஆத்மாவையன்றிய அனாத்ம குணங்களைக் கொண்டே மனிதன் நினைக்க வும் பேசவும் வேண்டியிருக்கிறது.
* ஜீவன் தேவத் தன்மை மனிதத் தன்மை நரகத் தன்மை இவைகளை முறையே சத்துவம் ராஜசம் தாமசம் இக்குணங்களால் மாறி மாறி அடைகிறான். மூன்றையும் விட்டவன் பிரகிருதியையும் அடைகிறான்.



## 36 வது நாள்

* உலகத்திலுள்ள அஞ்ஞான குருடர்கள் பற்பல யாத்திரைகளினாலும் குடும்பக் கஷ்டத்தினாலும் ஆடையாபரணச் சேர்க்கையாலும் ஸ்நான பான ஆகாராதிகளாலும் விரதாதிப் பிடிவாதங்களாலும் பசி முதலிய வியாதி களாலும் வேத விருத்தமான மதங்களாலும் நல்லதும் கெட்டதுமான செய்கை களாலும் நன்மை தீமையான ஸ்தானங்களாலும் வருணாஸ்ரம தர்மங்களின் பிடிவாதத்தாலும் கஷ்டத்தை அடைகிறார்கள்.

## 37 வது நாள்

* யாதொரு விஷயத்திலும் ஆசையற்றவனை ஒரு அடையாளமுமில்லாத பிரகிருதியானது ஒன்றுஞ் செய்ய முடிகிறதில்லை.
* அறிவின்மையாலும் அஞ்ஞானிகளின் சகவாசத்தினாலும் மனிதன் பல பிறப்பையடைந்து மடிகிறான்.
* விஷய சுகத்தில் ஆசையுள்ளவன் காட்டிலிருந்தும் நாட்டில் உள்ளவனாகிறான்.

## 38 வது நாள்

* சாத்வீக தைரியமில்லாமல் தர்மஞ் செய்கிறதில் பலனுண்டாகிறதில்லை.
* வேதங்களையும் சாஸ்திரங்களையும் படிப்பதில் மாத்திரம் பற்றுதலுள்ளவனும் அதன் அர்த்தத்தினுண்மையை அறியாதவனுமாயிருப்பவனுடைய படிப்பு வீண்.
* தேவர்களெல்லாம் பிதுர்க்களுடைய புத்திரர்கள்.

## 39 வது நாள்


* ஆத்ம தரிசனமின்றிப் பிராண நிரோதம் செய்வதால் வாத ரோகம் உண்டாகிறது.
* பிராண நிரோதம் சகுண யோகம் மன நிரோதம் நிர்க்குண யோகம்.
* பிராம்மணன் சத்திரியன் வைஸ்யன் சூத்ரன் நீசன் ஸ்திரீ யாராயிருந்தாலும் பூரண சிரத்தை மட்டுமுடையவன் ஞானத்தைப் பெற்று விடுகிறான்.

## 40 வது நாள்

* எந்த ஆஸ்ரமம் எந்த வருணமாயிருந்தாலும் பிரஹ்ம ஞானியாயிருந்தால் உபதேசம் பெற்றுக் கொள்ளலாம்.
* அங்கங்கள் உபாங்கங்களுடன் வேதத்தைத் தடையின்றி அத்தியயனஞ் செய்தும் அதன் அர்த்தங்களை உள்ளவாறறிந்தும் அறிய வேண்டியதை அறியாதவன் வேதமென்னும் பாரத்தை சுமந்தவனாகிறான்.

## 41 வது நாள்

* எல்லா இந்திரியங்களையும் மனத்தினால் ஜெயித்துச் சமாதி பெற்ற ஆரூட யோகத்தில் நிலைத்து நின்றவனிடம் மரணம் அணுகாது.
* அருந்ததீ நட்சத்திரமும் துருவ நட்சத்திரமும் ஒருபோதும் தெரியாதிருந்தாலும் பிறருடைய கண்களில் தன் சாயை தோன்றாதிருந்தாலும் ஒரு வருஷ காலத்தில் மரணமுண்டாகும்.




## 42 வது நாள்

* ஞானத்தில் சாங்கியர்களும் பலத்தில் யோகிகளும் சமர்த்தர்கள்.
* உண்மை ஞானமுடையவனுக்கு மறைவான விவகாரமே கிடையாது.
* மலையினுச்சியில் ஸ்வர்ண மயமான விருட்சங்களைப் பார்க்கிறவன் சீக்கிரத்தில் மரணமடைவான்.

## 43 வது நாள்

* யோகத்தையும் சாங்கியத்தையும் ஒன்றாகப் பார்க்கிறவன் உண்மை தெரிந்தவன்.
* மனம் ஒன்று ஒழிவடைந்தால் சகல தத்துவங்களும் ஒழிவடைகின்றன.
* வஞ்சகமின்றி உண்மையாக ஒருவன் கேட்டால் தெரிந்ததை மறையாமல் கூற வேண்டும்.



## 44 வது நாள்

* அழகிய வஸ்திரம் வாசனைத் திரவியம் கேளிக்கை படுக்கை பகல் நித்திரை நடன வாத்திய கானம் இவைகளில் இச்சையுண்டானபோது தமோ குணம் வந்ததென்றறிய வேண்டும்.
* மிருத்யுவுக்கு அஞ்சுகிறவன் தெய்வத்தையாவது குருவையாவது அடைய வேண்டும்.

## 45 வது நாள்

* யோகிகள் வியக்தம் வரையிலும் சாங்கியர்கள் அவ்யக்தம் வரையிலும் செல்லுகிறார்கள்.
* அவ்யக்தத்திலிருந்து வியக்த தத்துவமான ஈஸ்வரன் உண்டானான்.
* ஞானமும் கர்மமும் வேறு வேறாக இருக்கிறதென்றும் இருக்க வேண்டுமென்றும் கபிலாசாரியார் கூறுகிறார்.

## 46 வது நாள்

* பகிரங்கத்தில் ஸ்ரீராமனையும் அந்தரங்கத்தில் ஸ்ரீ கிருஷ்ணனையும் ஒத்திருக்க வேண்டும்.
* மனம் வாக்கு பிராணன் முதலிய கரணங்களால் காணக் கூடாதவர் கடவுள்.
* பாபமுள்ளவனை ஸ்ரீராகவரும் பாபம் மட்டுமில்லாதவனை ஹயக்ரீவரும் புண்ணிய மட்டுமுடையவனை மஹேஸ்வரரும் புண்ணியத்தையும் விட்டவனை ஸ்ரீ கண்ணபிரானும் அங்கீகரித்திருக்கிறார்கள்.


## 47 வது நாள்

* உண்மையான யதிகளுக்கும் அரசர்களுக்கும் தண்டமும் செங்கோலும் பந்தத்தைக் கொடுக்கிறது.
* பிரஹ்மத்திலிருந்துண்டானவர்களெல்லோரும் பிராம்மணர்களென்று யாக்ஞவல்கியர் கூறுகிறார்.
* பிரஹ்ம ஞான நிஷ்டையுடையவனெவனோ அவன் உண்மையான பிராம்மணன். எவனாயிருந்தாலும் பிரஹ்ம நிஷ்டையையுடையவனுக்கு மோக்ஷமுண்டென்று வேதம் கூறுகிறது.

## 48 வது நாள்

* பிராகிருதத்திலுண்டாயிருக்கிற தர்மாதர்மங்களை விட்டவன் யதார்த்தமான யதி.
* காஷாயந் தரித்துக் கொள்ளல் முண்டனஞ் செய்து கொள்ளல் மூன்று தண்டஞ் சேர்த்துத் தரித்தல் கமண்டலம் தோல் இவைகள் தியாக மார்க்கத் திற்குரிய அடையாளங்களேயன்றி ஞான காரணமாக மாட்டாது.

## 49 வது நாள்




* கர்மேந்திரியங்களால் கிரகிக்க முடியாததும் ஞானேந்திரியங்களால் அறிய முடியாததும் புத்தியினால் கோசரிக்க முடியாததுமானது அவ்யக்தம்.
* உலக முக்தியை அடைந்தபின் உலகாதீத முக்தியில் இச்சையுண்டாகிறது.
* பெரிய மேதாவிகளும் சித்தர்களும் யோகிகளும் பண்டிதர்களும் தேவர்களும் கண்டு மயங்காத பெரிய மயக்கத்தில் மஹான்கள் மயங்கிக் கிடக்கிறார்கள்.

## 50 வது நாள்

* பாரமார்த்தீகம் வியாவ காரிகம் இரண்டிற்கும் ஒன்றைவிட்டு ஒன்றான ஒரு சம்பந்தமுண்டு.
* பிறப்பு இறப்பு என்னும் பெருஞ் சுழலுக்கப்பால் பெம்மானது வாசஸ்தலமிருக்கிறது.
* வெளித் தோற்றமும் உள் தோற்றமும் ஒன்றுபோல் அனுபவிக்கிறவன் தியான யோகத்தின் முடிவு கண்டவன்.

## 51 வது நாள்



* ஸ்தூல சரீரத்தின் தாது லாபம் சுக்ல சுரோணித பரிசுத்தம் இவற்றைத் தருவதும் உஷ்ண ரோகத்தைப் போக்குவதுமான சக்தி வாய்ந்ததில் வாழைப்பூ போல வேறு வஸ்து இல்லை.
* ஹிருதய க்ஷேமத்தை அடைவதற்குமுன் உடம்பின் நோயின்மையான க்ஷேமத்தை அடைந்திருக்க வேண்டும்.

## 52 வது நாள்

* சூட்சும அறிவுள்ளவர்கள் தன்னை அறிவதிலும் ஸ்தூல அறிவுள்ளவர்கள் தனக்கன்னியமானவைகளை அறிவதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.
* ஒற்றுமையும் ஒற்றுமையின்மையும் பொருந்திய காலத்தில் உத்தம புருஷர்கள் அவதரிக்கிறார்கள்.
* எப்போது மாறாத வைராக்கியமுண்டாகிறதோ அப்போதே சந்நியாஸம் செய்து கொள்ளலாம்.

## 53 வது நாள்

* அவஸ்யமாகச் செய்து தீர வேண்டிய கர்மானுஷ்டான காலங்களில் அவற்றிலும் விசேஷ காரியத்தில் பிரவேசித்திருந்தால் அந்த அவஸ்ய கர்மங்களை நித்திய மஹரிஷிகள் செய்து முடித்து விடுகிறார்கள்.
* தீரமில்லாத எண்ணங்களை உடையவர்களுக்குத் தீரமான வசனங்களே அடையாளம்.

## 54 வது நாள்

* கர்மானுஷ்டானமே பிரதானமென்றும் கர்ம பலப் பிரயோஜனமே முக்கிய மென்றும் கர்ம பலத்யாகமே விசேஷமென்றும் கர்ம சூத்ர நிராசையே உண்மையென்றும் கர்ம பலப்பிரதான ஆக்ஞாரூப யீஸ்வர கைங்கரியமே வாஸ்தவ மென்றும் நிச்சயித்திருக்கிற கூட்டத்தார்கள் ஆஸ்தீக வைதீக சநாதன உண்மை மதத்தில் சஞ்சாரஞ் செய்கிறார்கள்.
* வேத மார்க்கத்திற்கு விரோதிகளும் குதர்க்க வாதிகளும் சுதந்தரமிழந்தவர்களும் ஸ்வாதீன புத்தியில்லாதவர்களும் தாசி விடர்களும் பரதாரகமனர்களும் மதுமாம்ஸ பட்சணிகளும் ஆசுர சம்பத்தை யுடையவர்களும் மஹான்களை அவரது வாக்கியங்களையும் தூஷிப்பார்கள்.

## 55 வது நாள்


* பிரஹ்ம ஞானத்திற்குத் தடையாயுள்ள காரியங்களில் பிரவேசித்தும் தடை யென்பதறியாதிருந்தால் அது ஒரு பெருந்தடையான பூதப் பிரதிபந்தம் என்ற தெரிந்து கொள்ள வேண்டும்.
* கெர்ப்ப கால முதல் வேத மந்திர சமஸ்கார பூர்வகமாக உண்டான சரீரம் பரிசுத்தமானது. அவர்கள் இரு பிறப்பாளர்கள்.

## 56 வது நாள்

* பெரிய ஞான சாஸ்திரங்களைக் கற்றுப் பெரிய ஞானி யென்று பெரிய பெரிய பெயரெடுப்பதைக் காட்டிலும் சிறிய மனத்தைச் சிறிது காலம் பர வஸ்துவில் நிறுத்தி வைப்பது மஹா விசேஷம்.
* பெரிய குலத்தில் பிறந்தவனும் லஜ்ஜையுள்ளவனும் தீர்க்காலோசனை யுள்ளவனாயிருப்பவன் நல்லதானாலும் கெட்டதானாலும் ரகஸ்யத்திற் செய்ததை வெளியிற் சொல்லக் கூடாது.

## 57 வது நாள்

* உபதேசிக்குங் காலத்தில் சொல்லுகிறவன் கேட்கிறவன் சொல்லப்படுகிற வாக்கியம் இம்மூன்றும் முழுதும் ஒத்திருந்தால் அதனுடைய அர்த்தம் பிரகாசிக்கிறது.
* சரீரப் பிராம்மணர்கள் மனப் பிராம்மணர்கள் குணப் பிராம்மணர்கள் ஞானப் பிராம்மணர்கள் பிரம்மப் பிராம்மணர்கள் என்று ஐந்து விதமான பிராம்மணர் களிருக்கிறார்கள். இவர்கள் முறையே படிப்படியாய் உயர்நதவர்கள்.



## 58 வது நாள்

* இன்ன படியென்று கண்டுபிடித்தறிய முடியாததும் ஒரே படியா யிராததுவு மான ஞான மார்க்கமானது அவரவர்கள் பக்குவத்திற்கும் புண்ணியத்திற்கும் தக்கவாறு மாறுபடுகின்றன.
* தான் மேன்மை பெறுவதற்காகப் பிறரைத் தாழ்வு படுத்தக் கூடாது.
* பிராம்மண ஜாதிகளில் நீசர்களும் நீசர்களில் பிராம்மண ஜாதியுமிருக்கிறது.

## 59 வது நாள்

* வேதத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்கும் அசத்திய புத்தியுள்ளவர்களுக்கும் ரகஸ்யமாக வஞ்சிக்கிறவர்களுக்கும் மனந் தளர்ந்தவர்களுக்கும் கோண லான புத்தியுள்ளவர்களுக்கும் தான் பண்டிதனென்று பிறரை இகழ்பவனுக் கும் யாதொரு உபதேசமும் செய்யக் கூடாது.



## 60 வது நாள்

* சிரத்தை தைரியம் முதலிய நற்குணங்களையுடையவன் பிறரைக் குற்றஞ் சொல்லாதவன் சுத்த யோகமுடையவன் அறிவுடையவன் குரு சொற்படி நடக்கிறவன் சுக துக்கங்களைக் சுகிக்கிறவன், ஹிதன், சுத்தன், சீலன் விகித கர்மத்தில் பிரியமுடையவன் விசேஷமாக வாதஞ் செய்யாதவன் வேத உண்மை தெரிந்தவன் சொன்னதை அறிகிறவன் அடக்கம் பொறுமை உதாரம் தியாக புத்தி இவைகளையுடையவன் ஓரிடத்தில் மனதை நிறுத்துவதில் சமர்த்தன் இவர்களுக்கு உபதேசிக்கலாம்.

## 61 வது நாள்

* உலக சிருஷ்டிகளையும் தத்துவ சிருஷ்டிகளையும் அதன் லட்சணங்களையும் உற்பத்திக் கிரமங்களையும் உத்தமமான ஞானப்பியாசிகள் கவனிக்க வேண்டியதில்லை.
* தன்னை விட்டு மற்றைய இடங்களில் கடவுளைக் காண விரும்புகிறவன் போல் மூடன் உலகிலில்லை.

## 62 வது நாள்

* வேறுபட்ட எண்ணமுடையவர்கள் வியாதியால் மெலிந்தவர்கள் மனதில் ஆசையில்லாதவர்கள் விரதம் பூண்டவர்கள் கெர்ப்பமுடையவர்கள் ரஜஸ்வலையானவர்கள் இந்த ஆறு ஸ்திரீகளையும் எந்தப் புருஷர்களும் சேரக் கூடாது.
* சூரிய கலையில் அக்னிச் சரம் ஓடும்போது பாய்கிற ரேதஸ்ஸினால் உத்தம மான ஞானி உற்பத்தியாகிறான்.
* பரப் பிரஹ்ம பரவாசுதேவ ஶ்ரீமந் நாராயண சர்வேஸ்வர சகுண மூர்த்தியை உத்தமமான சாத்வீக பக்தர்கள் சூட்சும நாதபிந்து தேஜோமய சரீரத்துடன் ஸ்வேத தீபம் சென்று தரிசித்துத் திரும்புகிறார்கள்.

## 63 வது நாள்

* எவன் உலகத்தை வேறாகவும் அன்னியமாகவும் பார்க்கிறானோ அவன் மிருத்யுவை அடைகிறான்.
* உண்மையாக ஞான யோக மோட்ச மார்க்கங்களிற் செல்லப்பட்டவர்கள் ஸ்துதி நிந்தை இவைகளை அற்பமேனும் கருத மாட்டார்கள்.
* இச்சையுண்டாகிற இடமும் நினைப்பு உதயமாகிற ஸ்தானமும் ஒரே இடமாயில்லாதிருந்தாலும் ஒரே சாதனத்தால் நீக்கி விடலாம்.

## 64 வது நாள்

* உலகங்களிலுள்ள எல்லா மதத்திற்கும் பூமிகளுக்கும் பொதுவான ஓர் குரு தெய்வம் வேதம் ஞானம் இந்நான்கும் இருக்கிறது.
* உத்தமமான ஞான யோகத்தைக் கண்டு கொண்டவன் உறுதியான எண்ணங்களையும் வசனங்களையும் நிறுத்தி விடுகிறான்.
* பெண்ணையும் பொன்னையுங் கண்டு எவன் மனது நடுநடுங்கிறதோ அவன் அபூர்வ பூர்வ புண்ணிய பாக்கியசாலி.

## 65 வது நாள்

* புதிதான வார்த்தைகளையும் விஷயங்களையும் சொல்லி மனதை மயக்குவது போதிப்பவர்களுக்கு லட்சணமல்ல.
* யோக ஞான மார்க்கங்கள் ஒன்றை உத்தேசித்து அப்பியாசம் செய்து கொண்டு போகும்போது உத்தேசமல்லாத மற்றோரனுபவம் வெளியாகிறது.
* தேவ மனுஷ்யர்களுடைய மனமானது ஒரே படியாயிறாதானபடியால் ஒருவனை முன்னுள்ள நிலைமைபோல் எப்போதும் நினைத்து விடக் கூடாது.

## 66 வது நாள்

* யாதொரு விரிப்புமின்றிப் பூமியிற் சயனித்துக் கொள்ளுகின்றவர்களுடைய கெட்ட குணங்களுள்ள தமோ குண அசுத்த ரத்தங்களையும் மனத்தின் விகார குண சேஷ்டைகளையும் பூமியின் அபூர்வ சக்திகள் ஆகர்ஷித்துக் கொள்ளுகின்றன.
* உத்தமமான சத்துவ குண மார்க்கத்தின்படியும் வேதத்தின் தாத்பரியத்தை அனுசரித்தும் மோட்ச மார்க்கத்திற்கு விரோதமில்லாதாயுமுள்ள மஹரிஷி களின் கொள்கைகளை யொட்டியே எல்லாவிதப் பிரவிர்த்தியையும் செய்ய வேண்டும்.

## 67 வது நாள்

* புத்திமானானவன் உலக விஷயங்களில் எதையும் எந்தப் படியும் நிச்சயித்து விடக்கூடாது. நிச்சயத்திற்கு விரோதம் வந்தால் மனது சலனமடையும்.
* சாளக்கிராமம் சிவலிங்கம் இவைகளைப் பூஜை செய்து புத்திசாலி பிரஹ்மத்தைக் காண இச்சிக்க மாட்டான்.

## 68 வது நாள்

* கர்மானுஷ்டானம் கர்ம நிஷ்டை யோகாப்பியாசம் யோக நிஷ்டை மந்திராப்பியாசம் மந்திர நிஷ்டை ஞானாப்பியாசம் ஞான நிஷ்டை தியானம் பாராயணம் மந்திர சமாதி மந்திர ஜெபம் வேதாத்தியயனம் இவைகளை நடந்து கொண்டும் நின்று கொண்டும் சாய்ந்து கொண்டும் படுத்துக் கொண்டும் பூமிக்குமேல் உயரமான இடத்திலிருந்து கொண்டும் செய்யலாகாது.

## 69 வது நாள்

* பேராசையினால் அதிக ஆகாரமுண்பவர்களையும் தன்னுடைய ஆஸ்ரம காரியங்களில் உறுதியில்லாத சந்நியாசிகளையும் ஒழுங்காகக் குடிகளைப் பாதுகாப்பதைவிட்ட அரசனையும் சொந்த மனைவியை விட்டுப் பர தாரத்தினிடமும் தாசி வேசிகளிடத்திலும் சென்றவர்களையும் எம தருமராஜன் தன்னுடைய சொந்த உலகத்திற்கு அழைத்துக் கொண்டு போகிறான்.
* பூலோகம் புண்ணிய கருமம் செய்வதற்குத் தகுந்த இடம், ஸ்வர்க்கம் போகம் அனுபவிப்பதற்குத் தகுந்த இடம்.

## 70 வது நாள்

* ஒரே ஹிருதயமே, சங்கல்பம் புத்தி மனம் அகங்காரம் சித்தம் உள்ளம் இவைகளாகி அகத்திலும் புறத்திலும் உலாவுகின்றன.
* சாதுவல்லாதவனோடு பழகினால் மூன்று நாள் உபவாசமிருக்க வேண்டும்.
* ஒன்றிலும் சேர்க்கையற்றிருப்பவனுக்குத் தூக்கமேயில்லை.
* பசு குதிரை ஆடு முதலியவைகளை ஹிம்சை செய்யப்படுகிற யாகத்தை யஜுர் வேதம் பலமாகத் தடுத்திருக்கிறது.

## 71 வது நாள்

* ஒரு முகூர்த்த காலம் எவன் சர்வ இந்திரியங்களையும் நிறுத்தி ஆத்ம விசாரணை செய்கிறானோ அவன் ஜென்ம முடிவில் முக்தனாகிறான்.
* அதிக ரகசியமான விஷயங்களை வெளியில் எழுத ஆரம்பித்தால் பூரண மாகாத மனதுடையவர்கள் மயங்குவார்களென்று சுருக்குகிறேன்.
* மனோ சங்கல்ப பாவனா முதிர்ச்சியினால் உருவத் தோற்றமும் அதன் அன்னியமான வரங்களுமுண்டாகின்றன.

## 72 வது நாள்

* கண்களிலிருந்து கண்ணீர் விடுகிற பக்தி பயங்காளித்தனமுடையது.
* ஸ்தூல சரீரத்திலுள்ள நூற்றெட்டு நாடிகளில் நடுவிலுள்ள பெரிய நாடியின் வழியாகச் செல்லுகிற ஜீவன் ஜென்மிக்கிறதில்லை.
* சர்வ ஜீவர்களும் மெல்ல மெல்லப் பரம புருஷனை அதாவது பரமாத்மாவை நோக்கிச் சென்ற வண்ணமாயிருக்கின்றனர்.
* யாதொரு முயற்சியுமின்றித் திடீரென்று நிருவிகல்ப சமாதி வந்து விடுவது ஆதீத யோகம்.

## 73 வது நாள்

* உலக வஸ்துக்களைக் கண்டபடி உபயோகிப்பவர்கள் பரமேஸ்வர தண்டனைக்கு உட்படுகிறார்கள்.
* சுழுப்தி பிராக்ஞனுக்கும் துரிய கூடஸ்தனுக்கும் அன்னியமற்ற சம்பந்தமுண்டு.

## 74 வது நாள்

* ஏழாவது உப்பரிக்கையின் மேலிருந்து கொண்டு கீழிறங்காமல் அழகிய ஹம்ஸதூளிகா மஞ்சத்தின் மீது வசித்துப் பருவமுடைய ரம்யமான பிரபுத் தன்மை வாய்ந்த பால்யப் பெண்களோடு விளையாடிக் கொண்டு அமிர்த பானம் பண்ணி அளவற்ற சைன்யம் யுத்த வீரர்கள் இரத்தினக் குவியல்கள் திரவ்ய மூட்டைகள் இவைகளையுடைய அரசர்களிலும் திருப்தியில்லாத தரித்திரனுண்டு. நாளைக்கும் அடுத்த வேளைக்கும் ஆகாரமின்றி உடுக்க உடையின்றிப் படுக்கப் பாயின்றி இருக்க இடமின்றி பிட்சையேற்றுண்டு சஞ்சரிக்கும் ஏழைகளிலும் திருப்தி கொண்ட தன வந்தனுண்டு.

## 75 வது நாள்

* உலகத்தை ஒரு குடையின் கீழ் அரசாட்சி செய்கிற கீர்த்தி வாய்ந்த சக்ரவர்த்திக்கும் எவ்வளவு அளவில்லாத தான்யங்களிருந்தபோதிலும் தன் வயிற்று அளவுக்கே உபயோகிக்க முடிகிறது. பெரிய விஸ்தாரமான அரண்மனையிருந்தும் ஒரே கட்டடமும் அதிலும் ஓர் அறையும் அதிலும் ஓர் சப்ரமஞ்ச ஹம்ஸதூளிகா மஞ்சமும் மெத்தையும் கிடைக்கிறது. அதில் பாதி ராஜ ஸ்திரீ பிரித்துக் கொள்ளுகிறாள். எத்தனை குதிரை ரதம் யானை இருந்தாலும் தனக்கு உபயோகமுள்ளது ஒவ்வொன்றே. பெயர் மாத்திரம் உலகம் முழுமையும் ஆளுகிற அரசன்.

## 76 வது நாள்

* யாரார் எத்தகைய அற்புதங்களைச் செய்திருந்தபோதிலும் செய்தாலும் அவைகள் சர்வேஸ்வரரால் செய்யப்பட்டதென்றெண்ண வேண்டும்.
* ஆத்ம ஞானமில்லாத ஒரு காரணத்தினால் ஒருவரையொருவர் ஹிம்சிக்கவும் வாழ்த்தவும் யாசிக்கவும் கொடுக்கவும் தூஷிக்கவும் பூசிக்கவும் செய்கிறார்கள்.
* மூன்றாசைகளை வெறுத்து அன்ன ஆகாரமின்றி ஆரண்யத்தில் தவஞ் செய்து கொண்டிருப்பவர்களிலும் ஸ்வர்க்க போக ஆசையுடைவர்களுமிருக்கிறார்கள்.

## 77 வது நாள்

* சாஸ்திரங்களாலும் வேதங்களாலும் சில சந்தேகங்களும் குரு உபதேசத்தால் சில சந்தேகங்களும் ரிஷிகளின் அனுஷ்டானங்களால் சில சந்தேகங்களும் தீருகின்றன. பிரஹ்மானுபவ காலத்தில் சகல சந்தேகங்களும் தீருகின்றன.
* அடைந்த வஸ்துவை அடையவில்லை யென்றெண்ணுவது அஞ்ஞானமென்றும் அடைந்து விட்டோமென்று எண்ணுவது ஞானமென்றும் அடைந்ததையும் அடையாததையும் விட்டு விடுவதே மோட்சமென்றும் ஏகாத்மாவாதிகள் கூறுகிறார்கள்.

## 78 வது நாள்

* ஈஸ்வரன் மாயை பிரகிருதி ஜீவன் பஞ்ச மூர்த்திகள் இவர்களைப் பிரஹ்மம் போல் அனாதியாக சுருதி கூறவில்லை.
* சர்வ கதிகளின் சொரூபமும் தெரிந்து கொண்டவர்கள் ஒரு கதிகளிலும் செல்லாமல் ஸ்வகதியில் நிலைத்து விடுகிறார்கள்.
* எவன் மனது துரியானுபவத்திற் சென்று உடனே கீழிறங்க ஆரம்பிக்கிறதோ அவனுக்குப் பகிரங்க உலக போக பிராரத்தம் பலமாயிருக்கிறது.

## 79 வது நாள்

* ஜாக்கிர புருஷனும் சொப்பன புருஷனும் ஒன்று. சுழுப்தி புருஷனும் துரிய புருஷனும் ஒன்று.
* மஹத்துக்களும் வேதமும் பிரஹ்மத்தையே வைகுண்டம் கைலாசம் என்ற கூறுகிற வழக்கம்.
* ஆத்மப் பிரஹ்ம ஞானம் அடைய முடியாமல் நிஷ்காம கர்மம் அனுஷ்டிப்பவன் சாங்கியர் பதவியை அடைகிறான்.

## 80 வது நாள்

* ஞானேந்திரியங்களுடன் மனதை அலையாமல் நிறுத்துவது ஜம்பூக யோகம்.
* மோட்ச ஆசையால் ஞானம் பழகுபவனும் மயக்கமுடையவன்.
* நிருவிகல்ப சமாதியில் சப்த இந்திரியம் அடங்கும்.
* குருப் பிரசாதமின்றி ஆத்ம அனாத்ம விசாரணை கிடைக்காது. அஞ்ஞானமும் நீங்காது.

## 81 வது நாள்

* சம்சாரத்திற்குள்ளாக்கப்பட்டுக் கொண்டு ஞானம் பேசுபவர்கள் அற்ப புத்தியுள்ளவர்கள்.
* பஞ்சமூர்த்திகளுக்கும் ஆதார தெய்வம் யாரோ அவரை நாமும் அடைய வேண்டும்.
* எந்தெந்த விஷயத்தில் எவனெவன் மனம் பிரமாணத்துடன் தீவிரமாகச் செல்லுகிறதோ அந்தந்த விஷயத்தை அவனவன் அப்படியே யாதொரு தடையுமின்றி முடித்து விடுகிறான்.

## 82 வது நாள்

* எல்லாப் பிரபஞ்சங்களும் அதிலுள்ள சகல வஸ்துக்களும் ஜெகத் ரட்சக ஜெகதீஸ்வரனது சிருஷ்டியிலுண்டானதும் அவருக்குச் சொந்தமானதுமாகையால் உலக வஸ்துக்களை உண்மையறிந்தவர்கள் அளவுக்கு மீறி உபயோகப்படுத்த மாட்டார்கள்.
* உருவமில்லாத பரமாத்மாவை அடைவதற்கு ஞான யோகமும் உருவமுள்ள மூர்த்திகளையடையப் பக்தி யோகமும் தகுதியானது.
* எவனிடத்தில் சக்தி அதிகரித்திருக்கிறதோ அவனைத் தெய்வமென்று பிரஜைகள் சொல்லுகிறார்கள்.

## 83 வது நாள்

* உலகத்தார் ஒருவரும் நம்மைக் குற்றஞ் சொல்லக் கூடாதென் றெண்ணுவது குற்றம்.
* உண்மையான மத பக்தியுள்ளவன் உள் சாதனங்களை அனுஷ்டிப்பதுபோல் வெளிச் சாதனைங்களையும் தவறாமல் அனுஷ்டித்து வர வேண்டும்.
* முயற்சி செய்து தொனியை விளைவிக்கின்ற வீணை வேணு இவைகளைக் காட்டிலும் இயற்கையாகச் சப்திக்கின்ற குயில் கிளி முதலிய பட்சிகளின் கீதங்கள் இனிமையானது.

## 84 வது நாள்

* பிதா பாட்டன் முதலியவர்களே அநேகமாகப் பேரன் புத்திரர்களாகப் பிறக்கிறார்கள்.
* எந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பித்த போதிலும் நினைத்த போதிலும் தன்னைத் திரும்பிப் பார்த்துக் கொண்டு தன்னுடைய ஆஸ்ரமம் ஜாதி அந்தஸ்து காலம் இடம் தேசம் இயற்கை சக்தி இவைகளுக்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டும்.

## 85 வது நாள்

* தர்க்கம் முதலிய அனாத்ம சாஸ்திரங்களைக் கற்றவர்கள் பல விஷயங்களில் தர்க்கஞ் செய்து விட்டுப் பிரஹ்மத்தினடமும் தர்க்கஞ் செய்ய வந்து விடுகிறார்கள்.
* பஞ்சேந்திரிய ஞாபகமற்று மனதை ஒருமுகப்படுத்தி ஓங்காரத்தின் தொனியை எழுப்பி மெல்ல மெல்ல அந்த நாதத்தின் பிந்துவில் நாட்டம் வைத்துப் பழகப் பழக நாதாந்தம் பிரசன்னமாகிறது.

## 86 வது நாள்

* அளவற்ற காலம் சாஸ்திரப்பியாசத்தினாலுண்டாகக் கூடிய பலனை சில நாழிகை நேரமுள்ள சாது சங்கம் கொடுத்து விடுகிறது.
* கண் பார்ப்பதாலும் காது கேட்பதாலும் வாக்கு வசனிப்பதாலும் கால் நடப்பதாலும் கை உபயோகிப்பதாலும் கோபம் ஆசை துவேஷம் பொறாமை இவைகளுக்கு இடங் கொடுப்பதாலும் உள்ளிருக்கிற ஆத்ம சக்தியானது மெல்ல மெல்ல வெளியிற் சென்ற வண்ணமாயிருக்கின்றன.

## 87 வது நாள்

* பிரஹ்ம வஸ்து ஒன்றைத் தவிர மற்றெல்லோரும் ஆத்மாவை அகங்காரத்தை மனத்தை உலகத்தை உடலை விஷயங்களை ஆஸ்ரயித்தவர்களாயிருக்கிறார்கள்.
* சத்துவ குணத்திலிருந்துண்டான தர்மம் ஞானம் வைராக்யம் ஐஸ்வர்யம் இந்த நான்குமே மோட்சத்திற்குத் தடையாயிருக்கின்றன.

## 88 வது நாள்

* முக்குணங்களாலுண்டாகிற பதவிகளும் சுகங்களும் நிலையற்றனவென்றெண்ணியே ஸ்ரீமந் நாராயணமூர்த்தி க்ஷீராப்தியில் ஏகாந்தமான நிஷ்டாதி நித்திரையிலிருக்கிறார். பிரம்மதேவர் ஸ்வேத தீப கற்பத்திலுள்ள வைஜயந்தி பருவதத்தில் எப்போதும் தனிமையான பிரம்மசாரியாகவே இருக்கிறார். பகவான் விஸ்வேஸ்வரர் உலக இன்பங் குடி கொண்ட மன்மதனை எரித்துவிட்டுக் கடுமையான தபஸ் செய்கிறார்.
* அசத்தல்லாத பரமாத்மாவினிடம் ஹிருதயத்தை அடையச் செய்து நிலைபெறச் செய்தவனெவனோ அவனே சத்தியவான்.

## 89 வது நாள்

* சத்திய வஸ்துவில் அசத்தியம் பேசாதிருத்தலும் அசத்தியவுலகத்தில் அசத்தியஞ் சொல்லாதிருத்தலும் சத்தியமென்று தேவர்கள் கொண்டாடுகிறார்கள்.
* பிரஹ்மத்திலும் வேதத்திலும் ஆதரவில்லாத யோகம் ஞானம் கர்மம் பக்தி உலகம் இவைகளை அறிவுள்ள ரிஷிகள் ஆதரிக்கவில்லை.
* காலத்தை எதிர்நோக்கியே சிருஷ்டி கர்த்தர்களும் தங்கள் காரியங்களைச் செய்கிறார்கள்.

## 90 வது நாள்

* யோசியாமலும் முயற்சியில்லாமலும் தானே வருகிற உலக போகங்களின் வஸ்து சாஸ்திர சம்மதமாயிருக்குமானால் ஏற்றுக் கொள்ளலாம்.
* சூரிய சந்திரர்கள் மற்ற கிரகங்கள் சப்த ரிஷிகள் திக்பாலகர்கள் பஞ்ச மூர்த்திகள் சக்திகள் குரு இவர்களை வேறு வேறாக உபாசிப்பதைக் காட்டிலும் அனைவரையும் பரமாத்மாவாக உபாசிப்பது விசேஷம்.
* புருஷர்களாய்ப் பிறந்தவர்கள் பெண்களின் சுகத்தைப் பூர்ணமாக அனுபவித்துப் பாராமல் துறவு பூண்டு விடுவார்களானால் அவர்களது மனத்தைவிட்டு அவ்வாசை அகலாதென்று வல்லப மதாசாரியார் கூறுகிறார். அவர் அனுபவம் அவ்வாறிருக்கிறது.

## 91 வது நாள்

* சகல வேத சாஸ்திர அனுபவமில்லாத தேசங்களில் உண்மை ஞானம் பிரதிபலிக்கிறதில்லை.
* எது வந்தாலும் மாயையின் தோற்றமென்று ஆரம்ப யோகிகளும் பிரஹ்மத்தின் அம்சமென்று மத்திம யோகிகளும் ஒன்றும் நினையாதிருப்பது உத்தம யோகிகளுமாக ஆகின்றனர்.
* ஞானம் யோகம் ஆசனம் மந்திரம் கர்மம் சமாதி நிஷ்டை அத்தியயனம் இவைகளுக்குக் குரு முகமாயின்றிச் சாஸ்திர ஞானத்தைக் கொண்டு அனுஷ்டித்தால் குற்றமுண்டாகிறது.

## 92 வது நாள்

* புண்ணியத்தினாலுண்டாகக் கூடிய ஸ்வர்க்கமும் பாபத்தினாலுண்டாகக் கூடிய நரகமும் அதிக வித்தியாசமுடையன அல்ல.
* தேவர்கள் பிதுர்க்கள் மனிதர்கள் மிருகங்கள் புழுக்கள் பற்பல ஜந்துக்கள் பறவைகள் மரம் செடி கொடிகள் இவைகளை எப்போதும் எந்த விஷயத்திலும்அலட்சியம் செய்யக் கூடாது.

## 93 வது நாள்

* ஆத்ம ஞானமில்லாததாலும் இந்திரியங்களை அடக்க முடியாததாலும் மனோ விருத்தியை இஷ்டம்போல விடுவதாலும் ஆசை கோபம் உண்டாவதாலும் அதிக சங்கல்பத்தினாலும் இது என்னது இது பிறருடையது என்ற பேத எண்ணத்தினாலும் கெட்ட காரியங்களைச் செய்வதனாலும் கெட்ட ஆகாரங்களை உண்பதனாலும் கெட்ட தேசங்களுக்குப் போவதனாலும் அதிக விவகாரத்தினாலும் தீமைகள் உண்டு பண்ணுவதாலும் இது கிடைக்கவில்லை இது கிடைத்து விட்டது என்ற எண்ணங்களினாலும் கெட்ட காலத்தினாலும் துர்ஜனங்களின் பழக்கத்தினாலும் கெட்ட பதார்த்தங்களை நினைப்பதனாலும் அதிக ஆகாரமுண்பதாலும் அளவு கடந்த ஸ்திரீ சங்கத்தாலும் பரதாரச் சேர்க்கையாலும் பூர்வ ஜென்ம சாப பாபத்தினாலும் பெரியோர்கள் ஸ்திரீகள் சாபத்தின் வன்மையாலும் நாடிகளின் தடுமாற்றத்தினாலும் பிராண வாயு அதிகமாக ஓடுவதனாலும் அதிக வசனத்தினாலும் அன்னியர்களின் திரவ்யங்களை அபகரித்ததினாலும் பிரஜைகளுக்கு வியாதி உண்டாகிறது.

## 94 வது நாள்

* மறுபிறப்பில்லாத தன்மை வாய்ந்தவர்களக்குப் பிரபலமான முயற்சியின்றி சகல மோட்ச சாதனங்களும் குணங்களும் வலுவில் வந்தடைகின்றன.
* பிரபஞ்ச சிருஷ்டிகள் ஒரே விதமாயிருப்பதில்லை. ஒவ்வொரு சிருஷ்டியிலும் ஒவ்வொரு விதமாயிருக்கின்றன.
* அனித்தியமான சிருஷ்டிகளைச் சொல்வதற்கு வேத புருஷனுக்கு அபிப்பிராயமில்லாதிருந்தாலும் மந்த புத்திசாலிகளைக் குறித்து ஜீவகாருண்யத்தோடு சொல்லுகிறது.

## 95 வது நாள்

* பரிபக்குவ அதிகார நோக்கில் போதிப்பதை விட்டு எல்லோருக்கும் எல்லா விஷயத்தையும் போதிப்பதால் உபதேச நஷ்டமும் தீமைகளுமுண்டாகின்றன.
* ஆசன சித்தியின்றி யோகாப்பியாசம் செய்ய ஆரம்பித்தால் பலவித நோய்களுண்டாகும்.
* பிரஹ்மத்தின் அனுபவ ஞானமில்லாதவர்கள் வாதனை நீக்கிய நிஷ்காம கர்மம் செய்து வரவேண்டும்.

## 96 வது நாள்

* ஆபாச வாதம் அவச்சேத வாதம் இரண்டில் ஜீவர்களின் பரிபக்குவ நோக்கி இரண்டு வாதத்தையும் ரிஷிகள் ஒப்புக் கொள்கிறார்கள்.
* அறிவினால் வரக்கூடிய பதவிகள் மனைவி சிஷ்யன் செல்வம் இவைகளைக் காட்டிலும் அன்பினால் வந்தவை விசேஷமானது.
* வீணாக சுக்கிலத்தை விடுகிறதினாலும் கண்ட இடங்களில் விழுவதனாலும் பாபமுண்டாகிறது.

## 97 வது நாள்

* பெரிய பிரசித்தி பெற்ற மதங்களிங் கூடக் காலத்திற்கேற்றவாறு தோன்றி மறைகின்றன.
* உலகமும் சரீரமும் நிலை பெற வேண்டிய அளவுக்கு ஒவ்வொருவரும் காமிய கர்மங்களைச் செய்வதால் மோட்ச மார்க்கத்திற்குச் சகாயம் செய்ததாகிறது.
* மனமானது ரஜோ தமோ குணங்களினின்றும் விடுபட்டுச் சுத்த சத்துவ சங்கல்பமயமாகி அதையும் நழுவிவிட்ட காலத்தில் பரமமான சாந்தி சொரூபமாகிய சைதன்ய வஸ்து பிரகாசிக்கிறது.

## 98 வது நாள்

* ஒவ்வொரு ஆசனங்களும் யோகாப்பியாச காலங்களாலுண்டாகிற நோய்களை நன்றாக தீர்த்து விடுகின்றன.
* பிறருடைய நன்மை தீமைகளை நாடுவதால் தபோ பலம் குறைகிறது.
* அன்னத்தால் ரத்தத்தைக் கொடுத்தும் பேசுவதற்கு வாக்கையும் நினைப்பதற்கு மனத்தையும் சரீரம் விழாமலிருப்பதற்குப் பிராணனையும் உடம்பிற்கு வேண்டிய சகல சாதன வஸ்துக்களையும் ஜீரணிப்பதற்கு அக்னியையும் மாதாவின் கெர்ப்பத்திலிருந்து இதுவரை ரட்சித்து வந்த சர்வேஸ்வர எம்பெருமானை மறந்து விடுவதால் செய்த நன்றி கொன்ற தோஷம் பலமாயுண்டாகிறது.

## 99 வது நாள்

* ஞான சாதனங்கள் பலவற்றிலும் ஹிருதய சுத்தமும் புத்தியின் கூர்மையுமே விசேஷம்.
* உருவமுடையவர்கள் எவறாயிருந்தாலும் கட்டுப்பாடுடையவர்களென்று வேதமும் மஹரிஷிகளும் கூறுகிறார்கள்.
* ஞானிகள் அனுபவம் ஒன்றாயிருந்தாலும் சரீரச் செய்கைகள் அவரவர் பிராரத்தப்படி நாநாவிதமாயிருக்கின்றன.

## 100 வது நாள்

* காமியத்துவம் மட்டுமுடையவர்களைச் சித்தர்களென்றும், நிஷ்காமியத் தவம் மட்டுமுடையவர்களை ஞானிகளென்றும் இரண்டு தவமுடையவர்களை ரிஷிகளென்றும் அறிந்து கொள்ள வேண்டும்.
* பாரமார்த்தீக வைதீக ஞான திருஷ்டியினால் உலகமெல்லாம் பார்க்கும் போது ஒரு விஷயத்தில் உறவாகவும் மற்றொரு விஷயத்தில் விரோதமாகவும் தோற்றுகிறது.
* வெளியிலுள்ள உலக போகங்களை அடியோடு விட்டவர்களாக விருந்த போதிலும் உள்ளில் விட்டவர்களாகச் சொல்லிவிட முடியாது.

## 101 வது நாள்

* யாரும் தன் சரீரத்திற்குரிய செயல்களைத் தானே செய்து கொள்வது நலம். கரும யோகிகள் யோகாப்பியாசிகள் ஞானிகள் இவர்களுக்கு உத்தமமான அன்பு கொண்ட சிஷ்யர்கள் செய்யலாம்.
* காமம் உண்டானபோது ரேதசை உபயோகிப்பதைவிட்டு வித்தையோடு கூடின விசனத்தை உபயோகிக்க வேண்டும்.
* பிரவிர்த்தி நிவிர்த்தி இரண்டையுந் தாண்டியவன் பிரஹ்மத்தை அடைகிறான்.

## 102 வது நாள்

* சாதன அனுபவம் சாத்திய அனுபவம் யுக்தி அனுபவம் சுருதி அனுபவம் என வசன அனுபவம் ஐந்து வித அனுபவங்களும் அந்தந்த அனுபவத்தை யுடைய சாஸ்திரங்களுமிருக்கின்றன.
* தான் பெரிய அனுபவ ஞானியாயிருந்தாலும் தனது உன்னத அனுபவ சாதன சாத்தியங்களை உலகத்தார்களுக்கு பகிரங்கப்படுத்துவது பிசகு.
* பார்க்கப் பார்க்க இன்பமாயிருக்கிற வஸ்துக்களெல்லாம் எமலோக சினேகித மானவைகளென்று விலக்கி விடவேண்டும்.

## 103 வது நாள்

* அவரவர்களுக்கு மனோ சங்கல்பமுண்டாவதே சிருஷ்டி உண்டாவதென்றும் சங்கல்பம் ஒடுங்குவதே சிருஷ்டி லயமென்றும் ரிஷிகள் கூறுகிறார்கள்.
* கர்மாவானது ஞான சாதனமென்று பயனை விரும்பாமல் யாதொரு சந்தேகமுமின்றிச் செய்கிறவன் அதன் சித்தியை அடைகிறான்.
* அழிகிற சித்தியை விரும்பாவிடினும் அழியாத சித்தியை விரும்பியே தீர வேண்டும்.

## 104 வது நாள்

* சாஸ்திரக் கண்ணால் கடவுளை அறிந்தவர்கள் ஞானக் கண்ணால் அறிவது முடியாத காரியமல்ல.
* பாஷா ஞானமின்றி ஆத்ம ஞானமடைவது அவ்வளவு சிரேஷ்டமல்ல.
* ஒவ்வொரு தேசத்தார்களும் தன்தன் தேச பாஷைகள் விருத்தியடைவதற்கு முயற்சி செய்வது பெரிய தர்மமும் தவமும் ஆகிறது.
* தன் சொந்த பாஷையையன்றி மற்றெந்த பாஷைகளையும் மேன்மை யென்றெண்ணக் கூடாது.

## 105 வது நாள்

* சொந்த தேசம் பாஷை மதம் வேதம் சாஸ்திரம் மலை ஆறு க்ஷேத்திரம் பக்தர்கள் ஞானிகள் கொள்கைகள் அனுஷ்டானங்கள் ஜனங்கள் இவைகளைக் கவனித்துப் பூர்த்தி செய்தான பின்பே வேறு தேச விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.
* எந்தெந்த பாஷையை எவனெவன் விருத்தி செய்கிறானோ அவனுக்கு அந்தந்த பாஷையின் அதிதேவதையினது அனுக்கிரகம் உண்டாகிறது.

## 106 வது நாள்

* ஞானாப்பியாசிகள் யோகிகள் பக்தர்கள் இம்மூவரும் சர்வேஸ்வரன் சாதுக்கள் இவர்களது பெருமையைத் தவிர அரசர்கள் பிரபுக்கள் பண்டிதர்கள் இவர்களைப் பற்றியும் பெருமையைப் பற்றியும் பேசவும் நினைக்கவும் பேசுகிறவர்களுக்கு இடமும் கொடுக்கவும் கூடாது.
* பல பிராணிகள் கூடியிருந்தாலும் தான் ஒருவனாயிருந்து சந்தோஷிக்கிறவன் உத்தம ஞானி.
* தர்மம் அதர்மம் சத்தியம் அசத்தியம் பாபம் புண்ணியம் இவைகளைத் தள்ளிவிட்டு இவற்றையெல்லாந் தள்ளிய மனத்தையும் தள்ளிவிட்ட போது தானே விளங்குவது ஞானப்பிரகாசம்.

## 107 வது நாள்

* நன்மை போலத் தோற்றுகிற உலக வஸ்துக்களைத் தீமைபோல பார்க்கிறவன் சீக்கிரம் வைராக்ய ஞானத்தை அடைகிறான்.
* தேசத்திற்குண்டாயிருக்கிற துக்கத்தைக் குறித்து வருத்தப்படுவதைக் காட்டிலும் நிவிர்த்திக்க வழி தேடுவது சிலாக்கியம்.
* சூர்ய பகவானுடைய முகத்திலிருந்து ஆதியில் வெளி வந்த பாஞ்சராத்திரத்தை முதல் முதலில் உபரிசரன் என்ற பெரிய ராஜரிஷி பலமாக அனுஷ்டித்து வந்தான்.

## 108 வது நாள்

* முதிர்ச்சி பெற்ற உண்மை ஞானிகளுக்கு மட்டும் காடும் வீடும் ஒன்றாகத் தோற்றும்.
* தபசு செய்யும் போதுரேதஸ் வெளி வந்தால் தபம் குறையும்.
* சரீர சுகத்தையும் ஆகார சுகத்தையும் விரும்புகிறவனுடைய தபசு வீணானது.
* திரிகுண ரகித ஞானிகளுக்கு ஈஸ்வரனும் ரிஷிகளும் சமானமாக மாட்டார்கள்.

## 109 வது நாள்

* சிருஷ்டி கர்த்தர்களான ரிஷிகளுக்கும் பிரகிருதியினின்றுண்டான மூர்த்திகளுக்கும் அகங்கார பாவனை போக மாட்டாது.
* மனமானது எந்தப் பாவனையோடு எந்த ரூபத்தை தியானிக்கிறதோ அந்தப் பாவனை முதிர்ந்தவுடன் அந்த ரூபம் பிரசன்னமாகிறது.
* சகல சாஸ்திரங்களும் ஆசையைக் காட்டி மறைத்துக் கொண்டே வந்து கடைசியில் பிரஹ்மத்தைப் போதிக்கிறது.
* மௌனத்தால் ஞான பலமும் தானத்தால் பெரிய கீர்த்தியும் சத்திய வார்த்தையால் பேசுந் திறமையும் உண்டாகின்றன.

## 110 வது நாள்

* பிராணன் சிரத்தை ஆகாயம் வாயு அக்னி ஜலம் பூமி மனம் அன்னம் வீரியம் தவம் மந்திரம் கர்மம் லோகங்கள் நாமம் இந்தப் பதினைந்து கலைகளையும் விட்டு ஐந்து பிராணன் பத்து இந்திரியங்கள் மனம் புத்தி இந்தப் பதினேழு தத்துவங்களும்அதன் குணங்களும் காரியங்களும் இல்லாதவனெவனோ அவன் பிறவா முக்தன்.
* சூரியனுடைய ஹிருதய மத்தியில் அந்தர்யாமியான சர்வேஸ்வரனிருந்து கொண்டு ஜீவ ராசிகளின் புண்ணிய பாபங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

## 111 வது நாள்

* வனங்களிலுள்ள மிருகங்கள் பட்சிகள் மரங்கள் செடி கொடிகளுக்கு வைத்தியஞ் செய்யாதிருந்தும் வியாதிகள் அதிகமாயில்லை. வைத்தியங்கள் பல ரக்ஷணைகள் செய்தும் மனிதர்களுக்கு அதிக நோயுண்டாகிறது.
* பகல் பைசாசம் இராத்திரிப் பைசாசம் இவ்விரண்டில் இராத்திரி நடு மத்தியில் தனிமையாகப் பலவித பயத்துடன் கூடிய சங்கல்பத்துடன் சென்றால் இராத்திரிப் பைசாசம் துன்பப்படுத்தி விடுமென்று பிரஸ்தாபத்திலிருந்து வருகிறது. பகலில் நடு ரஸ்தாவில் பல பிரஜைகளின் மத்தியில் எத்தனை காவலோடிருந்தாலும் பகல் பைசாசம் அடித்துத் துன்பப்படுத்தி இரத்தத்தை உறுஞ்சி விடுகிறது.

## 112 வது நாள்

* தைரியத்தால் குறியையும் வயிற்றையும் காக்க வேண்டும். கண்ணால் கைகால்களையும், மனத்தால் கண்ணையும் காதையும் வித்தையால் மனத்தையும் வாக்கையும், யோகத்தால் வித்தையையும் உலகத்தையும் ஞானத்தால் யோகத்தையும் தன்னையும், விசாரணையால் வேதாந்தத்தையும் பரிசுத்தத்தையும் காக்க வேண்டும்.
* ஆத்மாவிலிருந்து வெல்ல எழுந்து வருகிற சங்கல்பமுடையவர்களை ஞான யோகிகள் பரிபாலித்துக் கொள்ளுகிறார்கள்.

## 113 வது நாள்

* ஈஸ்வரரும் ரிஷிகளும் உலக சிருஷ்டியை முன்னிட்டுச் சித்தி மார்க்கங்களை வெறுப்போடு உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
* ரிஷிகள் பின் சிருஷ்டியில் ஈஸ்வரர்களாக வருகிறார்கள்.
* சனத் குமார ரிஷியே சுப்ரமண்யராக வந்திருக்கிறார்.
* ஆகாசக மனம் பரகாயப் பிரவேசம் தூர திருஷ்டி ஞானம் அஷ்டமா சித்தி இவைகளில் உண்மையான பிரஹ்ம ஞானமில்லாதவர்களுக்கு ஆசை உண்டாகிறது.

## 114 வது நாள்

* ஒவ்வொரு தத்துவங்களையும் விசாரியாமல் தள்ளிவிட்டுச் செல்வதைவிட விசாரித்து லட்சண ஞானத்தோடு தள்ளிச் செல்வது சிலாக்கியமென்று சுகப் பிரஹ்மரிஷி போதிக்கிறார்.
* ஆரண்யங்களிற் சென்று பெரிய உலக போகங்களை ஜெயிப்பதைக் காட்டிலும் அழகிய நகரங்களிலிருந்து கொண்டு ஜெயிப்பவன் தைரியசாலி.

## 115 வது நாள்

* எந்த விஷயத்திலும் யாதொரு நியமமுமில்லாத ஞானிகளிடம் சுக துக்க தேவதைகள் அணுகுவதில்லை.
* மோட்ச சாதனங்களுக்காக அன்ன பானாதிகளுண்டாயிருக்கிறதே யன்றி உதிரமாம்ஸங்களைப் பெருக்க வைத்துக் கொள்வதற்காக வல்ல.
* சிவ விஷ்ணுக்களின் பேதரூபமான பக்தியை சிவ விஷ்ணுக்களே வேதத்திற் கண்டித்துக் கூறியிருக்கின்றனர்.

## 116 வது நாள்

* அழிவற்ற பெரிய பதத்தையன்றி ஏனைய பதங்களை விரும்புகிறவர்கள் யாவறாயினும் காமிய ஆசையுடையவர்களென்று கூசாமற் சொல்லலாம்.
* பிரகிருதிக்கு அப்பாற்பட்ட அனுபவ ஞானமுடையவர்களைப் பிரகிருதி ஒன்றுஞ் செய்வதில்லை.
* பிரவிர்த்தி தர்மங்களோடு கூடினவனைப் பிரமதேவர் பார்க்கிறார், நாராயணர் பார்ப்பதில்லை.

## 117 வது நாள்

* தேவர்களும் முனிவர்களும் சத்துவ குணமடையவர்களாயிருப்பினும் சூட்சும மான சத்துவ குணமடையவர்களாயில்லாமையால் வைகாரிகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.
* பிரம்மா விஷ்ணு சிவன் மஹேஸ்வரன் சதாசிவன் முருகன் கணபதி சக்தி இவர்களின் வேறுபாடில்லாத அந்தரங்க சத்துவ குண அபேத பக்தியினால் யாதொரு தடையுமின்றிப் பிரஹ்மத்தினிடத்தில் ஒன்றாயிருக்குந் தன்மை ஏற்படுகிறது.

## 118 வது நாள்

* போன விஷயங்களையும் இப்போதிருக்கிற விஷயங்களையும் இனி வரப் போகிற விஷயங்களையும் எண்ணாமலிருப்பது மனோலயம் என்று வசிஷ்ட மஹரிஷி கூறுகிறார்.
* பிரஹ்மத்தில் சஞ்சாரமுடையவன் உத்தம பிரம்மசாரி மனத்தில் ஸ்திரீ சங்கல்பமில்லாதவன் மத்திம பிரமசாரி வெளியில் ஸ்திரீ சங்கல்ப்பமில்லாத வனும் ரேதசை விடாதவனும் அதமப் பிரம்மசாரி.

## 119 வது நாள்


* ஆசையோடு வந்தவர்களைச் சமாதானம் செய்யாவிட்டால் யாரானாலும் பெரிய பாபமுண்டாகும்.
* புத்திமான்களும் மோட்ச தர்மத்தோடு கூடினவர்களும் ஆசையற்றவர்களுமான தியாகிகளின் யோக க்ஷேமங்களை ஸ்ரீமந் நாராயணனே வகித்து வருகிறார்.

## 120 வது நாள்

* ஹிம்சையில்லாமையும் ஆத்ம ஞானமும் சமஸ்த பிராணிகளின் பற்றும் பரதந்திர பக்தியுமுள்ள பிரஜைகளால் உலகம் வியாபிக்கிற போது கிருத யுகம் உண்டாகிறது.
* பரம ஏகாந்த யோகிகள் சங்கர்ஷண பிரத்யும்ன அனிருத்ரர்களை உபாசி யாமல் நேரே பிரஹ்மத்தை அடைகிறார்கள்.

# 121 வது நாள்

- ✻ மனுஷ்ய சரீரங்களில் அதிக புண்ணியமுடையவர்களைத் தெய்வ அவதாரமாகக் கண்டு கொள்ள வேண்டும்.
- ✻ விவகாரமில்லாத ஞானிக்கும் விவகாரமுடைய ஞானிக்கும் அனுபவத்தில் ஒரு வித்தியாசமுமில்லை.




# 122 வது நாள்

- ✻ பிரம்மா பிரஜைகளை அடக்க முடியாத காலத்தில் மறைக்கப்படாத ஞானத்தோடு கூட மாயையை வசப்படுத்திக் கொண்டு சுதந்திரமாக ஸ்ரீமந் நாராயண சொரூபம் அவதரிக்கிறது.
- ✻ மரீசி ஆங்கிரஸ் அத்திரி புலஸ்தியர் புலஹர் கிரது வசிஷ்டர் இவ்வேழு பேர்களும் பிரவிர்த்தி மஹரிஷிகள்.

# 123 வது நாள்

- ✻ ஜனர் சனத்சுஜாதீயர் ஜனகர் சனந்தர் சனத்குமாரர் கபிலர் சதானந்தர் இந்த ஏழ்வர்களும் நிவிர்த்தி மஹரிஷிகள்.
- ✻ தன்னைத் தவிர அன்னியர்கள் யாருக்கும் எந்தவிதமான போதனைகளைச் செய்தாலும் பந்தமுண்டாகிறது.



# 124 வது நாள்

- ✻ ஜீவ சிருஷ்டிகளைக் கண்டு ஆச்சரியப்படுவதை விட்டு இயற்கையான தெய்வீக சிருஷ்டிகளைப் பார்த்து ஆச்சரியப்படுவதால் ஆத்ம ஞான உணர்ச்சி உண்டாகிறது.
- ✻ மூன்றவஸ்தைகளைத் தாண்டும்போது எவன் மயக்கமடைகிறானோ அவன் மறு ஜென்மத்தில் முக்தி அடைகிறான்.

## 125 வது நாள்

* அடிக்கடி சமுத்திர ஸ்நானத்தால் சரீரமும் இந்திரியங்களும் சுத்தியாகின்றன.
* ஏதாவதொரு வஸ்துவில் ஒரு முகூர்த்த காலம் வரை மனத்தை நன்றாக நிறுத்திப் பழக்கிக் கொண்டபின் பிரஹ்மத்தை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கலாம்.




## 126 வது நாள்

* மனைவி மக்கள் செல்வம் பூமி மாளிகை இவைகளோடு கூடியிருந்தும் இவையெல்லாம் பரமாத்மாவுக்குச் சொந்தமானதென்று உள்ளவாறு நினைத்து யானெனதென்கிற அகங்காரத்தை விட்டிருப்பவர்கள் உத்தமமான பக்தர்கள்.
* முக்குணங்களுள்ளவரை மறுபிறப்பு மாறுவதில்லை.

## 127 வது நாள்

* சாளக்கிராம தீர்த்த பானத்தால் நாடி சுத்தியும் ருத்ராக்ஷத்தை அணிவதால் தேஜஸ் விருத்தியும் பஸ்பதாரணஞ் செய்வதால் ரத்த சுத்தமும் உண்டாகின்றன.
* அவரவர்களுடைய கர்ம சுபாவமே அவரவர்களுக்கு வாழ்வையும் தாழ்வையும் உண்டாக்குகின்றன.



## 128 வது நாள்

* பூர்வ புண்ணிய பலத்திற்குத் தக்கபடி மோட்ச மார்க்கம் விளங்கும்.
* புஷ்பம் ஜலம் தளிர் காய் பழம் பால் அன்னம் இவைகளைக் கொண்டு சகுண மூர்த்திகளுக்குப் பூஜை செய்வதால் பாவம் விலகிப் பகவானது கிருபை உண்டாகிறது.

## 129 வது நாள்

* சாத்வீக குணத்தோடு சரீரத்தை விட்டவர்கள் தேவர்களாகவும் இராஜச குணத்தோடு இறந்தவர்கள் மனுஷ்யர்களாகவும் தாமத குணத்தோடு மரண மானவர்கள் புல் பூண்டு மிருகம் பட்சி இந்தப் பிறப்புக்களை அடை கிறார்கள.
* சரீரம் விலகுங் காலத்தில் மூன்று குணமுமில்லாதவர் பிரஹ்மத்தில் கலந்து விடுகிறார்கள்.

## 130 வது நாள்

* ஞான இச்சை மனத் தெளிவு உண்டானபோது சத்துவமும் பெண்ணாசை டம்பம் உண்டாயிருக்கிறபோது ராஜசமும், ஹிம்சை கோபம் உண்டானபோது தாமதமும், மேலெழுந்திருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும்.
* மோட்ச சாதனமான ஸ்தூல சரீரத்தை அலட்சியஞ் செய்பவன் நரகத்தை அடைகிறான்.

## 131 வது நாள்

* தெய்வ பக்தியின்றிச் செய்யப்படுகிற புண்ணிய கருமங்கள் பயன் படுவதில்லை.
* சப்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களை ஜெயித்து மனத்தைப் பரமாத்மாவினிடத் தில் நிறுத்துவது அகோரமான தபஸ்.
* அழிந்து போகிற உலக தட்சிணைகளைக் கொடுப்பதைவிட அழியாத ஞான தட்சிணையைக் கொடுப்பது விசேஷம்.

## 132 வது நாள்

* சூரியன் வெகு வேகமாக ஓடிக் கொண்டேயிருக்கிறான். யாதொரு தாட்சண்ய முமின்றி யமன் எல்லோரையும் கொண்டு போய் கொண்டேயிருக்கிறான். இரவு பகல்கள் வெகு துரிதமாய்க் கழிந்து கொண்டே போகின்றன. உடலை விட்டுப் போவதற்குப் பிராண வாயுவும் காலத்தோடு தயாராயிருக்கின்றன. உலக முழுமையும் திடீரென்று மாறிக் கொண்டே போகின்றன. ஆறு களெல்லாம் தனது சுபாவத்தைக் குறைக்காமலே சென்று கொண்டேயிருக் கின்றன. சமுத்திரங்களெல்லாம் அதனதன் காரியங்களாகிய அலைகளை நிறுத்தாமல் அடித்துக் கொண்டேயிருக்கின்றன. மனமும் இந்திரியங்களும் ஓய்வின்றி ஓடிக் கொண்டேயிருக்கின்றன. ஜனன மரண தேவதை ஒரு க்ஷணங்கூட ஓய்வதில்லை. சக ஜீவர்களும் அவரவர்கள் தொழில்களை இடைவிடாது செய்து கொண்டேயிருக்கின்றனர். மனுஷ்யர்கள் மாத்திரம் கடவுளை அறிவதற்குப் பிரஹ்ம மார்க்கத்தை நோக்கிச் செல்லாதிருந்தால் கால தேவதை நகைக்கும்.

## 133 வது நாள்

* மலம் மூத்திரம் கிருமி சீழ் இரத்தம் தோல் மாம்ஸம் நரம்பு எலும்பு மயிர் கபம் நாற்றம் இவைகளோடு சேர்ந்திருக்கப்பட்ட உடம்பை நானென்றெண்ணுவது நியாயமல்லாததும் நரகத்தை நானென்பதையும் ஒக்கும்.
* பிரஹ்ம விசாரணை தவம் மறந்த விஷயங்களை மீண்டும் நினையா திருத்தல் ஜீவ காருண்யம் உலக உதாசீனம் இவைகள் துறவிகளின் செய்கைகள்.

## 134 வது நாள்

* மனத்தை அடக்குதல் சமம்; இந்திரியங்களை அடக்குதல் தமம்.
* தன்னுடைய ஆத்ம நிலையை அறிவதற்குப் பிறருடைய உதவி பயனற்றது.
* ஆசையை விடுவது தவம். நிஷ்காம கர்மஞ் செய்வது யாகம். காமத்தின் காரியங்களை விடுவது தியாகம். மனதை அடக்குவது தைரியம். ஏகாக்கிர புத்தியே கல்வி.

## 135 வது நாள்


* சத்தை அசத்தாகவும் அசத்தை சத்தாகவும் நாட்டி விடுவது மாயை.
* எல்லோரையும் நாமென்றெண்ணுவதால் ஸ்துதி நிந்தை செய்வதற்கு வழியில்லை. ராகத் துவேஷாதிகளுக்கு இடமில்லை.
* அபேத ஞானம் வருகிற பரியந்தமும் மாறாத ஞான திருஷ்டி வருகிற வரையிலும் புண்ணிய கருமங்கள் செய்து வர வேண்டும்.

## 136 வது நாள்

* ரேதசைப் பத்திரமாகக் காப்பாற்றி வருவதால் தபமும் தேஜசும் விருத்தியா கிறது.
* தபசியும் ஞானாப்பியாசியும் யோகாப்பியாசியும் ஒரு சாஸ்திரத்தையும் அப்பியாசிக்கக் கூடாது.
* சொல்லிச் சொல்லி செய்யும் தர்மங்களைவிடச் சொல்லாமற் செய்யுந் தர்மமே விசேஷம்.

## 137 வது நாள்

* வெளியில் கடவுளைத் தேடுகிறவன் ஒருக்காலும் காணப் போவதில்லை.
* சித்திகளுக்காக யோகம் பழகுபவன் சிறந்த அறிவாளியில்லை.
* பசிக்கு நாம் அடங்கி விடாமல் பசி நமக்குள் அடங்கியிருக்க வேண்டும்.
* கடவுளை அறிந்த ஞானிகள் காலத்தையும் அதிகிரமித்து விடுகிறார்கள்.




## 138 வது நாள்

* கிராமக் காரியங்கள் குடும்பக் காரியங்கள் தேவாலயக் காரியங்கள் பொதுக் காரியங்கள் அரசாங்க நிர்வாகக் காரியங்கள் மற்றும் மனோ சலனத்தை உண்டு பண்ணக் கூடிய எந்தக் காரியங்களிலும் துறவிகளும் சன்னியாசிகளும் பிரவேசிக்கக் கூடாது.
* வீட்டிலிருப்பதைவிடக் காட்டிலிருப்பது விசேஷமென்று எண்ணுபவன் அப்பியாச முதிர்ச்சியில்லாதவன். வெளியிலிருப்பதைவிட உள்ளிருப்பது விசேஷமென்று நினைக்கிறவன் நிறையாதவன்.

## 139 வது நாள்

* பிராம்மணத் துவேஷம் செய்கிற அப்பிராமணர்களுக்கும் அப்பிராமணத் துவேஷஞ் செய்கிற பிராம்மணர்களுக்கும் இடங் கொடுக்கலாகாது.
* தெய்வம் வேதம் சாஸ்திரம் பாபம் புண்ணியம் இவைகளில் நம்பிக்கையில்லாதவர்களிடம் பழக்கமும் பேச்சுங் கூடாது.



## 140 வது நாள்

* சாதுத் தன்மை மனதைப் பொறுத்ததேயன்றிச் சரீரத்தையும் இந்திரியங்களையும் பொறுத்ததல்ல.
* உண்மை ஞானியும் பக்தனும் தரித்திரத்தையே விரும்புகிறார்கள்.
* எதார்த்தமுள்ளவன் எதார்த்தத்தை வெளியிற் காட்டுவதில்லை. எதார்த்தமில்லாதவன் எதார்த்தத்தை வெளியிற் காட்டுகிறான்.

## 141 வது நாள்

* பரத்துவம் அந்தரியாமித்துவம் வியூகத்துவம் விபவத்துவம் அர்ச்சாவதாரத்துவம் என ஐந்து விதங்களாகப் பரமாத்தமாவின் சக்தி பிரிந்திருக்கிறதென்று விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மதம் கூறுகிறது.
* சாஸ்திரங்களிற் கூறியபடி விரதாதிகளை ஒழுங்காக அனுஷ்டித்துக் கொண்டு வருவதாலும் காலாந்திரத்தில் பரமாத்ம சொரூபத்தை அடையலாம்.

## 142 வது நாள்

* சூர்ய மண்டல மார்க்கமாகப் பிரம்ம லோகஞ் செல்வது அர்ச்சிராதி மார்க்கம் சந்திர மண்டல மார்க்கமாகப் பிரம்மலோகஞ் செல்வது தூமாதி மார்க்கம்.
* சூரிய கலை தேவயானா மார்க்கமென்றும் சந்திர கலை பிதுர்யான மார்க்கமென்றும் யோக சாஸ்திரம் கூறுகிறது.

## 143 வது நாள்

* சகல மதங்களும் அவரவர்கள் புத்திக் கெட்டியவாறு பிரதிபாதிக்கின்றன.
* யாதொரு ஆசையுமில்லாமல் யோகஞ் செய்பவர்கள் பரமாத்மாவை அடைகிறார்கள்; ஆசையோடு யோகஞ் செய்பவர்கள் அஷ்டமா சித்திகளை அடைகிறார்கள்.
* இல்லறக் காரியங்களோடு ஞானமடைந்தவர்களுக்கு நடந்து கொண்டே தூங்குகிறவனுக்குள்ள சுகமும், துறவோடு ஞானமடைந்தவர்களுக்கு சப்ர மஞ்சப் பஞ்சணையில் தூங்குகிறவனுக்குள்ள சுகமும் போலிருக்கிறது.

## 144 வது நாள்

* பொருள் ஒன்றை மட்டும் விரும்புகிறவர்கள் உலக போகங்கள் அனைத்தையும் விரும்புகிறவர்களாகிறார்கள்.
* எவனுக்கு எதெது துக்கமென்று எதார்த்தமாய்ப்படுகிறதோ அவனுக்கு அதது அழிந்து போகிற காலம் சமீபத்ததென்று அறிந்து கொள்ள வேண்டும்.
* மாயையின் எல்லையைக் காண ஆரம்பிப்பது பிசகு.

## 145 வது நாள்

* பிரஹ்மத்தில் இரண்டில்லாதிருத்தலே முக்தியென்று அத்வைத மதமும், பரமேஸ்வரனிடத்தில் பிறிவற்றிருத்தலே முக்தியென்று விசிஷ்டாத்வைத மதமும், மஹா விஷ்ணுவிடத்தில் வேறாக இருப்பதே முக்தியென்று மத்துவ மதமும் பிரகிருதி புருஷனிடத்தில் அடங்கி விடுவதே முக்தியென்று சாங்கிய மதமும் அளவற்ற ஜோதியில் கலந்து விடுவதே முக்தியென்று யோக மதமும் கர்மத்தைப் பூர்த்தி செய்து விடுவதே முக்தியென்று மீமாம்சக மதமும் கடவுளை விட்டுப் பிரியாதிருத்தலே முக்தியென்று ஞான மதமும் கடவுளுக்கும் தனக்கும் சம்பந்தம் வைத்துக் கொள்வதே முக்தியென்று புத்த மதமும் கூறுகின்றன.

## 146 வது நாள்

* சச்சிதானந்த தர்மம் சநாதன தர்மம் சாந்த தர்மம் இம்மூன்றும் என்றும் அழிவற்றவை.
* பரமாத்மாவை அறிய வேண்டுபவர்கள் பிரஹ்மத்தை பற்றிக் கூறுகிற சாஸ்திரங்களைப் படிக்க வேண்டும். வருவது வந்தே தீருமென்றெண்ணித் திடமாயிருக்க வேண்டும். கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைய வேண்டும். சர்வ ஜீவர்களிடத்திலும் கருணையோடிருக்க வேண்டும். விருட்சங்கள் நிறைந்த கானகத்தில் வசித்து வர வேண்டும். யோகாப்பியாசம் சகுணத் தியானம் செய்ய வேண்டும். உலக வெளி விஷய ஆசைகளிலும் சூட்சும மனோ ஆசைகளையும் வெறுத்துத் தள்ளிவிட வேண்டும். பெண் உருவத்தில் ெ வறுப்பு உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

## 147 வது நாள்

* மாதாவின் கெர்ப்பத்திலுள்ள சிசுக்களுக்கு ஐந்தாவது மாதத்தில் பசி தோன்றுகிறது. ஏழாவது மாதத்தில் பூர்வ ஜென்மாந்தரங்கள் தோன்றுகின்றன. எட்டாவது மாதத்தில் தீவிர மோட்ச இச்சை உண்டாகிறது.
* ஸ்வர்க்க லோகத்திலுள்ள அழகிய ஸ்திரீகளின் சுகத்திற்காகவே மனுஷ்யர்கள் ஆசையோடு யாகஞ் செய்கிறார்கள்.

## 148 வது நாள்

* காலத்திற்குட்பட்ட வஸ்துக்களுக்கு எந்தெந்தக் காலங்களில் எதெது இயற்கையாக வந்து தீர வேண்டுமோ அதது வந்தே தீருகிறது.
* எந்த வித்தையையும் வலுவில் யாருக்கும் போதிக்கக் கூடாது.
* முறைப்படி யோகம் செய்து கொண்டு போகும்போது இடைவழியில் தாங்க முடியாத உஷ்ணம் உடம்பிலுண்டாகும். விடாது யோகஞ் செய்து கொண்டு போனால் அது நீங்கி விடும்.

## 149 வது நாள்

* பெண்களுடைய காமத்திற் கட்டுப்பட்டவர்கள் தேச காலங்களையும் பிறர் நோக்க விசாலங்களையும் கவனிக்க வேண்டும்.
* சரீரமாகிய சித்திரத்தில் தன்னைக் காண்பவன் பிரஹ்மத்தையுங் காண்கிறான்.

## 150 வது நாள்

* தான் ஒருவரையும் நமஸ்கரியாமலிருந்து கொண்டு நமஸ்கரிக்க வேண்டியவர்களை நமஸ்கரிக்க வேண்டும்.
* வாக்கு மவுனம் இந்திரிய மவுனம் கரண மவுனம் காஷ்ட மவுனம் சுழுப்தி மவுனம் மஹா மவுனம் என்று ஏழுவித மவுனங்களிருக்கின்றன.
* பேதமாக ஈஸ்வரோபாசனை செய்பவர்கள் ஜனோ லோகம் தபோ லோகம் பிரம லோகம் முதலிய லோகங்களுக்குச் சென்று மீண்டும் பிறக்கிறார்கள்.

## 151 வது நாள்

* பலனை உத்தேசிக்காமல் யாகம் செய்து பரமேஸ்வர அர்ப்பணஞ் செய்பவர்கள் சூர்ய மண்டலத்தைப் பிளந்து கொண்டு ஜோதி ரூபமான பெரிய உலகத்தை அடைகிறார்கள்.
* சகுண யீஸ்வர பக்தியின்றி நிர்க்குண யீஸ்வர பக்தி பிரயோஜனப் படமாட்டாது.

## 152 வது நாள்

* அஞ்ஞானத்தையும் மனத்தையும் விட்டுவிட்டவன் அதன் சொரூபத்தை உள்ளவாறு தெரிந்தவன்.
* உண்மையான பக்தர்களையும் ஞானிகளையும் ஏகாந்த யோகிகளையும் காணும்போது துர்ஜனங்களுக்குக் கூடப் பக்தி உண்டாகிறது.

## 153 வது நாள்

* தெய்வ பக்தியில்லாதவர்களும் மோட்ச ஆசையற்றவர்களும், பூறா கெட்ட குணங்களுள்ளவர்களும் நல்ல காரியங்களை விட்டவர்களும் ஜன்ம மரணங்களுக்குப் பயப்படாதவர்களும் உலகத்தில் ஒருவருமேயில்லை.
* உண்மையாக ஞானமடைந்தவர்கள் பக்தி யோகம் கர்ம யோகம் இராஜ யோகம் ஹடயோகம் இவைகளைக் குறைவாக நினைக்க மாட்டார்கள்.

## 154 வது நாள்

* கெட்டிக்காரர்களும் புத்திசாலிகளும் பண்டிதர்களும் எந்தவிதத்திலும் சூரர்களுக்குப் பெண்ணை கொடுக்க மாட்டார்கள்.
* எவனாயிருந்தாலும் தான் செய்த தோஷங்களைத் தப்பு என்றொப்புக் கொள்ளுகிறவன் உத்தமன்.

## 155 வது நாள்


* புண்ணிய பாபங்களினிடையே சுற்றிக் கொண்டிருப்பவன் லோகாந்தரங்களை அதிக்கிரமிக்கிறதில்லை.
* கற்பனா சாஸ்திரங்களை நம்பக் கூடாது.
* யுக காலங்களுக்கும் தேசங்களுக்கும் தக்கவாறு வெளி ஆசாரங்களை அங்கீகரிக்க வேண்டும்.

## 156 வது நாள்

* எவனாயிருந்தாலும் ஞானி உயர்ந்தவன்; அஞ்ஞானி தாழ்ந்தவன்.
* பட்சிகள் மிருகங்கள் மரம் செடி கொடிகள் இவைகளுக்கும் ஆத்மப் பிரஹ்ம ஞானம் போதிக்க வல்லவர்கள் ரிஷீஸ்வரர்கள்.
* மனதைப் பலாத்காரமாக விகாரப்படுத்தி அடக்குவதைவிடச் சுலபமாகச் சாந்தப்படுத்தி அடக்குவது சிரேஷ்டம்.

## 157 வது நாள்

* அஞ்ஞானிகளாற் செய்யப்பட்ட சாஸ்திரங்களையும் கலப்புள்ள நூல்களையும் மதத்துவேஷமான கிரந்தங்களையும் தள்ளிவிட வேண்டும்.
* எந்த வஸ்துக்களுக்காவது ஹிம்சை செய்து சம்பாதிக்கிற சுகங்களை எப்படியாவது விட்டுவிட வேண்டும்.




## 158 வது நாள்

* ஜட வஸ்துக்களைக் கொண்டு ஞானமடைய வேண்டுமென்றெண்ணுவது தப்பு.
* பிரபஞ்சத்தின் சம்பூர்ண சுகங்களை அனுபவிப்பதற்கு எந்த இடம் பொருள் ஏவல் அவஸ்யமாயிருக்கிறதோ அந்த இடம் பொருள் ஏவல்களை அடியோடு விட்டுவிட்டவர்களிடம் சம்பூர்ண ஞான சுகம் பிரதிபலிக்கிறது.

## 159 வது நாள்

* உண்மை புலப்படும்படியும் மனது கனிந்து இளகும்படியும் சந்தேகந் தீரும் படியும் யாருக்கும் அற்பங்கூட வெறுப்புத் தோற்றாதபடியும் தைரிய முண்டாகும் படியும் ஞான சம்பத்தோடு கூடினதாயும் பேச வேண்டும்.
* மோட்ச சாதனமான சரீரத்தை எக்காரணங்களைக் கொண்டும் யாதொரு விகாரமும் பின்னமும் செய்யக் கூடாது.




## 160 வது நாள்

* பிரதி உபகாரத்தை உத்தேசித்து ஒரு காரியத்தையும் செய்யக் கூடாது. ஞானமடைந்தவர்களைப்பற்றி யாதொரு விதமான நிபந்தனைகளையும் சொல்லக் கூடாது.
* உலகத்திலுள்ள எல்லா மதங்களின் வெளிச் சின்னங்கள் முழுமையும் விளையாட்டென்றெண்ணி விட்டுவிட வேண்டும்.

## 161 வது நாள்

* உற்பத்தி நாசமுடைய வஸ்துவாயிருந்தாலும் விசேஷமிருக்குமானால் அதை மதிக்க வேண்டும். சத்தில் அசத்தும் அசத்தில் சத்தும் தோற்றுவது சகஜம்.
* உண்மையை அறிய வேண்டுமானால் எந்த சாஸ்திரங்களுக்கும் சொந்த பாஷ்யம் செய்து கொள்ள வேண்டும்.




## 162 வது நாள்

* பரமாத்மாவை அறிய ஆரம்பத்தில் சமாதி தியானம் தாரணை பூஜை பாராயணம் ஜெபம் யோகம் வித்தை தபசு சித்தி இவைகள் புருஷர்களைப் போல ஸ்திரீகளும் அனுஷ்டிக்கலாமென்று அனுபவ வேதம் கூறுகிறது.
* எந்த வஸ்துவையும் பலாத்காரமாக அடக்குவதைவிட சிநேகமாக அடக்குவது நன்மை.


## 163 வது நாள்

* பிரஹ்மத்தைத் தவிர மற்றவைகளைப் பற்றிக் கூறுகிற சாஸ்திரங்கள் மயக்க மானவைகள்.
* எந்தக் காரியத்தையும் வேகமாகச் செய்வதைவிட மெதுவாகச் செய்வது விசேஷம்.



## 164 வது நாள்

* மதாசாரியர்களையும் குலாசாரியர்களையும் கருமப் புரோகிதர்களையும் உயர்ந்த ஆஸ்ரமிகளையும் ஜாதியர்களையும் அரசர்களும் கிரகஸ்தர்களும் வேலை வாங்கக் கூடாது.
* எந்தவிதமான தோற்றமும் மாயையின் ஜாலங்களென்று தள்ளி விடுகிற வர்கள் திடப்பிரக்ஞர்கள்.




## 165 வது நாள்

* பக்தி யோகிகளும் ஞான யோகிகளும் விரும்புகிற வஸ்து ஒன்றே.
* பொருள் ஒன்றின் காரணத்தினாலேயே உலகத்திலுள்ள சகலரும் ஒருவருக்கொருவர் சிநேகிக்கிறார்கள்.

## 166 வது நாள்

* மிகவும் தாழ்ந்ததும் மிகவும் உரப்புமின்றி நடுத்தரமான வார்த்தைகளை மார்போடு பேசுகின்றவர்கள் வாக்கின் உண்மையை அறிந்தவர்கள்.
* எத்தனை வித்தைகளும் பலத்தின் முன் நிற்பதில்லை.
* அசுத்த மாயைச் சுத்த மாயையால் வென்றபின் சுத்த மாயையையும் விட்டுவிட வேண்டும்.




## 167 வது நாள்

* சுத்த மாயையின் சகாயத்தைக் கொண்டே சரவேஸ்வர பகவான் சிருஷ்டி முதலிய சகல காரியங்களையும் நடத்துகிறான்.
* உலக ஜனங்களின் மரியாதையை உத்தமர்கள் விரும்பலாகாது.

## 168 வது நாள்

* திரவ்ய பலம் உலக பலம் சரீர பலம் வசன பலம் வீர்ய பலம் வித்யா பலம் மனோ பலம் புத்தி பலம் மந்திர பலம் மாயா பலம் யோக பலம் ஈஸ்வர பலம் தபோ பலம் ஞான பலம் ஆத்ம பலம் இவைகள் முறையே உயர்ந்தவைகள்.
* மனுஷ்யனாகப் பிறந்தவன் பதினைந்து பலத்துள் ஏதாவது ஒரு பலத்தைப் பெற்றவனாயிருக்க வேண்டும்.

## 169 வது நாள்




* சகுண மூர்த்தியினுபாசகன் சகுண மூர்த்தியினுலகத்தை அடைந்து அங்கு நின்று திரும்பாமல் பிரஹ்மத்தை அடைகிறான்.
* தேவயானா மார்க்கத்திற் செல்பவர்கள் பிரம்ம தேவரது சபைக்கும் பிதுர் யானா மார்க்கத்திற் செல்பவர்கள் பிரம்ம லோகத்திற்கும் செல்கிறார்கள்.

## 170 வது நாள்

* அர்ச்சிராதி மார்க்கத்தினால் பிரம்ம லோகம் சென்றவர்கள் பிரம்ம தேவர் அழிகிறவரை அங்கிருந்து கடைசியில் அன்னவர் அடைகிற சொரூபத்தை தாங்களும் அடைகிறார்கள்.
* அர்ச்சிராதி கதியால் பிரம்ம லோகம் செல்லப்பட்டவர்களுக்கு ஆதி வாஹிகர் அக்னி தேவர் முதலியவர்கள் சகாயமாயிருக்கிறார்கள்.

## 171 வது நாள்




* ஞானியினுடைய பிராணன் தேகத்தை விட்டு வெளியிற் செல்லுகிறதில்லை.
* ஹிருதயத்தினின்றும் புறப்படுகிற நூற்றெட்டு அந்தர்முக நாடிகளில் விசேஷமான பெரிய நாடியின் வழியாக ஜீவ சொரூபப் பிராணனைப் புறப்படச் செய்கிறவன் அர்ச்சிராதி கதியால் பிரமலோகத்தை அடைகிறான்.
* மனதை ஹிருதயத்தில் நிறுத்திப் பார்க்கும் போது ஓர் ஜோதி யோக சக்தியால் தோற்றப்படும்.

## 172 வது நாள்

* உண்மையான உபாசகனுக்கு உத்தராயண தட்சிணாயன பேதம் கிடையாது.
* இராத்திரியில் சூர்யன் தோற்றாவிடினும் அவனது கிரஹணம் இருக்கிறது.
* அர்ச்சிராதி கதி உத்தராயண கதி இவைகள் ஜீவன் முக்தனுக்கில்லை.

## 173 வது நாள்

* நினைத்தபடி முடிப்பவன் சத்திய சங்கல்பன்.
* முக்தனானவன் எதைச் சங்கல்ப்பிக்கிறானோ அதை அடைகிறான். தன்னளவிலும் பிறனளவிலும் சிருஷ்டித்து விடுகிறான்.
* விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டவன் முக்தனல்ல.




## 174 வது நாள்

* பரமேஸ்வரருக்கும் சகுணத்துவம் நிர்க்குணத்துவம் இரண்டுமிருக்கிறது.
* மனத்தைப் பரமாத்மாவிற் கரைத்துவிட்ட மஹாத்மாக்கள் ஸ்வல்ப முயற்சியால் பஞ்ச மூர்த்திகளின் செயல்களைச் செய்கின்றனர்.
* சிருஷ்டியை விரும்பாத முக்தனுடைய ஹிருதய உண்மையைப் பஞ்ச மூர்த்திகளும் அறிவதில்லை.

## 175 வது நாள்

* எந்தக் காரியமும் முடிகிற காலம் வரும்போது அதற்கேற்ற யுக்திகளும் அனுபவங்களும் சாதனங்களும் வலுவில் தோற்றுகின்றன.
* காலத்திற்கு முன் எவ்வித பலங்களும் யுக்திகளும் மற்றவைகளும் பயன் படுவதில்லை.




## 176 வது நாள்

* சகுணப்பிரஹ்மத்தின் உதவியைப் பெற்று நிர்க்குணப் பிரஹ்மத்தை வியாபிப்பதே அதி உத்கிருஷ்டமானது.
* பெண்களின் சரீர சுகத்தை மட்டும் விரும்புகிற புருஷர்கள் அவர்களின் ஆத்ம சுகத்தையும் சேர்த்து விரும்புவார்களானால் எவ்வளவோ விசேஷமானது.

## 177 வது நாள்

* உலக நாயகர்களின் ஸ்தூல சரீரத்திற்காகப் பிரயாசைப்படுகிற ஸ்திரீகள் ஆத்ம நாயகனுடைய சுகத்தை விரும்பித் தேடுவார்களானால் அழிவற்றதும் விசேஷமானதுமென்று தேவஹூதி தேவி சொல்லுகிறாள்.
* பெண்களின் சரீர சுகத்தை விரும்புகிறவர்கள் முதலின் தன் சரீர விசாரணை செய்து அதிலுள்ள குற்றங்களைக் கண்டு கொண்டு அப்பால் ஸ்திரீகளின் சரீர விசாரணை செய்ய வேண்டும்.




## 178 வது நாள்

* நியாயமில்லாமல் பிரஜைகளை உண்டாக்குவதால் உலகம் கெடும்.
* பகிர்முக காரியங்களில் மீதம் வைத்துக் கொண்டு அந்தர்முக காரியங்களில் பிரவேசிக்கக் கூடாது.
* யாரும் எந்த விஷயத்திலும் அவரவர்கள் எண்ணம்போல் எல்லோரையும் எண்ணுகிறார்கள்.

## 179 வது நாள்

* நீதியும் ஒழுக்கமும் இல்லாத அரசர்களும் பிரஜைகளும் உள்ள தேசத்தில் சூட்சும சரீரத்தோடு உலாவுகிற தேவர்களும் சித்தர்களும் ரிஷிகளுங்கூட வசிக்க விரும்புவதில்லை.
* ஞானி தன் சரீரத்தை விடும்போது சகல தத்துவங்களையும் தனக்குள் அடக்கிக் கொள்ளுகிறான்.



## 180 வது நாள்

* அர்ச்சிராதி கதியால் சூட்சும சரீரத்துடன் பிரம்ம லோகஞ் செல்லுகிற ஜீவர்கள் இடையிலுள்ள வாயு வருணன் அக்னி சந்திரன் சூர்யன் இந்திரன் முதலியவர்களுடன் சம்பாஷிக்கிறார்கள்.
* உபாஸனத்துக்கு இகலோகத்தில் முடிவு இல்லையாகையால் மரண பரியந்தம் உபாஸனம் செய்தே தீர வேண்டும்.

## 181 வது நாள்

* பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துக்களையும் பரமாத்மாவாக உபாசிக்கலாம். பரமாத்மாவிடத்தில் ஒரு வஸ்துவையும் கற்பிக்கக் கூடாது.
* வர்த்தமானப் பத்திரிகைகள் வயிற்றுப் பிழைப்புக்கும் சுயநலக் காரியங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும், ராகத் துவேஷத்தை விருத்தி செய்வதற்கும் அந்தர்முக உண்மையை மறைத்து விடுவதற்கும், ஞானயோக பக்தியோக கருமயோக சனாதன வைதீக மார்க்கத்திற்குத் தடையாயிருப்பதற்கும் ஏதுவாகிறது.

## 182 வது நாள்

* ஏகாக்கிர புத்தியை விரும்புகிறவர்களும் தபசிகளும் ஞானிகளும் அண்ட விசாரம் பிண்ட விசாரம் அஞ்ஞான விசாரம் பிண்டவுலக விசாரம் இவைகளைப் பற்றி நினைப்பதேயில்லை.
* துறவிகள் ஒருவரையும் சினேகிக்கலாகாது.

## 183 வது நாள்

* உயர்ந்தவனைத் தாழ்ந்தவனாக நினைக்கக் கூடாது; தாழ்ந்தவனை உயர்ந்தவனாக நினைக்கலாம்.
* பரமாத்மா தானென்று அத்வைதிகளும் பரமாத்மா தனக்கு ஆத்மாவென்று விசிஷ்டாத்வைதிகளும் பாவனை செய்து தியானிக்கிறார்கள்.

## 184 வது நாள்

* ஞானோதயமானவனுக்குப் பிரதிபந்தமிருந்தால் அதே ஜென்மத்தில் முக்தனாகிறதில்லை.
* இஷ்டம்போல் நினைப்பவர்கள் பேசுபவர்கள் செய்பவர்கள் நாஸ்திகர்களாகையால் அவர்களுடன் பழகவும் பேசவும் கூடாது.




## 185 வது நாள்

* ஞானியும் யோகியும் உபாஸகனும் தனது வைபவம் வெளிக்குத் தோற்றாது மறைத்து வைத்திருக்க வேண்டும்.
* பேத வாசனைகளை யுடையவன் மவுனவிருதமிருக்க வேண்டும்.
* குரு சிஷ்ய பாவமும், நாயக நாயகீ பாவமும் முன் ஜென்மாந்தர கர்மத் தொடர்பாலுண்டாகின்றன.

## 186 வது நாள்

* வெளியிற் செய்கிற பாப புண்ணியங்களைவிட உள்ளிற் செய்கிற பாப புண்ணியங்கள் பயனற்றவை.
* உலக அரசர்கள் தண்டிக்காத குற்றங்களுக்கு யமன் தண்டித்து விடுகிறான்.
* பகிரங்கத்திற் செய்யப்படுகிற பாபங்களுக்கு அரசன் தண்டிக்கிறான்; அந்தரங்கத்திற் செய்த பாபங்களுக்கு ஆண்டவன் தண்டிக்கிறான்.




## 187 வது நாள்

* யோக மஹிமையால் மனத்தையும் பிராணனையும் நிறுத்தி அந்தரங்க ஹிருதய தாமரையை மலரச் செய்து அதிலிருந்து கிடைக்கிற அமிர்த பானம் பண்ணுகிற மஹான்கள் வெளியாகாரத்தை விரும்புகிறதில்லை.
* அழியாத இடமும் அழிகிற இடமும் எங்குமிருக்கின்றன.

## 188 வது நாள்

* உண்மையாக அமிர்தம் கிடைக்கப் பெற்றவன் யாருக்குந் தெரியாமல் யாதொரு சந்தடியுமின்றி அதை உண்ண ஆரம்பிக்கிறான். அமிர்தம் கிடைக்கப் பெறாதவன் அமிர்தம் அமிர்தம் என்று கூறி அதன் சுபாவங் களைப் பற்றிப் பேசிக் கூச்சலிடுகிறான்.
* துக்கானுபவத்தைக் கொடுக்கக் கூடிய பாபமானது ஞானியையும் யோகியையும் உபாசகனையும் ஒன்றுஞ் செய்ய முடிவதில்லை.



## 189 வது நாள்

* அஞ்ஞான தசை முதல் முக்தி தசை வரையுள்ள சகல விவரங்களையும் சாஸ்திர மூலமாக கேள்வி மூலமாக பெரியோர்கள் மூலமாகவும் நன்றாகத் தெரிந்து கொண்டவர்களுக்கும் மனத்தின் பாபம் நீங்குவதில்லை. மோட்ச மார்க்கத்தில் செல்ல முடிவதில்லை.
* எதார்த்தமாகப் பிரஹ்மானுபவம் வாய்க்கப் பெற்றவன் யாதொரு சலனமுமின்றி ஏகாந்தமாக அனுபவிக்கிறான். அனுபவம் வாய்க்கப் பெறாதவன் பரமாத்மாவைப் பற்றியும் அதன் லட்சணங்களைப் பற்றியும் பேசுகிறான். பெரிய கூட்டத்தில் அளவிறந்த சாஸ்திரக் குவியல்களைத் திரட்டி வைத்துக் கொண்டு பேசிப் பேசி அலைகிறான்.

## 190 வது நாள்

* ஞானி போலானவன் ஞானத்தையடைய முயற்சிக்கிறான்; அஞ்ஞானி போலானவன் அறியாமையிற் பிரவேசிக்கிறான்.
* காமிய புண்ணியத்தாலுண்டாகிற விசேஷ போகங்களைக் கண்டு பெரிய தேவர்களும் பிரம்மிக்கிறார்கள்.




## 191 வது நாள்

* சுக துக்கங்கள் எந்த வஸ்விலிருந்துண்டாகின்றனவென்று கண்டுபிடித்து அதை அடியோடு நாசஞ் செய்ய வேண்டும்.
* உண்மை தெரிந்தவர்கள் முக்குண பக்தியையும் அங்கீகரிக்கிறார்கள்.
* சங்கல்பத்தை ஸ்வாதீனஞ் செய்து கொண்டவர்கள் மட்டும் சத்தியத்தினின்று நழுவுவதில்லை.

## 192 வது நாள்

* இன்ப துன்பங்கள் கலப்பில்லாத சுகத்தை விவேகிகள் விரும்புகிறார்கள்.
* சரீரத்திலுள்ள சகல தத்துவங்களின் உற்பத்தி லயம் செயல் சக்தி போக்கு ஆதாரம் இடம் உண்மை சலிப்பு நிலைமை வேகம் அடக்கம் முடிவு ஜெயம் இவைகளை அனுபவத்தில் தெரிந்து கொள்ள வேண்டும்.
* கர்மகாண்டப்படி சந்நியாஸ ஆஸ்ரமத்தை அடைந்தவர்கள் தாழ்ந்த ஆஸ்ரமங்களுக்கு இறங்கக் கூடாது.




## 193 வது நாள்

* யாதொரு வருணாஸ்ரமங்களுக்கும் கட்டுப்படாமல் அதிக்கிரமித்த அதி வருணாஸ்ரமிகள் வெகு சிலரே காணப்படுகின்றனர்.
* ஆத்ம ஞானமின்றி வருணாஸ்ரமங்களை விட்டவன் பதிதனாகிறான். அவன் பிராயச்சித்ததால் சுத்தனாகிறான்.

## 194 வது நாள்

* நைஷ்டிகப் பிரம்மசாரி மதுபானம் ஸ்திரீ சம்போகம் முதலிய பெரிய பாதகங்களைச் செய்து விட்டால் அக்னி பிரவேசம் செய்து விடவேண்டும். அல்லது கடினமான பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும்.
* பிராண சங்கடம் நேருங் காலத்தில் எதை உண்பதாலும் தோஷமில்லை.
* பரிசுத்தமான ஆகாரத்தைப் புசிப்பதால் புத்தி நிர்மலமாகிறது.



## 195 வது நாள்

* பிரம்மசரிய விரதத்தை முடித்துவிட்டுக் கிரஹஸ்தாஸ்ரமம் போகாதவர்களும் கிரஹதாஸ்ரமத்தை முடித்துவிட்டு வானப்பிரஸ்தாஸ்ரமம் போகாதவர்களும் வானப் பிரஸ்தாஸ்ரமத்தை முடித்துவிட்டுச் சந்நியாஸ ஆஸ்ரமம் பெறாதவர்களும் நிராஸ்ரமிகள்.
* செய்கிற கருமங்களையெல்லாம் பிரஹ்ம வித்தைக்குச் சாதகமாகச் செய்து கொள்ள வேண்டும்.

## 196 வது நாள்

* எல்லா ஆஸ்ரமிகளும் பிரஹ்மத்தை உபாசிக்கலாம்.
* தன்னுடைய சொரூபத்தை அறிந்து கொண்டே கர்மங்களைச் செய்கிறவன் பந்தப்படுகிறதில்லை.
* சரீர பந்தங்களை விட்டுக் கர்மங்களைச் செய்தால் சாந்தமுண்டாகிறது.

## 197 வது நாள்

* கர்மத்தை கர்மமாக்காமல் ஞானமாக்கி விடவேண்டும்.
* பேதவாசனை யொழிந்தவனுக்கும் மனது ஏகாக்ரத் தன்மையும் நிர்மலமும் ஆனவனுக்கும் ஞானோதய முண்டாகும்.
* பஞ்சாக்கினி வித்தையை உபாசித்தவன் அதன் பலத்தால் ஸ்வர்க்கம் அனுபவித்து மீண்டும் ஆகாயம் மேகம் பூமி புருஷன் ஸ்திரீ முதலிய ஐந்து அக்னியிலும் சம்பந்தப்பட்டு பிறக்கிறான்.




## 198 வது நாள்

* பரமாத்மா ஒன்றை மட்டும் தியானித்தவன் எல்லாவற்றையும் தியானித்தவனாகிறான்.
* கர்மாப்பியாசியிடம் ஞானத்தையும் ஞானப்பியாசியிடம் கர்மத்தையும் கூறக் கூடாது.

## 199 வது நாள்

* கர்மம் உபாஸனம் யோகம் ஞானம் இந்நான்கையும் ஜீவர்களின் பரிபக்குவ அதிகார நோக்கிப் போதிக்க வேண்டும்.
* எந்தக் காரியங்களிலும் முன்னும் பின்னும் ஆசமனம் செய்வதால் அந்தக் காரியம் சுத்தமாகிறது. போஜன காலத்தில் முன்பின் ஆசமனஞ் செய்வதால் பிராண வாயு திருப்தியடைகிறது.




## 200 வது நாள்

* பிரபஞ்ச ஜீவர்களின் பரிபக்குவ நோக்கி அதிகார தேவர்களாலும் ரிஷிகளாலும் சொல்லப்பட்டிருக்கிற சாஸ்திரங்களைக் குற்றஞ் சொல்லக் கூடாது.
* பிரஹ்மத்தைத் தவிர மற்றவை எவையானாலும் அதை அடைய எண்ணலாகாது.

## 201 வது நாள்

* அதிக சீதளமுள்ள இடங்களைவிட அதிக உஷ்ணமுள்ள இடங்களையே யோகிகளும் தபசிகளும் விரும்புகிறார்க்ள.
* உலக உபகார வடிவ கைங்கரியத்தை மீறுகிற சுதந்தர ஞானிகளும் பலரிருக்கிறார்கள்.




## 202 வது நாள்

* அவதார புருஷர்கள் சிருஷ்டி கர்த்தர்கள் அதிகார ரிஷிகள் பாஷ்ய கர்த்தர்கள் இவர்களால் அருளபபட்ட சாஸ்திரங்களையும் வேதாகமங்களையும் சகலாதீத அதிக்கிரம யோகிகள் அங்கீகரிப்பதில்லை.
* தெய்வீக அவதார புருஷர்களும் அதிகார ரிஷிகளும் பிரஹ்ம ஞானிகளும் ஞானாசாரியர்களும் உலகோபகாரமாகக் கர்மோபாசனைகளை நடித்துக் காட்டுகிறார்கள்.

## 203 வது நாள்

* பரிபக்குவமான ஞான ஜீவர்கள் காலாந்தரத்தில் யோக மஹிமையால் ரிஷிகளாகிறார்கள். அந்த ரிஷிகளே ஈஸ்வராக்ஞையால் பிரபஞ்ச அதிகார புருஷர்களாகிறார்கள். அவர்களே திரிமூர்த்திகள் பஞ்ச மூர்த்திகள் ஸ்கந்தர் கணேஸ்வரர் இவர்களாகிறார்கள்.
* பிரஹ்மத்தை ஜீவனாகத் தியானிக்கக் கூடாது. ஜீவனைப் பிரஹ்மமாகத் தியானிக்கலாம்.




## 204 வது நாள்

* உற்பத்தி லயம் தெரியாத வஸ்துக்களை அதிக்கிரமிக்க முடியாது.
* சகல இந்திரியங்களிலும் சப்த இந்திரியமே பலமுடையது.
* மனித சரீர உபயோகத்திற்காக ஒன்பது துவாரத்தையுண்டாக்கிய கடவுளுக்கு கடுக்கன் புலாக்கு முதலிய ஆபரணங்கள் தரித்துக் கொள்ளலாமென்ற எண்ணமிருந்தால் அதற்கு வேண்டிய சிறிய துவாரங்களைச் சிருஷ்டித்திருப்பார்.

# 205 வது நாள்

* எண்ணிக்கைக்கு அடங்காத மாயா சக்திகளையும் மனோ சக்திகளையும் ஒரே சக்தியால் இல்லாமற் செய்து விடலாம்.
* ஆசை கோபம் லோபம் மயக்கம் துவேஷம் இவைகளுக்கு ஆதார ஸ்தானம் ஒன்று.
* பற்றுக்கு ஆதாரமெதுவென்றாராய்ந்து அதை விடாமல் வெறும் பற்றை மட்டும் விடுவதால் மீண்டும் அப்பற்று முளைக்க ஆரம்பிக்கிறது.




# 206 வது நாள்

* தபோ சக்தி பெற்றவன் அதைச் சாப முதலிய வீண் காரியங்களுக்கு உபயோகப்படுத்தி விடாமல் ஞான மார்க்கத்திற்கோ அல்லது உலக உபகார காரியங்களுக்கோ சாதனமாக்கிக் கொள்ள வேண்டும்.
* ஒரே புருஷனே சூரியனுக்கு மத்தியிலும் நேத்திரத்திற்கு மத்திய ஸ்தானத்திலும் காணப்படுகிறான்.

# 207 வது நாள்

* ஞான யாகத்திற்கு எஜமானன் ஆத்மா மனைவி சிரத்தை சமித்துக்கள் சரீரம் இந்திரியங்கள் யாக சாலை மார்பு பசுக்கள் காமாதிக் கூட்டங்கள்.
* தபோ உஷ்ணத்தையும் யோக உஷ்ணத்தையும் அதிகமாக்கிக் கொண்டவன் தீவிரமாகப் பிரஹ்மத்தை நோக்கிச் செல்லுகிறான்.



# 208 வது நாள்

* பிரஹ்ம ஞானத்திற்குச் சத்துருக்கள் நாசமடைய வேண்டுமென்று சர்வேஸ்வர எம்பெருமானை ஸ்மரித்து வரவேண்டும்.
* பகவானிடம் அனித்தியமான வரங்களையும் பிரார்த்தனைகளையும் கேட்கலாகாது.

## 209 வது நாள்

* சகுணப் பிரஹ்மோபாசகனுக்கு அர்ச்சிராதிகதியால் பிரகிருதி மண்டலத்தைத் தாண்டுகிற வரையில் சில சூட்சும கர்மங்களும் பிராகிருத சூட்சும சரீரமும் இருக்கின்றன.
* ஸ்கந்தர் வசிஷ்டர் வியாசர் அகஸ்தியர் முதலியவர்கள் தெய்வீக சக்தி பெற்ற அதிகார புருஷர்கள். அவர்களுக்கு இன்னும் பிராரத்தம் நசிக்க வில்லை. நசித்தவுடன் மாறாத முக்தியை அடைவார்கள்.

## 210 வது நாள்

* பிரஹ்மத்தை அறிய விரும்புகிறவர்கள் ஒரு மதத்திலும் ஒரு வேதத்திலும் ஒரு வஸ்துவிலும் அழுத்தம் வையாமல் தன்னிடத்தில் மட்டும்அழுத்தம் வைத்திருக்க வேண்டும்.
* காய் கனியுள்ள மரங்களில் கல்லெறிவதால் பாபமுண்டாகிறது.
* தேவர்களுக்கெல்லாம் தேவனும் தலைவனும் ஈசனுமான புருஷன் எதை பெரிதாக எண்ணி தியானிக்கிறானோ அந்த வஸ்துவையே நாமும் தியானிக்க வேண்டும்.

## 211 வது நாள்


* பூமி அதிரும்படி நடக்கக் கூடாது; திடுக்கிடும்படி பேசக் கூடாது.
* எந்த வஸ்துவையும் கூர்ந்து பார்க்கக் கூடாது.
* சகலத்தையும் பேதமாகப் பார்ப்பவன் சன்னியாசி.
* சுய நன்மையைக் கருதுபவர்களைக் காட்டிலும் பிறர் நன்மையைக் கருதுபவர்கள் எத்தனையோ மடங்கு விசேஷமானவர்கள். நிஷ்காமகர்மிகள் பலனை அடைகிறார்கள்.

## 212 வது நாள்

* ஆத்மாவில் மனதை அடக்க ஆரம்பித்தவன் அபார சக்தியுள்ள மஹா வீர்யவானான யுத்த வீரன் போலிருக்க வேண்டும்.
* பிரணவ வுபாசனையின் முடிவில் நாதப் பிரஹ்மமும் அதனுச்சியில் நாதாந்தமும் அதன் முடிவில் ஆத்மாவும் அதனுபாசனையால் பரமாத்மாவும் பிரகாசிக்கிறது.

## 213 வது நாள்

* தீர்களான எவ்வனப் பருவமுடைய காம புருஷர்கள் மன்மத கோலாகல சாஸ்திரப்படி தங்களுக்குத் தகுந்த அதிரூபலாவண்ய பால்ய ஸ்திரிகளைப் பலவித லட்சணங்களோடு போகஞ் செய்வதுபோல ஜெகதீஸ்வரனும் பிரகிருத தத்துவ சாஸ்திரப்படி நானாவித சக்தி லட்சணங்களோடு மாயையைப் போகம் செய்கிறான்.
* அவித்யா சம்பந்தத்தினால் ஜீவனுடைய அனாதி மாயையின் உண்மை மறைவுபட்டிருக்கிறது.



## 214 வது நாள்

* பகவத் தியானத்தினால் ஜீவனுடைய ஆதி மாயை நசிக்கிறது.
* மாயா சக்தியினால் ஜீவர்களுடைய சர்வக்ஞத்துவ சத்திய சங்கல்பத்துவ சதாசாரங்கள் மூடப்பட்டிருக்கின்றன.
* அஞ்ஞானத்தை நாசஞ் செய்துவிட்ட ஜீவன் நினைத்ததை முடிக்க வல்லவனாகிறான்.

## 215 வது நாள்

* பிரஹ்மப் பிராப்தியைத் தவிர மற்ற பிராப்திகளைக் கொடுக்கிற வித்தைகளெல்லாம் கர்ம வித்தைகள்.
* மானஸ யாகத்தை வருணாஸ்ரம பேதமின்றி ஸ்திரீ புருஷ தாரதம்மியமின்றி யாரும் அனுஷ்டிக்கலாம்.
* பகிர்முக விருத்தியோடு போஜனஞ் செய்பவர்கள் யாரும் பிராணாக்னி ஹோத்திரம் செய்ய வேண்டும்.



## 216 வது நாள்

* ஒரு புருஷாயுள் வரையுள்ள முப்பத்தாறாயிரம் நாட்களுக்கும் முப்பத்தாறாயிரம் அக்னிகளை மனதே சிருஷ்டித்துக் கொள்ளுகின்றது.
* மனத்தை அடக்க வேண்டியவர்கள் ஹிருதய வுபாசனை செய்ய வேண்டும்.
* எந்தக் காரியத்தையும் ஆரம்ப முதல் முடிகிற வரை ஒருவருக்கும் தெரியாமல் முடித்துவிடுவது உத்தமம்.

## 217 வது நாள்

* மனத்தினால் எது நினைக்கப்படுகிறதோ அதை வாக்கிற் பேசுவதும் வாக்காற் பேசுவதைச் சரீரத்தாற் செய்வதும் சுத்தமானவர்களுக்கு லட்சணம்.
* மாதா பிதாக்களின் வம்சங்களிரண்டும் சுத்தமாயிருக்கப் பிறந்தவனது சரீரமும் கர்மமும் பரிசுத்தமானது.
* காரியம் வீரியம் இவ்விரண்டில் வீரியம் பெரிதும் பலமுடையதுமாயிருந்தாலும் காரியம் முடிகிறவரை வீரியத்தை அடக்கி வைத்திருக்க வேண்டும்.

## 218 வது நாள்

* மேகமானது பலவித ரூபத்தோடு ஆச்சரியப்படும்படியாகத் தோற்றி நொடிப் போதில் மறைந்து விடுந் தன்மையுடையது பகிர்முக கந்தர்வ நகரம்.
* சூரிய பிரகாசமில்லாத தேசத்தில் வசிப்பவர்கள் தங்களது சரீர பிரகாசத்தினால் இருளைப் போக்கிக் கொண்டு சஞ்சரிக்கிறார்கள்.
* தேவர்களுக்கு எப்போதும் இருபத்தைந்து வயதாகவேயிருக்கிறது.

## 219 வது நாள்

* சூர்யன் சந்திரன் சுக்கிரன் புதன் செவ்வாய் வியாழன் சனி இவ்வேழு மண்டலங்களும் பூமண்டலத்திற்கு மேலே மேல் மேலாக முறையே அமைந்திருக்கின்றன.
* சனி மண்டலத்திற்கு மேல் சப்த ரிஷி மண்டலமும் அதற்கு மேல் துருவ மண்டலமும் இருக்கிறது.

## 220 வது நாள்

* துருவ மண்டலத்திற்கு மேல் மஹத்துக்கள் வசிக்கிற லோகமும் அதற்கு மேல் ஜனகாதியர் உலகமும் அதற்கு மேல் தபசிகள் யோகிகள் வசிக்கிற உலகமும் அதற்கு மேல் சத்திய வுலகமும் இருக்கின்றன.
* ஸ்நானம் முதலியவைகளை இழந்து செய்கிற தவம் விசேஷமானது.
* சரீர தேஜசாலும் உருவத்தாலும் சத்துவ காம்பீர்யத்தாலும் ஜிதேந்திரியர்கள் என்பது விளங்கும்.

## 221 வது நாள்

* நெடுநாள் சிநேகிதத்தை ஒரு நொடிப் பொழுதில் ஸ்திரீகள் கெடுத்து விடுவார்கள்.
* ஆசையுள்ள வரையில் யாவருக்கும் சஞ்சாரம் இருந்து கொண்டேயிருக்கும்.
* தாழ்ந்தவர்களின் தாழ்ச்சியை உயர்ந்தவர்கள் நினைக்கக் கூடாது.

## 222 வது நாள்

* விளையாட்டுக்காகவது பிரதிபலத்தை விரும்பியாவது மனதில் விருப்பமின்றியாவது ஒருவருக்கும் ஒரு உபகாரமும் செய்யக் கூடாது.
* காமக் குரோதங்களை ஜெயித்தவன் பிராம்மணத் தன்மை பெற்றவன்.
* அழிந்து போகிற புண்ணிய காரியங்களில் அவிவேகிகள் பிரவேசிக்கிறார்கள்.
* கோபம் சாபம் காமம் இம்மூன்றினால் தபோ சக்தி குறைந்து போய் விடுகிறது.

## 223 வது நாள்


* கிருஷ்ணாஜனம் புலித்தோல் முதலியவைகளில் தலைப்பக்கம் காலையும் கால் பக்கம் தலையையும் வைத்துப் படுக்கக் கூடாது.
* தெற்குக் கிழக்குத் திக்குகளில் தலை வைத்து நித்திரை செய்வதால் சுத்த தேவதை குடி கொள்ளுகிறது.
* பர்த்தாவோடு கூடியிருக்கிற ஸ்திரீகளுக்கு பர்தாவின் அனுமதியின்றித் தவம் யோகம் உபதேசம் முதலியவைகளில் சுதந்தரத்துவம் கிடையாது.

## 224 வது நாள்

* சண்டாளன் ஜலம் ஸ்திரீ அக்னி சர்ப்பம் இடி மலை பசு வீடு மரம் பற்களுள்ள ஜந்துக்கள் இவைகளாலும் பிராம்மண சாபத்தாலும் மரணமான வர்களுக்குச் செய்யப்படுகிற ஜல தர்ப்பணம் சிரார்த்தம் முதலிய பரலோக காரியங்களின் பலன்கள் அவர்களுக்குப் போய்ச் சேராமல் இடையிலேயே நசித்து விடுகின்றன.

## 225 வது நாள்

* கனவில் தோன்றிய வஸ்துக்களை நனவிற் கண்டனுபவிக்கக் கூடிய அற்புத மகிமை வாய்ந்த ருஷ்யமுக பருவத சிகரம் போன்ற ஸ்தானங்கள் பரத கண்டத்தில் பல இருக்கின்றன.
* ஆத்ம ஞானமில்லாத ஒரு காரணத்தினால் ஒருவருக்கொருவர் துவேஷமும் பொறாமையுமுண்டாகின்றன.




## 226 வது நாள்

* சிநேகிதனை ரட்சிக்கும் பொருட்டுப் பொய் கூறுவதால் குற்றமில்லை.
* மிகுதியும் வஞ்சகமாயுள்ளவன் தன் கருத்தை மறைத்துக் கொண்டிருப்பான்.
* மறைவாகக் கெட்ட எண்ணமுடையவர்கள் தெளிவான மனத்துடன் எதிரே வரமாட்டார்கள்.

## 227 வது நாள்

* தெளிந்த முகமுடையவர்கள் சுத்தமானவர்கள்.
* முக விகாரம் புழுக்கம் தழுதழுப்பு அங்க சேஷ்டை இவைகளையுடையவர்கள் துஷ்ட அபிப்பிராயமுடையவர்கள்.
* சிறந்த வஸ்துவாயிருந்தாலும் கலகத்திற்குக் காரணமாயிருந்தால் அதை விட்டுவிட வேண்டும்.



## 228 வது நாள்

* சூர்யன் ஆகாயத்தின் நடு மத்தியிலிருக்கிற அபிஜித் முகூர்த்தத்தில் பிரயாணமாகிற காரியங்கள் ஜெயமாகும்.
* யாதொரு சரீர சம்பந்தமுமில்லாத விதேக முக்தியை வியாபிப்பதே எந்த மார்க்கத்திலும் விசேஷமானது.
* திரிமூர்த்திகளின் பெரிய செயல்கள் சிருஷ்டி கர்த்தர்களின் அருமையான செய்கைகள், ரிஷிகளின் ஆச்சரியமான சித்திகள் மற்றுமுள்ள பிரபஞ்சப் பிரம்மைகள் இவைகளெல்லாம் பிரஹ்ம ஞானமில்லாதவர்களுக்குப் பெரிதாகத் தோன்றுகிறது.

## 229 வது நாள்

* சரணமடைந்தவன் எவ்வளவு தோஷமுள்ளவனானாலும் கைவிடக் கூடாது.
* மனதை ஏகாக்கிரப்படுத்திக் கொண்டு யோகமாவது தவமாவது செய்ய ஆரம்பித்தால் உருவமுள்ள தடைகளும் உருவமில்லாத தடைகளும் வந்து சேருகின்றன.

## 230 வது நாள்

* ஒரு பிரயோஜனத்தையும் உத்தேசிக்காமல் ஒருவனிடம் ஒருவன் வர மாட்டான்.
* கலப்பில்லாத தனி ஞானத்தோடிருப்பவர்களைக் காட்டிலும் பக்தியோக கர்ம யோகங்களைக் கொண்டவர்கள் விசேஷமானவர்கள்.
* சொந்தப் பிரயாண காலத்திலோ கிருஹப் பிரவேசத்திலோ, விவாக காலத்திலோ வலது காலை முதலில் எடுத்து வைக்க வேண்டும். சத்துருக் களுடைய வீட்டிலோ கிராமத்திலோ இடது காலை வைக்க வேண்டும்.

## 231 வது நாள்

* தலைவன் ஒரு காரியங் செய்ய வேண்டுமென்று நியமித்து அனுப்புகையில் அதற்கு விரோதமின்றி அனுகூலமாக மேலான பெரிய காரியங்களையுங் சாதித்துக் கொண்டு வருபவன் உண்மையான தூதன்.
* தவம் பெருக ஆரம்பித்தால் ஜீவாத்மா சரீரத்தினின்று நழுவி ஜோதி லோகங் களை எதிர்ப்பார்க்கும்.

## 232 வது நாள்

* சங்கல்பத்தையொடுக்க ஆரம்பித்தவர்கள் ஒருவிதமான வெளித் தர்மங் களையும் அனுஷ்டிக்க வேண்டியதில்லை.
* எந்த மனுஷ்யனும் தேவனும் நான்கு நுகத்தடி தூரம்வரை ஒருவருமில்லாத படியிருந்து கொண்டு தூங்க வேண்டும்.
* பசுவைக் காலால் உதைக்கவும் மிதிக்கவும் கூடாது.

## 233 வது நாள்

* எப்பொழுது அதர்மம் தர்மத்தை பாழாக்குகிறதோ அப்பொழுது கலியுகமென்றும் எப்பொழுது தர்மம் அதர்மத்தை பாழாக்குகிறதோ அப்பொழுது கிருத யுகமென்றும் கண்டு கொள்ள வேண்டும்.
* நான்காவது ஜாமத்தில் சூரிய பரிவேடம் தோற்றுமானால் உலகம் அழியும். சூரிய மண்டலம் துவாரமாகத் தோற்றினால் இராஜாங்கம் அழியும்.

## 234 வது நாள்

* மனுஷ்யன் தெய்வத் தன்மைபெற்றிருந்தால் மனுஷத் தன்மையையே வெளியில் காட்டிக் கொண்டிருப்பான்.
* உண்மை ஞானி உலகத்தை வேறாகவும் தன்னை வேறாகவும் காண்பதில்லை.
* அனித்திய காரியங்களின் சித்திகளை விரும்புவதை விட்டுவிட்டு நித்தியத்தின் சித்தியை விரும்பி முயற்சி செய்கிறவர்கள் நித்திய சித்தர்கள் ஆகிறார்கள்.

## 235 வது நாள்

* தெரியாததை தெரிந்ததென்றாவது தெரிந்ததைத் தெரியாததென்றாவது எதார்த்தமானவர்களிடத்தில் காட்டிக் கொள்ளக் கூடாது.
* உள்ளங்கை உள்ளங்கால் முகம் இம்மூன்றிடங்களிலும் பர்வதம் தாமரை சங்கம் சக்கரம் இந்நான்கின் ரேகைகளுள்ளவர்கள் ராஜயோக சாமுத்திரிக லட்சணமுடையவர்கள்.

## 236 வது நாள்

* பகன் என்னும் சூர்யன் உச்சத்திலிருக்கக் கூடிய காலத்தில் விந்தம் என்னும் முகூர்த்தத்தில் பிறக்கிற பெண் குழந்தை ராஜாத்தியாகவும் ஆண் குழந்தை யோகியாகவும் ஆகிறது.
* வாக்குத் தத்துவத்தின் அதி தேவதையை உபாசித்து வாக்கை அந்தராத்மாவில் அடக்கிக் கொள்ள வேண்டும்.
* எந்த விஷயமும் தனக்குத் தெரியவில்லையானால் தெரியவில்லையென்று சொல்லிவிட வேண்டுமே தவிர அதில் குற்றங் கண்டுபிடிக்கக் கூடாது.

## 237 வது நாள்

* தன் ஆத்மாவில் அன்பில்லாதவன் ஒரு யோகத்தையும் அடையப் போவதில்லை. ஆண்டவனும் அருள்புரிய ஏதுவில்லை.
* பாபிகளான ஈன ஜாதிகளுக்கு உயர்ந்த ஜாதிக்காரர்கள் ஊழியம் செய்யக் கூடாது.
* எள் சம்பந்தப்பட்ட எந்தப் பதார்த்தங்களையும் தேவ பிதுர் காரியங்களுக்கு உபயோகப்படுத்தாமல் உண்ணக் கூடாது.

## 238 வது நாள்

* குரு உபதேசத்தை மறந்தவன் மஹா பாபத்தை அடைகிறான்.
* காலத்தையும் கர்மத்தையும் ஈஸ்வரனையும் நம்பியவன் ஒன்றிலும் கலக்கமடைய மாட்டான்.
* உதராக்னியான பசியைத் தணிப்பதனிமித்தம் உண்ணக் கூடிய ஆகார வர்க்கங்களில் இது நல்லது இது கெட்டது இது வேண்டும்; இது வேண்டாம் இது சம்மதமானது இது சம்மதமில்லாதது என்றெண்ணுகிறவர்கள் வயிற்றை அடக்க முடியாதவர்கள். அவர்களால் நாவையும் குறியையும் அடக்க முடியாது.

## 239 வது நாள்

* கருமயோகி பக்தியோகி ராஜயோகி ஆத்மயோகி ஹடயோகி ஞானயோகி இவர்கள் ஒவ்வொருவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற நிபந்தனைகள் வேறு வேறானவைகள்.
* இன்ன படிதானிருக்க வேண்டும் இன்ன இடத்தில்தான் வசிக்க வேண்டும் இவ்வளவு காலம் தானிருக்க வேண்டும் இன்ன செய்கைதான் செய்ய வேண்டும் இத்தனை பேருடனும் இன்ன பேருடனும் தானிருக்க வேண்டும் இவ்வளவு சக்திதானுள்ளது என்ற நிபந்தனை உடையவர்கள் எவராயிருந்தாலும் பந்தமுடையவர்கள்.

## 240 வது நாள்

* பிரகிருதி மாயை முக்குணம் மூன்று சரீரம் மூன்றவஸ்தை மனம் இந்திரியங்கள் இவைகளே சம்சார பந்தமென்ற கண்டு கொள்ள வேண்டும்.
* விஷய சுகங்களின் தன்மை போக்கு சக்தி முடிவு அர்த்தம் அனர்த்தம் பலன் இவைகளின் ரகஸ்யங்களைத் தெரிந்து கொண்டபின் அதைவிட ஆரம்பிக்கலாம்.
* பிரஹ்ம திருஷ்டியினின்று நழுவாமல் விஷய போகங்களை அனுபவிப்பவன் உலகத்தை முற்றுந் துறந்த துறவியே ஆவான்.

## 241 வது நாள்

* பற்றில்லாமற் செய்யப்படுகிற எந்தக் கர்மங்களும் செய்பவர்களை பற்றுகிற தில்லை.
* ஸ்திரீ புருஷ சுகங்களின் உண்மைகளையும் மேன்மை தாழ்மைகளையும் உள்ளவாறு அறிந்து கொண்டவர்கள் அதற்கும் மேலான சுகத்தை அறிய ஆசைப்படுகிறார்கள்.

## 242 வது நாள்

* துக்கம் ஆசை சுகம் துவேஷம் அதிகாரம் அன்பு அறிவு அகண்டம் இந்தப் பாவனைகளால் சகல ஜீவர்களும் உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
* எவன் சன்மார்க்க யோகியும் தபசியும் ஞானியுமாயிருந்தும் பிறரால் தூஷிக்கப் பெறுகிறானோ அவன் பூர்வ புண்ணியசாலி.

## 243 வது நாள்

* செய்யப்படுகிற புண்ணிய பாபங்களுக்குப் பலானுபவம் எப்போது மில்லையென்று சாதிக்கிற நாஸ்திக மதவாதமானது சூட்சும புத்தியில்லாத விஷய ஆசைகளோடு கூடிய உலக மயக்கமுடையவர்களால் அங்கீகரிக்கப்படுகிறது.
* அர்த்தந் தெரியாமற் செய்யப்படுகிற எந்தக் காரியங்களும் பிரயோஜனப்பட மாட்டாது. அதுபோல அவமானமும் அறிவீனமும் வேறில்லை.
* பொய்யை மெய்போல நடித்துக் காட்டுகிறவன் சத்தியவாதி; மெய்யைப் பொய் போல நடித்துக் காட்டுகிறவன் அசத்தியவாதி.

## 244 வது நாள்

* அவரவர்களின் சொந்த ஸ்திரீகளுக்குப் பரபுருஷர்களின் சம்பாஷணங்கள் நேராதபடி ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.
* வாக்குத் தத்துவத்தையும் மனோதத்துவத்தையும் சரீரதத்துவத்தையும் அதன தன் உற்பத்திகளோடு அதிதேவதைகளுடன் கண்டறிந்து அவற்றை ஜென்ம ஏதுவில்லாத பரிசுத்த நிலைமையில் வைத்துக் கொள்ள வேண்டும்.
* அவ்யக்தமான பிரஹ்மத்தினது சிறிது சக்தியைப் பெற்றுக் கொண்டு பஞ்ச மூர்த்திகள் ரிஷிகள் அவதார புருஷர்கள் இவர்கள் பல பெரிய காரியங் களைச் செய்கிறார்கள்.

## 245 வது நாள்

* எப்போதும் மனத்தை யாதொரு சம்சயமுமின்றித் தெளிவாக வைத்துக் கொண்டிருப்பது தெய்வ சக்தியாலுண்டாகிறது.
* அன்ன ஆகாரங்கள் போகங்கள் முதலிய உலகங்களை வெறுத்து ஆரண்யத்திற் சென்று தவஞ் செய்கிறவர்களில் அஞ்ஞானிகளுண்டு; உலக போகங்களில் ஆழ்ந்தியவர்களின் பாவனைபோல் காணப்பட்டுப் பெரிய நகரங்களில் உலக விவகாரம் செய்து கொண்டிருப்பவர்களில் ஞானி களுண்டு.

## 246 வது நாள்

* பக்தி யோகிகள் பராதீன சக்தியுடையவர்கள் ஆத்ம யோகிகள் சுவாதீன சக்தியுடையவர்கள்.
* ஞானிகள் யோகிகள் பக்தி மான்கள் ஆசாரியர் மாதா பிதா பெரியோர் இவர்களது பாதங்களைத் தொட்டு நமஸ்கரிப்பதனால் புண்ணிய சக்தி வளர்கிறது.
* சர்வக்ஞர்களும் சத்திய சங்கல்ப வாதிகளுங்கூடக் காலத்தை எதிர்க்க முடிவதில்லை.

## 247 வது நாள்

* உண்மையான ஞான திருஷ்டியுடையவர்கள் ஒரு மதத்தையும் ஆசாரியர் களையும் இராஜாங்கத்தையும் கொள்கைகளையும் மார்க்கங்களையும் குறை கூற மாட்டார்கள்.
* பிரகிருதியைத் தாண்டிய மஹா புருஷனால் செய்யப்பட்ட சாஸ்திரங்கள் மட்டும் மனோ சலனத்தையும் மயக்கத்தையும் தீர்க்கக் கூடியது.

## 248 வது நாள்

* உலகத்திலுள்ள ஒவ்வொரு ஆசைகளும் ஒவ்வொரு இந்திரியங்களுக்குச் சுகத்தைக் காட்டி மயக்கும். பெண்ணாசை ஒன்று மாத்திரம் ஏக காலத்தில் எல்லா இந்திரியங்களுக்கும் இன்பத்தைக் காட்டி ஏமாற்றி விடும்.
* உள்ளிருந்துண்டாகிற பயத்தைத் தவிர வெளிப் பயம் ஒன்றுமில்லாதவன் நித்திய விவேகி.
* பிரார்த்த கர்மமானது கால சக்தியை அனுசரித்துக் கொண்டு அப்போதைக் கப்போது புத்தியை மாற்றிக் கொண்டு போகிறது.

## 249 வது நாள்

* ஒன்றிலுந் தாக்கற்று ஒன்றையும் அனுசரியாது ஒன்றிலும் பற்றின்றி ஒரே வஸ்துவாய் இருப்பது கடவுள்.
* சகலமும் தன்னிடத்திலிருந்துண்டாகிறதாக எவனுக்கு அனுபவத்தில் தோற்றுகிறதோ அவன் சங்கல்பத்தை ஜெயித்தவன்.
* ஒரு சிஷ்யன் ஒவ்வொரு விஷயத்திற்காக ஒவ்வொரு குருவை அடையலாம்.

## 250 வது நாள்

* மஹாத்மாவாகிய தத்தாத்திரேய மஹரிஷிக்கு இருபத்து நான்கு குருவும் விசிஷ்டாத்வைத மத ஆசாரியராகிய இராமானுஜாசாரியருக்கு ஐந்து குருவும் இருந்திருக்கிறார்கள்.
* பிரஹ்ம பாவனையால் எல்லோரும் ஒன்று; அந்தக்கரண பாவனையால் எல்லோரும் வேறு.
* நான் எனது என்னும் அபிமானத்தால் அகங்காரத்தை அடைந்திருக்கிற ஜீவாத்மாக்களின் அறிவின்மை போன்று வேறு உலகத்திலில்லை.

## 251 வது நாள்

* அந்தர்முக ஆத்மானுபவத்திற் பழகியறியாத ஸ்தூல புத்தியுடையவர்கள் பகிர்முக அனித்தியக் காட்சிகளில் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைகிறார்கள்.
* ஞான யோகம் பக்தி யோகம் கரும யோகம் இம்மூன்று யோகங்களும் ஒரே வஸ்துவைக் குறிப்பதாயிருந்தாலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு வேறுபாடுகளும் சாதன வேற்றுமைகளும் பிரதிபலிக்கின்றன. இந்த யோகங்களுக்கும் இடையிடையே பல நூற்றுக்கணக்கான சூட்சும யோகங்களும் மறைந்து கிடைக்கின்றன.

## 252 வது நாள்

* சிறிய அனுபவத்தால் பெரிய வுலகத்தைச் சிறியதாக ஆக்கிக் கொண்டவர்கள் சித்தர்கள்.
* இருந்துமில்லாத வஸ்துவும் இல்லாமல் இருக்கிற வஸ்துவும் ஒன்றென்று வாதிக்கிற சூன்யவாதிகளுடைய தர்க்கம் யுக்திக்குப் பொருந்தவில்லை.
* பிரபஞ்சத்திலுள்ள வஸ்துக்கள் தனக்கு அன்னியமாகத் தோற்றும்போது அஞ்ஞானமும் தானாகத் தோற்றும்போது ஞானமும் உதயமாயிருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

## 253 வது நாள்

* விஷய இச்சைகள் போவதுதான் கடினம்; ஞானோதயமாவது சுலபம்.
* துவாரகபுரிவாசனனான ஸ்ரீ கண்ணபிரான் ஏழு திரைக்குள்ளிருந்து பேசினான். அயோத்தியாதிபதியான ஸ்ரீ ராகவர் ஒன்பது திரைக்குள்ளிருந்து பேசிவிட்டார். விதேக ஜனகராஜன் பதிநான்கு திரைக்கப்பாலிருந்து சம்பாஷித்தான். தீர மஹா பிரமசாரியாகிய பீஷ்மாசாரியர் ஆறு திரைக்குள்ளிருந்து பேசியிருக்கிறான். பக்தர்களின் சகஜலோலனாகிய ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் எட்டுத் திரைக்குள்ளிருந்து மொழி பகர்ந்தான். அழிவற்ற சரீரமுடைய கிருஷ்ணத்வைபாயனர் இருபத்து மூன்று திரைக்கப்பாற் போய் அங்கிருந்து பேசினார். ஞான சொரூப காருண்யபரராகிய புத்த பகவான் ஐந்து திரை மறைவிலிருந்து வார்த்தையாடினான். பிரம்ம புத்திரராகிய வசிஷ்ட மஹரிஷி பனிரெண்டு திரைக்கப்பாற் பேசினான். பிரகிருதி வசமாகாத கபில மஹரிஷி மூன்று திரைக்குள்ளிருந்து உபதேசித்தான். பரமாத்ம நிஷ்டாபரராகிய ஜடகோப முனீஸ்வரர் நான்கு திரைக்குள்ளிருந்து வசனம் புகன்றிருக்கிறார். சகல பேதங்களையும்அறுத்தெறிந்த சுகப் பிரஹ்ம ரிஷி ஐந்து திரைக்கப்பாற் போய்ப் பேசினான். சாந்த சகஜ நிஷ்டானுபூதி வாய்ந்த தத்தாத்திரேய முனிவர் ஆறு திரைக்குள்ளமர்ந்து உபதேச மொழி பகர்ந்தார்.

## 254 வது நாள்

* இக லோக வாழ்வு பரலோகப் பழக்கம் மோட்ச இன்பம் இம்மூன்றின் இரகசியங்களை நன்றாயுணர்ந்து அவைகளின் அதி ஆச்சரியமான சம்பந்தம் வைத்துக் கொண்டும் உலக சஞ்சாரமுடையவர்கள் ராஜரிஷிகள்.
* பகிர்முக லௌகீக உலகத்தில் அதிசூட்சமமும் காம்பீரயமும் செல்வாக்கும் செல்வமும் பலமும் பொருந்தியிருக்கப்பட்டவர்கள் சன்மார்க்கர்களாயிருப்பது நலம்.

## 255 வது நாள்

* வேத சாஸ்திரங்களுக்கும் ஆதி வைதீக சனாதன தர்ம மஹரிஷிகளுக்கும் விரோதமானதும் எதிரிடையானதுமான அரசர்களையும் அரசாங்கத்தையும் பிரஜைகளையும் முன்னேற விடாது தடுத்துவிட வேண்டும்.
* தனது லௌகீக வைதீக காரியங்களுக்குத் தடை செய்து கொண்டு உலக ஜனங்களுடன் அன்போடிருப்பது வேதத்திற்கு அங்கீகாரமில்லை.

## 256 வது நாள்

* உலகப் பிரகாசத்தில் உள்ளம் மயங்குகிறவரை உலகாதீதப் பிரகாசத்தில் உறுதி கொள்ளாது.
* இல்லாததைக் கண்டுபிடிப்பது எப்போதுமில்லை.
கண்டுபிடித்தது புதிதென்றெண்ணுபவன் அவிவேகி.
* தன்னைத் தானே அறிய வேண்டித் தானே தனித்துத் தவறாது அம்மார்க்கத்து சென்று சென்று கொண்டிருந்தால் கீர்த்தி அந்தஸ்து குணம் செல்வம் வேதம் முதலிய சம்பத்துகளும் பின் தொடர்ந்து ஓடி வந்து கொண்டிருக்கும். பின்னாலே வந்து கொண்டிருக்கிற போகங்களில் இச்சைக் கொண்டு திரும்பிப் பார்த்தால் ஓடி விடும்.

## 257 வது நாள்

* பிரம்மரந்திரத்தின்று புறப்படுகிற அசுப எண்ணங்களைப் போக்குவதற்குக் கபால சோதனமே தகுந்த வழியென்று சூர்ய குமாரர்களான அஸ்வினீ தேவர்கள் கூறுகிறார்கள்.
* பொருளறிவு யுக்தி அறிவு அருளறிவு இம்மூன்றும் முறைப்படியே விவேகி களைத் தொடர்கின்றன.
* வட பாரத கண்டத்தில் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய தேவரும் தென் பாரதத்தில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரியாரும் பிரசாரம் செய்த பின்புதான் புத்த மதம் பாரத நாட்டிலிருக்க ஆதரவின்றிக் குடிபோயிற்று.

## 258 வது நாள்

* தங்களிடமுள்ள தீமைகளை ஒரு பெரிய ஞானியோ அவதார புருஷரோ யோகியோ காண்பவிக்காமலே தெரிந்துக் கொள்ளுகிற பிரஜைகளுக்குச் சீக்கிரம் ஞானோதயமுண்டாகிறது.
* பனிரெண்டு வருஷம் வரை ஊழியத் தொழிலிருந்தால் எஜமானனது குணங்களெல்லாம் அவனுக்கு வந்து சேருகிறது.

## 259 வது நாள்

* பரமாத்மானுபவம் அறியாத ஜீவர்கள் தற்பெருமை அவித்தியா அகங்காரம் அனாத்ம புத்தி மயக்க நினைப்பு இவைகளால் பந்தப்பட்டு தடுமாறுகிறார்கள்.
* ஞான சொரூபப் பிரதிபந்த மாயா சகித ஜீவாத்மாக்கள் சர்வேஸ்வரனது காருண்யத்தைப் பெறாமல் பிறவா முக்தியைப் பெறுவததென்பது குதிரைக் கொம்பாக முடியும்.
* யுக்தியின் விரிவைக் காட்டிலும் அனுபவ வியாபகமே சிறந்தது.

## 260 வது நாள்

* நியாயத்தை நினைப்பதிலும் செய்வதிலும் பயமடையக் கூடாது.
* பிறருடைய நன்மையையே விசாரணை செய்பவர்கள் தெய்வ சம்பத்துள்ள வர்களென்றும் தீமையையே கருதுபவர்கள் அசுர சம்பத்தை யுடையவர் களென்றும் இரண்டையும் விட்டவர்கள் ஞானிகளென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்.

## 261 வது நாள்

* ஒருவரையொருவர் கட்டிக் கொள்வதினாலும் முத்தமிடுவதினாலும் தீமையே விளைகிறது.
* அனாத்மாவைப் பற்றிய கேள்விகளுக்கும் ஆத்மாவைப் பற்றிய உணர்ச்சிக்கும் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்த மற்றவைகளாயிருக்கின்றன.
* உள்ளதையும் இல்லாததையும் தாண்டினவர்களை உடையவர் என்றழைக்கலாம்.
* உலக நன்மையின் பொருட்டு எதையும் செய்யலாம்.

## 262 வது நாள்

* உண்மையான சுயராஜ்யம் தனக்குள் கிடைத்து விட்டால் சாம்ராஜ்யம் தானே கிடைத்து விடும்.
* அர்த்தந் தெரிந்த மந்திரத்தோடு ஏகாக்கிர புத்தியுடன் ஆசமனம் செய்வதால் நாடி சுத்தி மூல சுத்தி உண்டாகின்றன.
* பரஸ்திரீ கமனம் களவு பிறரை வெறுத்தல் இம்மூன்றினால் மனிதன் சீக்கிரம் நாசமடைகிறான்.

## 263 வது நாள்

* பிறருடைய சந்தோஷத்தைப் பார்த்து நாம் சந்தோஷமடையலாம்; துக்கத்தைக் கண்டு சிரிக்கக் கூடாது.
* மனது பரிசுத்தமானால் அளவற்ற பலத்தையடையலாம்.
* ஆயுளின் அருமையையும் அபூர்வ சக்தியையும் தெரிந்து கொண்டவன் வீண் காரியங்களுக்கு ஓர் இமை நேரமாவது இடங் கொடுக்க மாட்டான்.
* கெடுதி நேரிடா வண்ணம் பார்த்துக் கொள்பவன் புத்திமான்; வந்த கெடுதியைப் பொறுத்துக் கொள்பவன் சாமர்த்தியவான்.

## 264 வது நாள்

* தைரியம் ஊர்த்வ முகத்தையும் பயம் அதோமுகத்தையும் காட்டுகிறது.
* சுயராஜ்யம் சாம்ப்ராஜ்யம் என்பதன் உண்மைகளை மஹரிஷிகள் ஆஸ்ரமங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.
* ஞான இச்சை மத சேவை தேச சேவை சமூக ஊழியம் சாஸ்திர சேவை இவைகளை உடையவர்களிடம் அடக்கமில்லாவிடின் அதற்கு அர்த்தமேயில்லை.
* அடக்கமில்லாத அடக்கந் தெரியாத பிரசாரங்கள் ஊழியங்கள் சுயநலத்தையே லட்சியமாகக் கொள்ளும்.

## 265 வது நாள்

* வேதத்தைவிட்டுக் கர்மத்தையும் கர்மத்தைவிட்டு வேதத்தையும் அனுஷ்டிப்பதில் பிரயோனமில்லை.
* அந்தக்கரணத்தின் அதிசூட்சும பல ஜென்மாந்திர பாப புண்ணிய சமஸ்காரங்களின் ரகஸ்ய உண்மைகளை வேத சாகைளான உபநிஷத்துக் களில் கௌதம சதானந்த சம்வாதத்திலும் யாக்ஞ்வல்கிய ஜனகராஜ சம்பாஷணத்திலும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

## 266 வது நாள்

* உலகப் பெருமையும் தபோ மகிமையும் ஒன்றாகச் சேர்வதில்லை.
* பிறரை அவமதிப்பதும் மரியாதைக் குணம் தெரியாதிருப்பதும் மூடர் வஞ்சகர் ராட்சசர் லட்சணம்.
* பிறரால் அவமதிக்கப்படுகிறபோது விவேகி துக்கப்பட மாட்டான்.
* சரீர அழகும் இனிய குரலும் மனத்தின் சத்குணங்களும் நிராசையும் தெய்வாம்சமுடையவர்களுக்குத்தான் பொருந்தியிருக்கும்.

## 267 வது நாள்

* பிரஜைகளை அடிமைப்படுத்தக் கூடிய சுபாவம் செல்வத்திற்கு அமைந்துள்ளது.
* எல்லாப் பிரஜைகளிடத்திலும் பழகலாம்; சிலரை மட்டும் நம்பலாம்.
* குற்றத்தைக் கண்டிக்கலாம்; குற்றஞ் செய்தவனைக் கண்டிக்கக் கூடாது.
* குற்றங்களை மன்னித்து விடுவதும் மறந்து விடுவதும் விசேஷமானது.

## 268 வது நாள்

* திருபுடித் தோற்றமற்ற பிரஹ்மானுபவத்திற்கும் திருபுடித் தோற்றமுள்ள பிரஹ்மானுபவத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை உண்மையில் அறிந்து கொள்வது சகஜ நிஷ்டர்களது இயற்கை.
* இகலோக ஞானமும் அவற்றின் முயற்சியும் உடையவனை மனித மிருகமென்றும் இகலோக ஞானம் பரலோக ஞானம் அவற்றின் முயற்சிகளுமுடையவனை மனிதத் தன்மையில் மனிதனென்றும் இகலோக ஞானம் பரலோக ஞானம் பிரஹ்மானுபவம் அதன் ரகஸ்ய ஞானம் முயற்சியுமுடையவனை மனிதனில் தேவனென்றும் வேதாந்த சூத்திரம் கூறுகிறது.

## 269 வது நாள்

* முழுதும் உண்மையுள்ளவர்களை உலகம் மதிப்பதில்லை. உண்மையில் பல உண்மையல்லாதவைகளைக் கொண்டவர்களிடம் மயங்கி உலகம் நன்கு மதிக்கிறது.
* உலகத்திலுள்ள எந்த வஸ்துவின் உதவியைக் கொண்டும் ஜீவிப்பவர்கள் உண்மையான சுயராஜ்யம் பெற்றவர்களாக மாட்டார்கள்.

## 270 வது நாள்

* பிறரால் மதிக்கப்படுபவன் தன்னைத்தானே மதித்துக் கொள்ளக் கூடாது.
* மனோ முயற்சியற்றவன் உண்மையான பிராம்மணன்.
* சத்தியம் ஹிதம் பிரியம் இம்மூன்றின் தன்மையற்ற வாக்காளிகள் பேசாது மௌனமாயிருப்பது நலம்.
* நமது வசம் நமது சரீரம் இருக்க வேண்டுமேயல்லாது சரீரத்தின் வசம் நாமிருக்கக் கூடாது.

## 271 வது நாள்

* பகுத்தறிவு ஆசையின்மை நல்லொழுக்கம் அன்பு இவை நான்கும் ஆசாரியரால் அறிந்து கொள்ளக் கூடிய முக்கிய சாதனங்கள்.
* ஓய்வு ஒழிவு சமாதானம் சாந்தம் இன்பம் முக்தி இவைகள் ஒன்றன் பின்னொன்றாக அப்பியாசிகளைத் தொடர்கின்றன.
* உண்மையாக யோகத்தில் ஆசை கொண்டவன் சாங்கிய ஞானியைக் காட்டிலும் மேலானவன்.

## 272 வது நாள்

* எவ்வளவு ஞானியானாலும் எவராயிருந்தாலும் பிரபல சாமர்த்தியசாலியாயினும் மஹா பண்டிதனாகிலும் பராக்கிரம சார்வ பௌமனானாலும் தேவனானாலும் சொந்த தர்மங்களிலிருந்து நழுவினால் பிரயோஜனமற்றவனென்பது வைதீகரிஷிகளது கருத்து.
* நெருப்பைத் தண்ணீராகவும் தண்ணீரை நெருப்பாகவும் ஆக்கிவிடக் கூடிய சித்தர்களைக் காட்டிலும் நெருப்பையும் தண்ணீரையும் ஒன்றாக்கிவிடக் கூடிய யோகிகள் சிரேஷ்டமானவர்கள்.

## 273 வது நாள்

* கரும யோகத்தை எக்காலத்திலும் பக்தி யோகத்தை ஏக தேசமாகவும் ஞான யோகத்தை அபுரூபமாகவும் ஜீவப் பிரஜைகளுக்குப் போதிக்க வேண்டும்.
* போதிப்பதற்கும் அனுஷ்டிப்பதற்கும் அனுபவிப்பதற்கும் சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு உபதேசிப்பவர்கள் உண்மையான ஆசாரியர்கள்.
* பிறரால் இச்சித்த ஆகார வஸ்துக்களை உண்பதால் சரீர மனோ வியாதி களுண்டாகின்றன.

## 274 வது நாள்

* ஸ்தூல சரீர பாவனையால் ஸ்தூல ஆகாரங்களை ஸ்தூலமாக உண்பவர்கள் ஸ்தூல இச்சையினின்று மீள முடியாது.
* ஆத்ம ஞானமின்றி ஆத்மாவை மறந்து ஆத்ம விசாரணை கெட்டு அனாத்ம புத்தியோடு அனித்திய இச்சையாற் செய்யப்படும் வெளிச் சாதனங்கள் யாதொரு பயனும் பலமுமற்றவை.
* மதக் கட்டளை ஜாதி அபிமானம் பொறாமை பயம் இவைகள் காரணமாக நிந்திக்கப்படுபவர்கள் உண்மையான குற்றவாளிகளாக மாட்டார்கள்.

## 275 வது நாள்

* தெய்வத்தின் பெயரைச் சொல்லித் தேவையான காரியங்களைச் செய்து சாதித்துக் கொள்ளக்கூடிய அசுர சம்பத்துடையவர்கள் தேவாலாயங்களிலும் தேடித் தேடிக் காணாத தேவர் கூட்டங்களிலும் காணப்படுகின்றனர்.
* பற்றாமல் பற்றுவதும் பற்றிப் பற்றுவதுமான தன்மையை எதார்த்தமாய் அனுபவத்திலறிந்து கொண்டு பற்றை ஜெயித்தவர்கள் பரம புருஷர்கள்.

## 276 வது நாள்

* தன்னை மீறி வருகிற ஒவ்வொரு சங்கல்பங்களிலும் ஒவ்வொரு ஜென்ம சமஸ்காரங்கள் அடங்கியிருக்கின்றன வென்று ஆராய ஆரம்பிப்பவர்கள் அதிக்கிரம ரகஸ்ய தத்துவ ஞான யோகிகள்.
* பயம் மரணத்தைக் காட்டிலும் கேவலமானது.
* பயமுடையவர்களுக்கு லோபமும், லோபமுடையவர்களுக்குப் பேராசையும் பேராசையுடையவர்களுக்குக் குரோதமும், குரோதமுடையவர்களுக்கு மயக்க மும் மயக்கமுடையவர்களுக்கு அபிமானமும் அபிமானமுடையவர்களுக்கு அஞ்ஞானமும் அஞ்ஞானமுடையவர்களுக்குத் துக்கமும் துக்கமுடையவர்களுக்கு ஜென்மமும் முறையே தொடர்கின்றன.

## 277 வது நாள்

* உலக ஞானமும் சூட்சும புத்தியும் அதிசாமர்த்தியமும் சாந்தமும் வித்தையும் இல்லாதவர்களிடம் திரவியமிருந்தால் பெரிய பல ஆபத்துக்களும் பல கஷ்டங்களுமுண்டாய் நரகப் பிராப்திக்கு ஏதுவாகச் செய்து விடும்.
* மனதிற்கும் யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமில்லாத இடங்கள் மனிதர்கள் தேவர்கள் இவைகளை விட்டு விலகி விட வேண்டும்.

## 278 வது நாள்

* யுக்தியில்லாத பக்தனையும் தாராள புத்தியில்லாத வேதாந்தியையும் கருணையில்லாத வைஷ்ணவனையும் இனிமையில்லாத சைவனையும் நிராசையில்லாத சந்நியாசியையும் ஆளத் தெரியாத அரசனையும் குடும்ப பாரந் தெரியாத மனைவியையும் பிறர் மனைவியரை இச்சித்து நடக்கிற புருஷர்களையும் பொய்யை மெய்யென்று நம்பிய சாங்கியனையும் வைராக்கியமில்லாத யோகியையும் அனுபவமின்றிய ஆசாரியனையும் அனுஷ்டிக்கத் தெரியாத சிஷ்யனையும் அன்பில்லாத பிரஜைகளையும் அந்த நிமிஷத்திலேயே விலக்கிவிட வேண்டும்.

## 279 வது நாள்

* பிரஹ்ம ஞான திருஷ்டியினால் பிரபஞ்ச முழுமையும் தானேயென்ற அனுபவம் வந்தால் மோட்ச பிராப்தியும் அஞ்ஞான திருஷ்டியினால் உலக முழுதும் தானேயென்ற அனுபவம் வந்தால் நரகப் பிராப்தியும் சித்திக்கிறது.
* குடீசகம் பகூதகம் ஹம்ஸம் பரம ஹம்ஸம் வித்வத்து விவிதிஷா வைராக்யம் ஞானம் அதிவருணாஸ்ரமம் என்ற ஒன்பது சந்நியாசங்கள் வைதீக சாஸ்திரங்களில் கூறப்பட்டிக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஆசாரங்களும் தோற்றங்களும் அனுஷ்டானங்களும் வேறுபடுகின்றன.

## 280 வது நாள்

* பஞ்சேந்திரிய சுகங்களில் பற்று குறைந்து அதில் வெறுப்புண்டாகும் போது பாப புண்ணிய சமத்துவம் வந்ததென்று தெரிந்து கொள்ள வேண்டும். பாப புண்ணிய சமத்துவம் வாய்ந்தவர்களுக்கே பிரஹ்மத்தின் சூட்சும ஞானம் பிரகாசிக்கிறது.
* நித்தியமும் அனித்தியமும் சம்பந்தப்படுகிற காலத்தில் பிரகிருதி தன் சாமர்த்தியத்தைக் காட்டிக் கொள்ளச் சமயம் கிடைக்கிறது.
* பிராகிருத சரீரத்திலிருந்து கொண்டே அப்பிராகிருதத் தன்மையை அனுஷ்டித்துக் காட்டியவர்களில் முதன்மையானவர் ஜடகோபர்.

## 281 வது நாள்

* அழகிய சகுண மூர்த்தியின் பிரசன்னதால் அளவு கடந்து சந்தோஷிப்பவன் நிர்க்குண ஞானானுபவத்தைச் சீக்கிரத்தில் அடைய மாட்டான்.
* பகவானுடைய ஆறு அடையாளங்களில் ஒன்றிரண்டு மட்டுமுடையவர்களை அம்ஸாவதாரமென்று ரிஷிகள் சொல்லுகிறார்கள்.
* கொஞ்சமாகிலும் பிரஹ்மானுபவத்திற் பற்றிய மனது மீண்டும் உலகானுபவத்திற்குத் திரும்ப மாட்டாதென்று பெரிய தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். அப்படி இறங்குமானால் உலக உபகார சர்வேஸ்வர பகவானது கட்டளையென்றறிய வேண்டும்.

## 282 வது நாள்

* ஒவ்வொரு வஸ்துக்களிலும் பற்றிப் பற்றிப் போய்க் கொண்டிருக்கிற மனது எந்த வஸ்துவைப் பற்றி மீண்டும் அதினின்று மீள முடியவில்லையோ அது பரவஸ்து.
* அழுக்கில்லாத மனத்தில் அஞ்ஞானம் பதிவதில்லை. அழுக்குள்ள சித்தத்தில் ஞானம் பதிய ஏதுவில்லை.
* ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான வேறுபாடுகளையுடைய அப்பியாஸ அனுபவங்களை கண்டறிபவன் சீக்கிரத்தில் நிருவிகல்ப சமாதியை அடைகிறான்.

## 283 வது நாள்

* பகிர்முக நீதிகளையும் ஞானங்களையும் கண்டுகளித்துத் தேர்ச்சியடைந்தவன் தான் அந்தர்முக நீதிகளையும் ஞானத்தையும் அடைய அதிகாரியாகிறான்.
* விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மத ஆழ்வார்களில் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் இந்நால்வரும் முறையே சரியை கிரியை யோகம் ஞானம் இந்நான்கையும் அனுஷ்டித்துக் காட்ட அவதாரமானவர்கள்.

## 284 வது நாள்

* சிவாத்துவைத சைவ சமயாசாரியர்களில் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் சுந்தரமூர்த்தி மாணிக்க வாசகர் இவர்கள் முறையே சரியை கிரியை யோகம் ஞானம் இந்த நான்கையும் பகிரங்கப்படுத்த வந்த மஹா புருஷர்கள்.
* கலியுக காலத்தில் கரும யோகம் பக்தியோகம் ஞான யோகம் இம்மூன்றின் ரகஸ்யத்தை ஸ்தாபிப்பதற்கு முறையே மத்துவாசாரியார் இராமானுஜாசாரியார் சங்கராசாரியார் இம்மூவரும் அவதாரமானவர்கள்.

## 285 வது நாள்

* எல்லோரிடத்திலும் பயபக்தி விஸ்வாஸத்துடன் நடந்து கொள்வதைக் காட்டிலும் விரோதிகள் ஏழைகள் தாழ்ந்த ஜாதியார் இவர்களிடத்தில் பயபக்தி விஸ்வாஸத்துடன் நடந்து கொள்வதால் பரமேஸ்வர எம்பெருமான் பரம திருப்தி அடைகிறார்.
* ஒரு காலத்திலுமில்லாத வஸ்துவைப் பற்றியும் எப்போதுமுள்ள வஸ்துவைப் பற்றியும் ஒருவரும் ஒரு காலத்திலும் விசாரணையாவது கவலையாவது கொள்ளக் காரணமில்லை.

## 286 வது நாள்

* மனத்தையும் ஞானேந்திரியங்களையும் அடக்க முடியாதவனும் தெரியாதவனும் கர்மேந்திரியத்தின் அடக்கம் பெருமை இவைகளைக் குறித்துச் சிலாகித்துப் பேசுகிறான்.
* சிந்தனையே யில்லாதபோது ஒரு சிந்தனை சிந்தியாமலே வந்ததானால் சிந்தனாதீதத் தடையென்று சிந்தியாமலே தெரிந்து கொள்ள வேண்டும்.
* உலகத்தில் நடைபெறுகிற சமஸ்த காரியங்களையும் ஆலோசித்துப் பார்க்கும் பொழுது சகலமும் இந்திரிய காரியங்களாகவே முடிகிறதென்றும் நிவிர்த்தி மார்க்கப் பரமாத்மப் பிரவர்த்தகர்கள் சர்வேந்திரிய காரிய ரகிதர்களாயிருப்பார்களென்று சனகாதி நான்கு மஹரிஷிகளும் சொல்லுகிறார்கள்.

## 287 வது நாள்

* அந்தர்முக பரமாத்மா நாட்டமின்றிப் பகிர்முக அனாத்ம நாட்டமுடையவர்களின் ஜென்மக் கணக்குகள் அற்பமே கிடையாது.
* ஆசை பிரியம் விஸ்வாஸம் பக்தி அன்பு இவ்வைந்தும் வேறுவேறான தாத்பரியங் கொண்டவைகள்.
* விஷயத்தில் ஆசை, சுற்றத்தாரிடம் பிரியம், பெரியவாளிடம் விஸ்வாஸம், பகவானிடத்தில் பக்தி கடவுளிடத்தில் அன்பு இவ்வைந்தும் இவ்வாறு பிரிகின்றன.

## 288 வது நாள்

* தூஷணை தடை இவையிரண்டும் பிரபலமாகத் தோற்றப்படுகிற பக்தன் யோகி ஞானி இம்மூவரையும் தேவர்களும் அவதார புருஷர்களும் கொண்டாடுகிறார்கள்.
* உபாஸனைக்கும் பக்திக்கும் அவாந்தர வேற்றுமையில்லாவிட்டாலும் ஊன்றிப் பார்த்தால் சாக்ஷாத் வேற்றுமையிருக்கிறது.
* தன்னிடத்தில் தன்னை வேறாகக் காணாமல் தானே தானாகக் காண்கிறவன் அத்வைத அனுபவி. தன்னிடத்தில் தன்னைத் தவிர வேறாகப் பரமாத்மாவை அறிகிறவன் துவைதானுபவி. தன்னிடத்தில் தனக்கன்னியமின்றித் தனக்குள்ளே பிரஹ்மத்தை அறிகிறவன் விசிஷ்டாத்வைத அனுபவி.

## 289 வது நாள்

* அஸ்டாவக்கிரர் அஸிதர் ஆங்கீரசர் ஆத்ரேயர் ஆபஸ்தம்பர் ஆருணி ஆஸ்திகர் மௌத்கல்யர் காலவர் உதங்கர் உத்தாலகர் கௌதமர் விஸ்வாமித்திரர் ததீசி சதானந்தர் சரபங்கர் ஜாண்டில்யர் சாந்தி சௌனகர் சுனகர் சுகர் ஸ்வேத கேது ஸ்வேதர் தமனர் நாரதர் பர்வதர் நாராயணர் தாலப்யர் தனுசாட்சர் தட்சர் மாண்டவ்யர் தத்தாத்திரேயர் பாரத்வாஜர் பிருகு ஜாபாலர் பிருங்கி சனத்குமாரர் உரோமசர் தன்வந்திரி நந்தி வான்மீகி பிரஹஸ்பதி புஜண்டர் தாசூரர் சுக்கிரன் சூர்யன் மரீசி போகர் புலஸ்தியர் அகஸ்தியர் மைத்ரேயர் கிருஷ்ணத்வைபாயனர் பிரஹதாரண்யர் ஜாமதக்னியர் ஶ்ரீவத்ஸர் கபிலர் தூர்வாசர் குஜத்வஜர் குமணர் குங்குமாரர் சுதீக்ஷணர் காஸ்யபர் வைஸம்பாயனர் காத்தியாயனர் வாதூலர் போதாயனர் கௌண்டுண்யர் பிப்பலாயர் சுமதி கர்க்கி சாந்தீபிணி சமன்வயர் தௌம்யர் பராசர் சக்தி ரிஷி வாகீசர் ஷடமர்ஷணர் சநாதனர் திரிதுலர் தேவரங்கர் முதலிய மஹரிஷிகளது அங்கீகாரம் பெற்ற அனாதி சநாதன தர்ம மதத்தையே சர்வ ஜீவர்களும் அனுஷ்டிக்க வேண்டும்.

## 290 வது நாள்

* தன்னையறிவதற்கு மற்றொருவனைத் தேடுகிறவன் குளிரை நீக்குவதற்குப் பனியைத் தேடுகிறவன் போலாகிறான்.
* மனோதத்துவத்தை அதிக்கிரமித்தவர்களையன்றி மற்றையோர்களுக்கெல்லாம் அன்பு கலந்த உணவுகள் அமிர்தத்தையும் சத்துவ குண ஞானத்தையும் கொடுத்து விடுகின்றன. அன்பு கலவாத வுணவுகள் விஷத்தையும் தமோ குண ஞானத்தையும் கொடுத்து விடுகின்றன.

## 291 வது நாள்

* எப்போதும் மாறாத ஞானதிருஷ்டி வாய்ந்திருக்கப்பட்டவர்கள் உலக வுபகார போதனா மார்க்கத்திற்குத் தகுதியுடையவர்களாக மாட்டார்கள். அடிக்கடி சுத்த மாயா விலாஸ சக்தி பாய்ந்து வருகிற மனோ நிலைமையையுடைய மஹாத்மாக்களே போதிக்கத் தகுந்த அதிகார புருஷர்கள்.
* கண்டதையும் கேட்டதையும் நம்பாதிருக்கக் கூடிய பரிபூர்ண ஞான சக்தி வாய்ந்தவர்களை மஹரிஷிகள் தங்கள் கூட்டத்தாருடன் சேர்த்துக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள்.

## 292 வது நாள்

* ஆத்மாவல்லாத அனாத்ம வஸ்துக்களிடத்திலேயே மனோவிருத்தி சென்று கொண்டிருப்பவர்களிடம் ஆத்மாவிடம் மனோ விருத்தியைச் செலுத்த ஆரம்பிக்கப் போகிறவர்களும் ஆரம்பிக்கிறவர்களும் ஆரம்பித்திருக்கிறவர்களும் ஆரம்பித்து முடிந்த சமயமானவர்களும் அடிக்கடி சகவாசம் செய்யக் கூடாது.
* அனித்திய வுலகத்தில் அனித்திய உடம்போடிருக்கிற வரை அனித்தியப் பொருளைக் குறித்துச் சஞ்சாரஞ் செய்ய வேண்டியது அவஸ்யமாயிருந்த போதிலும் எப்போதும் பொருளைக் குறித்துச் சஞ்சாரம் செய்பவனிடம் முமூக்ஷுக்களும் யோகாப்பியாஸ ஞானாப்பியாசிகளும் தெய்வ சம்பத்துடையவர்களும் பழகக் கூடாது.

## 293 வது நாள்

* ஜென்மம் வந்துவிடுமே யென்றும் ஜீவன் முக்தி கிடையாமற் போய் விடுமோ வென்றும் பயந்து மனோ விருத்தியைப் பிரஹ்மத்தில் கறைத்துச் சேர்க்கிற சமாதி அப்பியாசிக்கிறவன் ஆரூட ஞானியல்ல, கிருதகிருத்யத் தன்மையைப் பெற்றவனல்ல, முடிந்த ஜென்மமுடையவனுமல்ல.
* பிரஹ்மத்தை அடைய வேண்டியதையும் அடைந்ததையும் முன்னிட்டுக் கொண்டு எது செய்தாலும் பந்தமில்லை.

## 294 வது நாள்

* அவரவர்களுடைய பூர்வ ஜென்மாந்தர பாபகர்ம சமஸ்கார அணுக்கள் மனத்தைப் பிரமித்துக் கலக்கும்படிச் செய்து, அனாத்ம வஸ்துக்களில் பிரேமையும் ஆத்மாவில் அந்தகாரமும் உண்டாகும்படிச் செய்து, பிரஹ்ம ஜோதித் தன்மைக்கு அருகதையில்லாமற் செய்து விடுகிறது.
* அதிக நல்லவனான மந்த புத்தியுள்ளவனைக் காட்டிலும், மேலான துஷ்டனான சூக்ஷ்ம புத்தி யுள்ளவனையே தெய்வீக அவதார புருஷர்களும் விரும்புகிறார்கள்.

## 295 வது நாள்

* சொரூப ஞானமென்றும் விருத்தி ஞானமென்றும் இரு வகை ஞானங்கள் பிரஹ்மத்திலமைந்திருக்கின்றன. அவற்றில் சொரூப ஞானம் சர்வ ஜீவராசி களிடத்திலும் இருந்தும் மாயா சக்தியை நாசம் செய்ய முடியவில்லை. ஞானாசாரியர் மூலமாய் அகண்ட பிரஹ்மாகார விருத்தி ஞானத்தைப் பெற்று முறைப்படி அப்பியாசிததால் மூலாஞ்ஞானம் வேரோடு நாசமாய் விடும்.
* அத்வைத துவைத விசிஷ்டாத்வைத வாதங்களெல்லாம் யுக்தி வாதமேயன்றி அனுபவ வாதமல்ல, அனுபவி வாதஞ் செய்வதில்லை.

## 296 வது நாள்

* பல ஜென்மாந்தரமாக ஸ்திரீகள், குடும்பம், செல்வம், சுற்றம், பிரஜைகள் அறுசுவை ஆகாரம் சரீர சுகம் அதிகாரம் இவைகளில் பழகி வந்த மனது இவைகளிலேதேனும் குறைவுபட்டால் ஹிருதயம் பெரிய மாறுதலை யடைவதுடன் மயக்கத்தையும் அடையும்.
* யாதொரு பற்றுமற்ற துறவாஸ்ரமத்தவர்களையுங்கூடப் பற்றும்படி செய்து விடக் கூடிய மஹாமூலப் பிரகிருதியின் இருப்பிடத்தையும் தாண்டிய பரம மூர்த்தியின் சமீபத்திலே அவரிடத்திலே அண்டியோ கலந்தோ இருப்பது தான் மார்க்கம். வேறு வழி கிடையாது.

## 297 வது நாள்

* தரித்திரம், பஞ்சம், துக்கம், கவலை இவைகள் கடவுளைச் சீக்கிரத்தில் தெரிசனம் செய்து வைக்கும் ஆசாரியனென்று விவேகிகள் எண்ண வேண்டும்.
* தெய்வ சம்பந்தமான மரணம் நேரிடுவதைப் புத்திசாலிகள் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.
* எந்தவிதமானதும் எத்தனை விதமாயுள்ளதும் எவ்வளவு சமார்த்தியமானதுமான துக்கங்கள் வந்தாலும் நம்முடைய நன்மைக்கென்றே யெண்ண வேண்டும்.

## 298 வது நாள்

* அனித்திய உலக விஷயத்தில் ஒன்றுக்கும் அஞ்சாதிருக்கும் ஹிருதய முடையவனை மஹாவீர்ய சுதந்தர உத்தம புருஷனென்று பௌருஷ வேதம் கூறுகின்றது.
* பிரஹ்ம ஞானமும் பிரஹ்ம விசாரணையு மில்லாதவர்களுடைய பக்தி, புண்ணிய கர்மங்கள், யோகம், சாஸ்திர ஆராய்ச்சி, தத்துவ சோதனை, தீர்த்த யாத்திரை, மூர்த்தி சேவை, சகல ஆஸ்ரமங்கள் தர்மங்கள், வருணங்கள் பிரயோஜனப்பட மாட்டாது.

## 299 வது நாள்

* உலகத்தாலும் உலக வஸ்துக்களாலும் சுகப்பட இஷ்டப்படுகிறவர்கள் யாரோ அவர்கள் தீர்க்க ஆலோசனையில்லாதவர்களும் புத்தியற்றவர்களுமாவர். மேலும் மேலும் ஆசை அதிகமாகுமேயன்றி குறையப் போவதில்லை. நெருப்பில் விறகு வைக்க வைக்க அக்னி யெரியாமற் போவதுண்டோ?
* பிரபஞ்சத்தில் யாரும் அதிகமாகவும், ஆகர்ஷணமாகவும் ஆசைப்படத்தக்க வஸ்துக்களை விரும்பாமலும் அடையாமலும் விட்டுவிட்டவர்கள் மனதை ஜெயித்தவர்களென்று மனத்தின் சொரூபந் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

## 300 வது நாள்

* அங்கப் பிராணாயாமம், அகர்ப்பப் பிராணாயாமம், ஆகார்யப் பிராணா யாமம், ஆந்தரப் பிராணாயாமம் இந்நான்கில் ஆந்தரப் பிராணாயாமத்தையே தெய்வசம்பத்துடைய சிரேஷ்ட யோகிகள் கருதுகிறார்கள்.
* ஒரே சமயத்தில் ஜாக்கிரம், சொப்பனம், சுழுப்தி இம்மூன்றின் அனுபவமு மிருத்தல் வேண்டும். அதே சமயத்தில் இம்மூன்றின் அனுபவமில்லாதிருத்தல் வேண்டும். இவ்வாறுங் கலந்த அனுபவமுடையவர்களைக் கண்டவனை அதிக்கிரம யோகியென்று மகரிஷிகளுடைய கருத்து.

## 301 வது நாள்

* பிரஹ்மத்தை அடைவதின் சாக்ஷாத் சாதனத்தை காட்டிலும் அவாந்தர சாதனமே பிரபல கஷ்டமாக யிருப்பதாக ஆரம்ப அப்பியாசிகள் நினைக்கிறார்கள்.
* உற்பத்தியாகும்போது உண்மையினின்றில்லாமலும், உண்டாகும்போது, மாறுகிற இடத்தினின்றுண்டாகிற ஆனந்தமும் அதுவும் உறுதியுடையத்தாயிராத தும் அசைவோடு கூடியதாயு முள்ளவைகளை யெல்லாம் அடியோடு விலக்கி விட வேண்டுமென்பது நிராசையின் தத்துவந் தெரிந்த உதாசீன யோகிகளது சித்தாந்தம்.
* ஆந்தரம் பாஹ்யம் இரண்டிலும் விடாமல் அனுஷ்டிக்கிறவன் அந்தந்த விஷயத்தில் ஆசார்யனாக ஆகலாம்.

## 302 வது நாள்

* அதிக ஆச்சரியத்தையும் மயக்கத்தையும் நடுக்கத்தையும் திகிலையும், காமம், கோபம், லோபம், குரோதம் இவைகளையும் உண்டு பண்ணக் கூடிய வசனங்களை யாரிடமும் பேசுவதையும் நினைப்பதையும் விட்டுவிடுவதால் தபோ சக்தி, ஆத்ம சக்தி, ப்ரஹ்மாகார விருத்தியின் ஸ்திரத்துவம் ஊர்த்வமுக ஞானோற்பத்தியும் உண்டாகின்றன.
* ஒன்றில் நிலைபெற்ற மனது மற்றொன்றை நாடுமானால் அது சிற்றின்ப மாகிறது

## 303 வது நாள்

* உற்பத்தியில்லாத வஸ்துவிடம் மற்றொரு உற்பத்தியில்லாத வஸ்து ஐக்யமாக முடியும். உற்பத்தியில்லாத வஸ்துவில் உற்பத்தியுள்ள வஸ்து ஐக்யமாக முடியாது.
* மூலப் பிரகிருதி வரை செல்லுகிற ஜீவாத்மா தன்னுருவத்துடன் சென்று அதைத் தாண்டும்போது ஜீவத் தன்மையை இழந்து ஈஸ்வரத் தன்மையைப் பெற்று அதிலு மிச்சையற்ற காலத்தில் அப்ராகிருத பரமபத நாதனாகிறது.
* அப்ராகிருத பரமபத நாதனாவதே பரம ஏகாந்தமே யன்றி மற்றவை யெல்லாம் வாஸ்தவ ஏகாந்த மல்ல.

## 304 வது நாள்

* பாரமார்த்தீக ஆனந்தானுபவத்தில் உள்முகமும் வெளி முகமும் ஒன்றா யிருக்கப் பெற்றவன் அப்பியாச முதிர்ச்சியின் தன்மையைப் பெற்றவனா கிறான்.
* ஆசை உதிக்கும் ஸ்தானமாகிய ஹிருதயத்தினின்றும் மூலத்துடன் ஆசையை லயிக்கும்படி செய்து வந்தால் சீக்கிரத்தில் உண்மையான சந்யாஸமும் தியாகமும் வந்து சேருகின்றன.

## 305 வது நாள்

* ஆத்மாவின் பரிபூர்ண சக்தி மனதிற்குப் புலப்படாத ஒரு காரணத்தினாலேயே பகிர்முக ஆசை உண்டாகிறது.
* ஒரு வஸ்துவிலும் உள்ளே யிருந்து பற்றை விட்டுவிட்டவன் எந்த காரியங்களைச் செய்தாலும் சுக துக்கங்களையும் லாப நஷ்டங்களையும் அடைய மாட்டான், அடையவும் வழியில்லை.
* வெளியிலிருக்கக் கூடிய ஜடபதார்த்தங்கள் உள்ளேயிருக்கிற ஞானத்தை இழுப்பதென்பது எந்தக் காலத்திலு மில்லை. உள்ளிருக்கிற ஞானமே தன்னைத் திரும்பிப் பாராமல் தன்னை மறந்த தருணத்தில் ஜடபதார்த்தங்களைப் பற்றியிருக்கிறது.

## 306 வது நாள்


* நான் அத்வைதி, துவைதி, விசிஷ்டாத்வைதி யென்று கூறிக் கொள்ளுகிறவர்களெல்லாம் வாஸ்தவத்தை அறியாதவர்களும் சாஸ்திர, வசன, யுக்தி மாத்திரமுள்ளவர்களே யன்றி நானற்ற அனுபவிகளாக மாட்டார்கள்.
* ஜீவன் முக்தர்களான மஹாத்மாக்களிடஞ் சென்று தன் சாமர்த்தியத்தைக் காட்டச் செல்லும் சாஸ்திரப் பண்டிதர்கள் கங்கா நதியை எதிர்க்கச் செல்லும் சாக்கடை ஜலத்தின் ஸ்திதியை அடைகிறார்கள்.

## 307 வது நாள்

* கடவுளைத் தவிர மற்ற வஸ்துக்களைப் பற்றி ஆராய்கிறவன் சத்தியமான பலனை அடையாமற் போவதோடுகூட அதன் முடிவையும் அறிவதில்லை.
* முக்குண ஆனந்தத்தையும் அதனுற்பத்தி ஸ்தான ஆனந்தத்தையும் அனுபவித்த பின் மூலப் பிரகிருதி யானந்தம் அடையப்படுகிறது. அதனுற்பத்தி ஸ்தானத்தை நாடும்போது நிருவிகல்ப சமாதி ஸ்திதி வாய்க்கிறது.
* திரிமூர்த்தி ஸ்தானம் மற்ற தேவர்கள் பதவி, ரிஷிகள், சித்தர்கள், ஆச்சாரியர்கள், அரசர்கள் ஸ்தானம் இவைகளுக்குச் சமமாக நினைத்துத் தன் சொந்த பரமாத்ம ஸ்தானத்திலே நிலை பெற்ற திருஷ்டி வைத்திருக்கப்பட்டவர்கள் பெரிய மஹானும் பரம பாக்கியசாலியுமாகிறார்கள்.

## 308 வது நாள்

* உண்மையும், உண்மை யல்லாததும் ஒன்று சேரும்போது சிருஷ்டி உண்டாகிறது.
* துவைதாத்வைத வர்ஜிதமான சம தத்துவ ஆனந்தானுபவிகள் துவைதாத்வைத வாதங்களில் ஆச்சர்யமும் நகைப்பும் அடைவது சகஜம்.
* ஹிருதய நாசம் எதுவரை வரவில்லையோ அதுவரை எதார்த்த ஞானம் உதயமாகவில்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும்.



## 309 வது நாள்

* ஒருவருடைய மனப்போக்கையும் அபிப்பிராயங்களையும் மாற்ற முயல்வது உத்தமமான பிரயோஜனத்தைக் கொடுக்க மாட்டாது.
* யாருடைய மனப்போக்கும் அபிப்பிராயமும் செய்கைகளும் பாரமார்த்தீக வியாவகாரிகத் தன்மைகளுக்கு விரோதமான தீமை கொண்டதாயிருந்தால், பிரபஞ்ச ஆசார்யத் தன்மை பெற்றவர்களும், நீதி பரிபாலன அரசர்களும் அன்பினாலோ, அறிவினாலோ, அதிகாரத்தினாலோ, பலாத்காரத்தினாலோ அடக்கிவிடலாம்.

## 310 வது நாள்

* உலகம் உண்மையா பொய்யா, கடவுள் உண்டா இல்லையா, ஆத்மாக்கள் ஒன்றா பலவா, அத்வைதம் துவைதம் இரண்டி லெது பெரிது என்ற வாதங்களும் அதன் பதில்களும் வீணானது. மனத்தை ஒருவிதக் கொள்கைகளுக்கும் வாதங்களுக்கும் இடங்கொடுக்காதபடி வைத்துக் கொண்டு அறிவைத் தனிமையில் நிறுத்தி ஆராய்ச்சி செய்து கொண்டு வந்தால் சகல சந்தேகங்களும் வாதங்களும் தானே நழுவி விடும்; உண்மை உதயமாகும்.



## 311 வது நாள்

* மனதைப் பரிபக்குவப்படுத்திக் கொள்ளாமல் எத்தனை சாஸ்திரங்கள் கற்றாலும் எத்தனை பெரியவர்களைக் கண்டு தர்க்கஞ் செய்தும் அங்குமிங்குமலைந்தும் பயனில்லை.
* அளவற்ற சாஸ்திரங்களைக் கற்று அதிசூக்ஷ்மமாகத் தரிசிக்கும் சக்தியானது பந்தத்திற்கே ஏதுவாகிறது.

## 312 வது நாள்

* சாதாரண ஜனங்களுக்கு ஒரே குடும்பந்தானுண்டு சாஸ்திர பண்டிதர்களுக்குப் பல சாஸ்திரங்களாகிற குடும்பங்களிருக்கின்றன.
* சிஷ்யன் தனது ஆசார்யரைச் சாதாரண மனுஷ்யனென்று கருதுவதால் ஏமாற்றத்தையே அடைகிறான்.
* ஆரம்ப அப்பியாசிகளுக்கு நிஷ்காம கர்மமும் மத்யதர அப்பியாசிகளுக்குச் சாங்கிய யோகமும் முதிர்ந்த அப்பியாசிகளுக்கு ஞானயோகமும் அனுஷ்டிக்கப்பட வேண்டியது.

## 313 வது நாள்

* வெளிச் சாதனங்கள் யாவற்றிலும் சாது சங்கமே உயர்ந்தது.
* தன்னைப்போல் சகலரையும் பார்ப்பதால் இருவருக்கும் பக்குவ ஸ்திதி உண்டாகிறது.
* உத்தம மஹாத்மாக்களிடம் சென்று அரிய குணங்களைப் பழகித் தானும் அதை அனுஷ்டித்து உண்மையை அறிய முயலாமல் அவரது வெளி கீர்த்தி களைப் புகழ்ந்து கொண்டே காலங் கழிப்பதும் உற்சவ முதலியன கொண்டாடுவதும் பயங்கொள்ளித் தனமும் சோம்பேரித்தனமும் பலமற்ற தன்மையையும் காட்டுகிறது. எதார்த்தத்தை மறைத்து விடவும் ஏதுவாகிறது.

## 314 வது நாள்

* மரீசி, அத்திரி, புலகன், புலஸ்தியன், கிருது, அங்கிரா, வசிஷ்டன், இந்த ஏழு மஹறிஷிகளும் சம்பூதி, அனுசூயை, சமை, பிரீதி, சந்ததி, மிருதி, அருந்ததி இவ்வேழு தர்ம பத்தினிகளும் பிறக்கும்போதே நித்திய சித்தர்களான ஜீவன் முக்தர்களாயும் பிரஹ்ம நிஷ்டாபரர்களாயு மிருந்தார்கள்.
* ஆத்மாவினின்றுதிக்குஞ் சங்கல்பமே சிருஷ்டி. அந்த சங்கல்பத்தை அப்படியே நீடித்து வைத்திருப்பதே ஸ்திதி. அந்த நினைப்பை அவ்வாறே விட்டுவிடுதல் சம்ஹாரம். அந்த எண்ணத்தை மறந்திருப்பதே திரோபாவம். அந்த சங்கல்பம் உதிக்குமிடத்தைக் கண்டு அதிலமிழ்ந்திருப்பதே அனுக்கிரகம் இவ்வைந்து மஹத்தான செயல்களும் நம்மிடமே யிருக்கின்றன.

## 315 வது நாள்

* பிரபஞ்ச ரூப தர்ஸனத்தில் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களுக்கு அடிக்கடி மாறுதல் களும் சுக துக்கங்களும் அதனதன் அணுக்களும் வந்து வந்து மாறுவது சுபாவமென்று நிச்சயமாய்த் தெரிந்து கொண்டவர்களைப் பிரபஞ்ச மாயா விலாசங்கள் ஒன்றுஞ் செய்ய முடிகிறதில்லை.
* பிரஹ்ம ஞான மொன்றினா லன்றி மற்றெந்த வழியாலும் பிரபஞ்ச மாயாஜால சுக துக்கங்களை வராமற் செய்துவிட முடியாது.

## 316 வது நாள்

* அழியாத வஸ்துவிடம் அழகிய மற்றோர் வஸ்து ஐக்யப்பட முடியாது. ஐக்ய மல்லாமற் கலக்கவும் முடிகிறதில்லை.
* உண்மையான பிரஹ்ம ஞானம் வராதவரை எத்தனை வேதாந்த சாஸ்திரங் களைக் கற்றும் எத்தனை மஹான்கள் தெரிசனம் செய்தும் அவர்களிடம் உபதேசம் கேட்டும் உத்தமமான பலனை அளிப்பதில்லை.

## 317 வது நாள்

* பற்றின் தன்மையைப் பகுத்துணர்ந்தவனும் உணராதவனும் பற்றை யடையும்போதும், விடும்போதும், அனுபவிக்கும் போதுமுள் ஸ்வானுபவம் அதிக பேதமாய் விடுகிறது.
* அந்தரங்கத்தில் சுத்த சத்துவாதீதமான பிரஹ்ம சுகத்தை அனுபவிக்கிற மஹாத்மாக்களுக்கும் பகிரங்கத்தில் முழுத் தமோ குணத்தின் பிரபஞ்ச திருஷ்டியினால் முழு மூடத் தன்மையடைந்துள்ள சோம்பேரிகளுக்கும் வேதாந்த ஞான வாக்கியங்கள் சுலபமாகப்படுகிறது.

## 318 வது நாள்

* தெய்வீக அவதார புருஷர்களும் ஆசார்யர்களும் மறைப்பின்றிய ஞானோதயமானவர்களும் மூலப் பிரகிருதியின் ஹம்சரூபியான அஞ்ஞான சம்பந்தப்பட்ட காலங்களில்தான் சிஷ்யோபதேசம், பாஷ்யரூப விருத்தி, சாஸ்திர நிர்மாணம், தர்ம ஸ்தாபனம், அதர்ம கண்டனம், துஷ்ட நிக்ரகம், உலக உபகாரம் முதலியன செய்ய முடியும். சுத்த ஞான காலத்தில் ஒன்றும் செய்ய முடியாது.

## 319 வது நாள்

* அஞ்ஞான தசையின் ஆரம்பத்திற்கு முன்னும், ஞான தசையின் முடிவிற்குப் பின்னும் ஒன்றாயிருக்கிறது.
* மனதை ஒடுக்கி ஒவ்வொரு தத்துவங்களாக நியதி செய்து கடைசியில் எது மிச்சப்படுகிறதோ அதுதான் பரதத்துவம்.
* வாஸ்தவத்தில் மனதிற்கு எந்தவிதமான வுருவமுங் கிடையாது. ஆராய்ச்சி செய்யாதிருக்குங் காலத்தில் மனம் ஏதோ ஒரு வஸ்துபோலக் காணப்படும். விசாரித்துப் பார்க்கிற பொழுது இருந்தவிடம் தெரியாமல் போய்விடும்.

## 320 வது நாள்

* வேறு வேறாகத் தோற்றப்பட்ட துவைத பதார்த்தங்களெல்லாம் எப்போது ஒன்றாகத் தோற்றப்படுகிறதோ அப்போதுதான் மனதிற்கு ஞானோதயமும் ஐக்கிய பரிபக்குவமும் வந்ததென்று தெரிந்து கொள்ள வேண்டும்.
* எந்த விஷயங்களிலும் நமக்குத் தெரியாதென்று விட்டுவிடுவது அபாவ ஞானத்தைக் குறிக்கின்றது. நம்மால் முடியாதது ஒன்றுமே யில்லை. கற்பூரம் காய்ச்சுவது முதல் கடவுளை அறிகிறவரை நமது புருஷப் பிரயத்தனத்தால் ஆகாதது ஒன்றுமேயில்லை.

## 321 வது நாள்

* எந்த உலகத்திலும் ஒருவருக்கொருவர் செய்யக் கூடிய உபகாரங்கள் அனாத்மாவைப் பற்றியதும் அழிந்துபோகக் கூடியதுமாயிருக்குமே யல்லாமல் நித்தியத்தை யுடையதும் சரீரத்தை விட்டு ஆத்மா புறப்படும்போது பிரியாமல் வரக்கூடியதுமான உபகாரத்தை ஒருவருக்கொருவர் செய்து கொள்ள முடியாது.
* எந்த உலகத்திலும் வாஸ்தவமான முழு வெறுப்புத் தோற்றப்பட்ட ஜீவாத்மா வானது ஒரு உலகத்தில் நிலை பெறாமல் கடைசியாக உலாகாதீத வஸ்து விடம் ஒன்றாய் கலந்து விடுகிறது.

## 322 வது நாள்

* ஒரு வஸ்துவிலும் ஆசையில்லாதிருத்தலே உயர்ந்த முக்தியென்று நம்பிக்கைக் கொண்ட ஒரு மதம் கூறுகிறது.
* ஏதாவது ஒரு வஸ்துவில் பற்று வைத்திருக்கக் கூடிய ஜீவாத்மாவானது அந்த வஸ்துவைச் சுற்றிக் கொண்டே யிருப்பதுடன் வேறு வேறு சரீரங்களிற் போய் போய் திரும்பி வரக் கூடிய ஜன்ம மரண கஷ்டங்களை அடைய வேண்டி வருமென்றும் அதனால் சத்திய சொரூபமான பரவஸ்துவை அடைய முடியாமல் போய் விடுமென்றும் அதனால்தான் பற்றை அடியோடு விட்டு விடும்படி உபநிஷத் புருஷனும் பற்றின் கரையை கண்டவர்களும் சொல்லுகிறார்கள்.

## 323 வது நாள்

* காலாதீதமான பிரஹ்ம வஸ்துவை அடைவதற்குக் காலத்திற்குட்பட்ட தெய்வங்களையும் மூர்த்திகளையும் உபாஸனை செய்தும் எத்தனை புண்ணிய கருமங்கள் செய்தும் பிரயோஜனமில்லை.
* ருஷ்யஸ்ருங்க பர்வதத்தின் சிகரம், பொதிகாசலத்தின் அகஸ்திய கூடம், விந்தியகிரியின் விமலார்ப்புத சிகரம், திருவேங்கட பர்வதத்தின் தேஜோமயக் குன்று, கெந்தமாதனகிரியின் குணஜோதி ஆரண்யம், ஹிமோத்பர்வத சிகரஜ்வாலாமாலா கௌரீ சங்கரரது இருப்பிடம், மாலியவான் மலையின் மஹீதல தடாகம், ருஷ்யமுக பர்வதசிகரமாகிய பம்பாசரஸ், ஸ்ரீ சைல பர்வத உத்தரபாகத்தின் உமாமகேஸ்வர ஸ்தானம் என்ற இவ்விடங்களில் ஒன்றுக் கொன்று வைரிகளாகிய பிராணிகளுக்கு மைத்திரியாகிய அன்யோன்ய சிநேகமேற்படும். எந்த மனிதனுக்கும் அந்த ஸ்தானத்திற்குச் சென்றவுடன் பூர்வ ஜென்மங்கள் தோற்றப்படும். பன்னிரண்டு வருஷ அப்பியாஸ காலத்தில் ஏற்படக் கூடிய முடிவான பிரயோஜனங்கள் ஆறு மாத காலத்தில் ஏற்பட்டு விடும்.

## 324 வது நாள்

* அவரவர்களது பாப புண்ணிய கர்ம பலன்களால் பிரபஞ்ச ரூப தர்சனத்தில் ஒருவருக்கொருவர் கெட்டவர்கள், நல்லவர்கள், வேண்டியவர்கள், வேண்டாத வர்களாகவும், பேத, அபேதமாகவும் தோற்றப்படுகிறது.
* உத்தம ஞானி, உத்தம யோகி, உத்தம பக்தன், உத்தம சஞ்சாரி, உத்தம வைராகி, உத்தம ஸ்திரீ, உத்தம புருஷன் இவர்கள் ஈஸ்வரனுக்கு சமான அந்தஸ்தை யுடையவர்கள்.

## 325 வது நாள்

* வேத வாக்கியங்களையும், சாஸ்திரார்த்தங்களையும், ரிஷிகள், மஹான்கள் அபிப்பிராயங்களையும் அப்படியே முழுவதையும் நம்பி விடுவதைக் காட்டிலும் தனது ஆராய்ச்சிக்குப் பின் நம்புவது சிரேஷ்டம்.
* அனாதி காலமாக ஒன்றை விட்டொன்றைப் பற்றிப் பற்றிச் சென்று கொண்டே யிருக்கப்பட்ட மனமானது எந்த ஸ்தானத்திற்குச் சென்றவுடன் தன்னுருவத்தை இழந்து விடுகிறதோ அந்த ஸ்தானம் பிரஹ்ம தத்துவம்.

## 326 வது நாள்

* ஜட தத்துவம், ஆத்ம தத்துவம் இரண்டையும் நன்றாக ஆராய்ச்சி செய்த வர்களுங் கூட மத்தியிலுள்ள மனோதத்துவத்தை அறிய முயற்சிக்க வேண்டும்.
* பக்தியோக சக்தியினால் துவைதரூப சகுண மூர்த்திகளை அடையலாம். ஞான யோக விசாரத்தினால் துவைதமில்லாத அத்வைத சாக்ஷாத்காரத்தை அடைய முடியும்.

## 327 வது நாள்

* ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத கல்பனா சிருஷ்டிகளை வேறு வேறாகவும் ஒன்றாகப் பார்ப்பதும் ஆத்ம விசாரத்தால் முடியாது.
* மூலப் பிரகிருதிக்குக் கீழ்ப்பட்ட வஸ்துக்களைப் பற்றி விசாரிப்பதில் பிரயோனஜன மில்லை.
* பற்றை அடக்குவதற்கும் விடுவதற்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பவன் பெரிய விவேகி.

## 328 வது நாள்

* அந்தராத்மாவின் அனுமதியின்றி ஹிருதயத்திற்குள் எவ்வித சங்கல்ப புருஷர்களையும் தசேந்திரிய இச்சையாகிய ஸ்திரீகளையும்விடக் கூடாது.
* திடமான அனாத்மவாசனா பலத்தால் துவைத பாவனையும் அதனால் பயமும் அதனால் ராகத்வேஷமும் அதன் பின்னால் ஜன்ம மரணமும் உண்டாகிறது.

## 329 வது நாள்

* ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களுக்கு கடவுளது கட்டளையால் கிடைக்கக் கூடிய போகங்களை தவிர அதிகமாகவோ குறைவாகவோ ஒரு ஜீவர்களுக்கும் கிடைக்க மாட்டாது.
* ஒரு காலத்தில் ஆத்மாவினின்று பிறிவுப்பட்ட மனதை மீண்டும் அதிலேயே சேர்ப்பிப்பது சமாதி.

## 330 வது நாள்

* 1. அதிசூக்ஷ்ம புத்தி 2. தீவிர முயற்சி 3. பூர்வ புண்ய பரிபாகம் 4. அதிர்ஷ்டம் 5. ஈஸ்வர கிருபை 6. புருஷோத்தமப் பிரக்ஞை 7. பூர்ணஞானம் 8. கிருத கிருத்யத் தன்மை இவைகள் ஒன்றன்பின் ஒன்றாய் கடைசி ஜென்மமுடையவர்களைத் தொடர்கின்றது.
* எவ்வளவு அபரிமிதமான பக்தியுடையவர்களா யிருந்த போதிலும் மோக்ஷ இச்சையும் ஆத்ம ஞான வுணர்ச்சியும் ஜன்ம மரண பயமும் இல்லாதவர் களது ஆழ்ந்திய பழக்கத்தை விவேகிகள் விட்டுவிட வேண்டும். அவர்களது பக்தி நிலைபெற மாட்டாது.

## 331 வது நாள்

* புலப்படாததைப் பற்றி நம்பிக்கை, புலப்படு மென்கிற உறுதியில் நம்பிக்கை, புலப்பட புலப்பட நம்பிக்கை, புலப்பட்ட நம்பிக்கை, புலப்பட்டாலும் புலப்படா விட்டாலும் நம்பாமை இவ்வாறு ஐவகை நம்பிக்கைகளிருக்கின்றன.
* எந்த மஹா புருஷனுக்கும் தன் தேசத்தில் தன்னைச் சேர்ந்தவர்களால் கௌரதை, உபசாரம், பெருமை இவைகள் கிடைப்பது அரிது.

## 332 வது நாள்

* பகவானது சங்கல்பம் சர்வ ஜீவர்களுடைய ஹிதத்தையே நாடிக் கொண்டி ருக்கிற படியால் அதை ஒட்டியே நடந்தால் பகவானுக்குத் திருப்தி உண்டா கிறது. அவருடன் ஒத்துழைத்தால் சாந்தி, சுகம், ஞான விருத்தி முதலியவை கிடைப்பது நிச்சயம்.
* ரத்தம் சிந்துதல், கண்ணீர்த் துளி, அழுகைக் குரல், பெரு மூச்சு, இவை களில்லாத மதம், ஜாதி, தேசம் இவைகள் உத்கிருஷ்டமும் உத்தமமு மானது.

# 333 வது நாள்

* பாரமார்த்தீகத் துறையில் பரீக்ஷை செய்து புதிய மார்க்கத்தை கண்டு பிடிப்பதைவிட நம்பிக்கையுள்ள ஓர் மஹா புருஷனின் மார்க்கத்திற் செல்வதுதான் அனுபவ முறை.
* கடவுளை அறிவதற்குத் தடையாயிருக்கக் கூடியது, தர்ம விரோதமல்லாமல் அந்தரங்க பகிரங்க விஷயத்தில் சுதந்தரத்தைக் குறைத்துவிடக் கூடியதுமான ஜாதி, மதம், சாஸ்திரம் இவைகளை விட்டுவிட வேண்டும்.

# 334 வது நாள்

* கண்டுபிடித்தறியக் கூடாத ஆழ்ந்த அடங்கிய ஹிருதயமும், இணையற்ற ஒழுக்கமும், ஆசாரமும், அழகானதும் கெம்பீரமானதுமாகிய சரீரமும், மலர்ந்த குளிர்ந்த கருணை நிறைந்த பார்வையும், அந்தரங்கத்தில் ஒன்றையும் லட்சியம் பண்ணாத உதாரமான நடையும், யாவரும் ஆச்சரியப்படும்படி யான தீரமும் அமிர்தமும் பொழிகின்ற வசனமும், தர்மவிரோத மான கார்யங்களில் கண்டிப்பான குறிகளும், சிருஷ்டிக்கு விரோதஞ் செய்வதில் தெய்வ சம்பந்தப்படி நடத்தலும், காலம், தேசம், இடம், சக்தி இவைகளுக்கேற்றவாறு போதித்தல், தனது உபதேசத்தால் அவரவர்கள் புத்தி மனம் இவைகளை மாற்றி விடுதல், பார்த்தவரது பழைய எண்ணங்களை யெல்லாம் பிரித்து விடுதல், அவரவர்களுக்குத் தகுந்தபடி பேசுதல், நியாயமாய் வாதஞ் செய்வதில் நிபுணத்வம், தர்க்கத்தில் அதிகத் திறமை, தன் காரணங் களை விட்டுக் கொடுக்காமல் பிறர் காரிய காரணங்களை நிராகரித்து விடாமல் சாவதானமாய்க் கேட்டுச் சாந்த முறையிற் திருப்புதல், சகல ஜீவப் பிராணிகளிடத்திலும் சமத்துவ புத்தி, ஒன்றிலும் உயர்வு தாழ்வு பாராத உள்ளம், காரியங்களுக்கேற்றவாறு வேண்டுமென்ற காமக்குரோதாதி பதின்மூன்று குணங்களையும் வரவழைத்துக் கொள்ளுதல், அளவற்ற ஞாபக சக்தி, அகண்டமான தெய்வ மொன்றையன்றி லட்சியஞ் செய்யாமை, பொய்யில் மெய்யை அறிவது இவைகள் அவதார புருஷர்களுக்குரிய அபூர்வ லக்ஷணங்கள்.

# 335 வது நாள்

* உத்தம பக்தனது மனோநிலைமையை மற்றொரு உத்தம பக்தனே அறிய முடியும் அல்லது உத்தம பக்தர்களின் தலைவராகிய சர்வேஸ்வரன் அறிய லாம் வேறெவறாலும் அறிய முடியாது.
* நிரபராதிக்கு வரக்கூடிய தீமையும் அபராதிக்கு வரக்கூடிய நன்மையும் நீடித்திருக்க மாட்டாது.

# 336 வது நாள்

* நிற்குண சகுணங்களின் தன்மைகளைப் பூரணமாய்த் தெரிந்து கொண்ட பின் சகுணத் தியானம் செய்வதென்றும் தெரிந்து கொள்ளாமல் சகுணத் தியானம் செய்வதென்றும் இருவகை மார்க்கங்களில் நிர்குண சகுணங் களின் தன்மைகளை நன்றாய்த் தெரிந்து கொண்டு சகுணத் தியானம் செய்வதுதான் உத்கிருஷ்டமானது.
* மாறுகிற வஸ்துக்களில் பிரியத்தைச் செலுத்துவதால் மத்தியில் அளவற்ற சுக துக்கங்களை வருவித்துக் கொள்ளுவதுடன் முடிவில் ஏமாற்றத்தையே அடைய வேண்டி வரும்.

## 337 வது நாள்

* மரணமானவர்களைக் குறித்துச் செய்யப்படுகிற புண்ணிய காரியங்களெல்லாம் நம்பிக்கையைப் பொருத்ததும் ஜீவர்களின் ஹிதத்தை நாடியதும் செய்த நன்றியைக் குறிப்பிடுவதாகவும் மனோ நிச்சயத்தை உறுதிப்படுத்துவதாகவு மிருக்கிறது.
* உள்ளும் புறமும் ஒரே சமத்துவமா யிருக்கக்கூடிய பரவஸ்துவை அறிவதற்கு இரு கண்களையும் மூடி இந்திரியங்களை யடக்கிப் பிராண வாயுவை பந்தனம் செய்து மனோ விருத்தியை நிறுத்தி அறிவை அந்தர்முகப்படுத்திக் கொண்டிருப்பது பூர்ண பரிபக்குவமில்லாத தன்மையைக் காட்டுகிறது.

## 338 வது நாள்

* தர்ம சாஸ்திர மார்க்கத்திற்கும் ஞான சாஸ்திர மார்க்கத்திற்கும் அந்தரங்கத்தில் வித்தியாஸ மில்லாதபோதிலும் பகிரங்கத்தில் பெரியதும் சிறியதுமான வித்தியாஸங்க ளிருக்கின்றன.
* தர்மத்தின் உண்மையை அறிந்தவர்கள் சுக துக்கங்களைச் சமமாக நினைக்கிறார்கள்.
* ஸ்திரீகளின் விபசார தோஷம், புருஷர்களது பரஸ்திரீ இச்சை, ஜீவ ஹிம்ஸை, பொய், கொலை, களவு, பொறாமை, குரோதம், பேராசை இவைகளில்லாத பிரஜைகளுக்கு அகால மரணம் நேருவதில்லை.

## 339 வது நாள்

* பரிசுத்தமான தர்ம மார்க்கப்படி நடப்பது, சாது சங்க சேவை, ஈஸ்வரவுத்தேச ஆராதனம், ஏழைகளுக்கு உதவி, கூடிய வரை பசியுடையோர்க் கன்னமிடல், சாதுக்களையும் பிராம்மணர்களையும் தக்கபடி உபசரித்தல், எந்த காலத்திலும் ஸ்திரீகளைக் காப்பாற்றுதல், இவைகளுள்ள பிரஜைகளுக்கு அகால மரணம் நேராது.
* உள்ளத்தின் பரிபக்குவத்திற் கேற்றவாறு மதங்க ளேற்பட்டதே யன்றி கடவுளை அறிவதற் காகவல்ல.

## 340 வது நாள்

* பற்றைவிட்டும், தன்னை விலக்கிக் கொண்டும், தான் செய்யாமலும், செய்விக்காமலும் செய்யப்படுகிற உத்தமமான கர்மமானது, பரிசுத்தமாகிய இரண்டில்லாத ஞானமார்க்கத்திற் சேர்ப்பித்து விடுகிறது.
* கர்மத்தை விட்டுவிடும்படி வேதாந்தம் சொல்லவில்லை. அதிகமாகக் கர்மம் செய்யும்படி வேதாந்தம் கட்டளையிடுகிறது. அப்படிக் கட்டளையிடுகிற கர்மத்திற்குக் கைங்கரிய மென்று பெயர்.

## 341 வது நாள்

* நல்லதுங் கெட்டதுமான சங்கல்பங்களை அடிக்கடி சிருஷ்டி செய்து பலவித சுக துக்கங்களுக்காளாகி ஜென்ம மரண அபாயங்களுக்குக் காரணமாகிப் பரமாத்ம ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டிருக்கிற மனதை எப்படியாவது அடக்கியாளவோ இல்லாமலோ செய்துவிட வேண்டும்.
* வாஸ்தவமான தன்னைத் தானே ஸ்தோத்திரஞ் செய்து கொள்ளக் கூடிய மஹாத்மாவை எவ்விடங்களிற் றேடினும் காண்பதரிதாயிருக்கின்றன.

## 342 வது நாள்

* மனதிற்குச் சாந்தி, இந்திரியங்களுக்கு ஓய்வு, புத்திக்குத் தெளிவு, நிராசை இந்நான்கையும் உண்டாக்குகிற பெரிய மஹத்தான நிலைமையை ஆராய்ந்து அறிவது புருஷ சிரேஷ்ட லக்ஷணம்.
* ஸ்ரீமந் நாராயணன், தட்சிணாமூர்த்தி, சுகர், ஜடகோபர், புத்தர், மாணிக்க வாசகர் இவ்வறுவரும் பூர்ண புருஷோத்தமர்கள்.

## 343 வது நாள்

* சரீர பலம், இந்திரிய பலம், மனோ பலம், ஆத்ம பலம் இந்நான்கு பலமு மில்லாதவர்களுக்குத்தான் சீக்கிரத்தில் கோப சக்தியும், அனித்திய வஸ்துக் களில் ஆசையும் அன்னியர்களிடம் குரோதமும், கொடுப்பதில் லோபமும் உண்டாகின்றன.
* நித்தியத்தினின்று மற்றோர் நித்திய முண்டாவதேயில்லை. அனித்தியமு முண்டாகாது. அனித்தியத்தின்று அனித்திய முண்டாக காரணமில்லை.

## 344 வது நாள்

* க்ஷீராப்தி சயனன், சதாசிவன், சங்கரன், ஹிரண்யகர்பம், விராட்டு, கணேஸ்வரன், சுப்ரமண்யன், பராசக்தி முதலிய தெய்வீகங்களை ஆராய்ந்து நானேயென்பது அதன் அம்சபூதமென்பது அதன் தர்ம ஸ்வரூபமென்பது. இம்மூன்று கொள்கைகளும் அத்வைத, தொய்தாத்தொய்த, துவைத வாதி களுடைய முடிவாயிருக்கின்றன.

## 345 வது நாள்

* சுத்தப் பிரஹ்மம் பெரிதா, பரப்பிரஹ்மம் பெரிதா, விராட், விஸ்வரூபம் இரண்டில் எது வியாபகம், விஷ்ணு, சிவன் இவர்களில் யார் முதன்மை யானவர், ஜீவன் நித்தியமா அனித்தியமா; அந்த மதம் நல்லதா இந்த மதம் நல்லதா, அந்த மதாசாரியருக்குப் பூர்ண பக்குவங் காணாது, இந்த ஆசாரியர் பெரிய மஹாத்மா என்ற அறிவின்மையான குதர்க்க வாதங்களை அறவே யொழித்து ஸ்வானுபவத்தைக் கூச்சலின்றி அடைய முயல்வதே விவேகிகளுக்கு அழகு.

## 346 வது நாள்

* அகங்காரத்தை யொழித்து அடிமை யெண்ணத்தைப் போக்கி வந்தால் ஆத்ம சுதந்தரம் பிரதிபலிக்கும்.
* மனதை உருக்கிக் கண்ணீர் விடும்படி செய்கிற பஜனையைக் காட்டிலும் மனத்தைக் கெட்டிப்படுத்திக் கண் முதலிய இந்திரியங்களை அடக்கி விடுகிற பஜனையே உத்தமம்.

## 347 வது நாள்

* பேடித் தன்மையை யொழித்து நித்திய ஆண்மைத் தன்மையையடைந்து தன்னைப் பிரஹ்மத்தின் பிரதிநிதியென்று நினைக்க வேண்டும்.
* துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் இவைகள் பிரஹ்ம ஞானத்தின் படிகள்.

## 348 வது நாள்

* திடம் பராக்கிரமம் உத்ஸாகம் காம்பீரம் இவைகளையே உபநிஷத்துக்கள் உபதேசிக்கின்றன.
* கோழைத்தனம், பயங்கொள்ளித்தனம், துவேஷம் இவைகளை யொழித்துச் சமத்துவ புத்தியோடு மத உண்மைகளை ஆராய வேண்டும்.
* சகல பிராணிகளிடத்தும் தெய்வீகத் தன்மை பரவியிருப்பதால் ஒரு வஸ்துவையும் துவேஷித்தல் கூடாது.

## 349 வது நாள்

* சகல சித்திகளையும்விட ஏகாக்ர சித்தியே விசேஷமானது.
* பிரம்மசர்யமே ஹிருதய ஏகாக்கிர சித்திக்கு முக்கிய சாதனம்.
* ஜாதி பேதம் சங்கல்பத்திலிருந் துண்டானவை.

## 350 வது நாள்

* தமோ குணம் சத்துவ குணம் இரண்டும் வெளிப்பார்வையில் ஒன்றுபோல் தோற்றப்படும்.
* தமோ குணக்காரர் ரஜோ குணத்தையும் ரஜோ குணக்காரர் சத்துவ குணத்தையும் சத்துவ குணக்காரர் பிரஹ்மத்தையும் அடைய முயற்சிக்க வேண்டும்.

## 351 வது நாள்

* தேகம் நானல்ல; தேகியான ஆத்மாவே நான்; தேகங்களும் இந்திரியங்களும் எனது வேலைக்காரர்கள் என்ற எண்ணம் எல்லோருடைய மனதிலும் ஆரூடமாக வேண்டும்.
* எந்த வசனங்களையும் ஈஸ்வராதிகளோ, தேவர்களோ, அவதார புருஷர்களோ, ஆசாரியர்களோ, ஞானிகளோ, வேதங்களோ உபதேசித்தால் அதைக் கடவுளால் நமக்கு அளித்திருக்கப்பட்ட யுக்தியில் புகவிட்டு ஆராய்ச்சி செய்து அதற்குப் பொருந்தியபின் அனுபவத்திற் செலுத்திப் பார்த்து அதற்கும் ஒத்திருந்தால் அங்கீகரிக்க வேண்டும்.

## 352 வது நாள்

* அந்தரங்க அனுபவம் சொரூப நிச்சயம் கூடஸ்த நிலைமை ஆத்ம உணர்ச்சி ஐக்ய சமத்துவம் துரிய சூக்ஷ்மம் இவை களனைத்தும் ஒன்றென்று சங்கராசாரியரும் ராமானுஜாசாரியரும் உபதேசித்திருக்கிறார்கள். வேறு வேறென்று சாங்கிய முனிவரும் மத்வாசாரியரும் கூறுகிறார்கள்.
* புத்தர் பெருமான் சூன்யவாதியல்ல. பிரஹ்மவாதி, அல்லது எதார்த்த வாதி சத்திய வாதி.

## 353 வது நாள்

* எதார்த்தத்தை உபதேசித்து ஜெயம் பெறுவ தென்றும், சாமர்த்தியத்தைக் காட்டி ஜெயம் பெறுவதென்றும் இருவகை ஜெயங்களை மதாசாரியர்கள் அனுஷ்டிக்கிறார்கள்.
* எந்த ஸ்திரீகளைப் பார்த்தாலும் பழகினாலும் பயம், லஜ்ஜை, வெட்கம், காமம் இந்நான்குமில்லாத ஹிருதயம் பரமாத்மாவிடம் செல்ல அதிகாரமடைகிறது.




## 354 வது நாள்

* திரிகுணங்களையும் தாண்டி நின்றவர்களுக்குத்தான் முக்குணத்துவம் புலப்படும்.
* பிரகிருதி தத்துவத்திற்கும் பிரகாச தத்துவத்திற்கும் மத்திய கதஸ்தானத்தி லுள்ள அந்தரார்ப்புத அனுபவம் ராஜயோகிகளுக்கு வாய்ப்பதில்லை.

## 355 வது நாள்

* ஆத்மீக வுணர்ச்சியை உண்டாக்காத எவ்விதப் பிரசாரங்களும் உபதேசங் களும் சாஸ்திரங்களும் பிரயோஜனப்படுவதில்லை.
* தீமையும் பேதமு முடையது. யுக்திக்குப் பொருந்தாதவை அனுபவத்திற்கு யீடுபடாதன. இவைகளை உடையதாயினும் அவரவர்கள் ஆசார்ய உபதேசமே சிரேஷ்டமென்று நினைக்கிற மதப்பிடிவாத முடையவர்கள் நித்தியவாதிகளல்ல.



## 356 வது நாள்

* முக்குணரஹித அனுபவம் முக்குண சகித அனுபவிகளுக்கு நேராது.
* ஜலம் காற்று இவ்விரண்டு ஆகாரமே சரீரத்திற்கு வேண்டிய பிராண சத்தைக் கொடுக்கக் கூடியது.
* சரீரம் இந்திரியங்கள் பிராணன் மனம் இவைகளைத் துவளவிட்டு விடுதல் பக்தியோகம். திடமாக நிற்கச் செய்தல் ஞான யோகம்.

## 357 வது நாள்

* சரீர தந்திர பிராணாயாமத்தினால் சரீரத்திலுள்ள வியாதிகளை நிவர்த்தித்துக் கொள்ளலாம்.
* பிறறறிந்தும் அறியாமலும் நன்கொடை கொடுப்பதும் – பற்பல தானங்கள் வழங்குவதும், அன்ன சத்திரங்கள் குளங்கள் ஆலயங்கள் செய்வதும் உத்தம தருமமல்ல. ஒருவருக்கும் புலப்படாத சூக்ஷ்மமாயிருப்பது தர்மம்.



## 358 வது நாள்

* பெண் மக்கள் புருஷர்களின் அடிமைக ளென்ற எண்ணம் மிகக் கொடியது. அதை விட்டுவிட வேண்டும்.
* பிராண சத்தை குறைவு பட்டால் சரீரத்தில் வியாதி உண்டாகும்.
* பகிர் மனத்தின் சிரமத்தால் அந்தர்மனத்திற்குச் சஞ்சல முண்டாகிறது.

## 359 வது நாள்

* ஆகாரம் சிற்றுணவு பழ வர்க்கங்கள் ஜலம் காற்று இவைகளை அந்தர் முகலேபன சங்கல்பத்துடன் உண்டு வந்தால் பிராண சத்தை அதிகமாகி இந்திரிய ரேதஸ் மணியாகக் கட்டி விடும்.
* கிருமி முதல் பிரம்மா வரை சகல ஜீவப் பிராணிகளும் ஒன்றுக்கொன்று வைரமும் துவேஷமும் ஒன்றையொன்று சம்ஹரிப்பதுமாயிருக்கிறது. சகல உலகமும் மாறுந்தன்மையோடு அழியுஞ்சு பாவமுமாயிருப்பதால் ஆத்ம விவேகிகள் பிரபஞ்சத்தில் ஒட்டாமல் ஒதுங்கி நின்றுக் கொள்ள வேண்டும்.



## 360 வது நாள்

* ஸ்திரீகள் தங்கள் மணவாளர்களை உடம்பென்றும் மனிதனென்றும் எண்ணக் கூடாது. புருஷர்கள் தங்கள் பத்தினிமார்களைப் பெண்ணென்றும் அடிமையென்றும் நினைக்கக் கூடாது.
* வெளியேயுள்ள சரீரங்களில் செய்யப்படுகிற பகிர்முக கர்மங்களனைத்தும் அந்தர்முக ஆத்மாவைச் சேர்ந்ததல்ல.




## 361 வது நாள்

* ✻ பரமாத்மானுபவமின்றி எத்தனை கோடி ஜென்மங்கள் எத்தனைகோடி புண்ணிய கருமங்கள் செய்தபோதிலும் நித்தியமான பலனை அளிக்க மாட்டாது.
* ✻ யுக்திக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை நாநாவிதமாக மதாசாரியர்கள் பிரித்துச் சொல்லியிருக்கிறார்கள்.
* ✻ ஒன்றுந் தெரியாதிருப்பதும் ஞானம்; எல்லாம் தெரிந்திருப்பதும் ஞானம்.

## 362 வது நாள்

* ✻ எத்தனை கோடி ஆகாமிய சஞ்சித கர்மங்களும் அதன் பலன்களும் அனுபவங்களும் பரமபதத்தில் நிலைபெற்றிருப்பவர்களிடம் செல்ல முடிகிறதில்லை.
* ✻ சகல வியாதிகளும், அதன் அணுக்களும், ஆர்ப்பாட்டங்களும் மனோதத் துவம் முடிகிறவரை செல்லுகிறது.
* ✻ அவதாரமும் அம்ஸமும் சிறிது ஏற்ற குறைச்சலோடு கூடியது.



## 363 வது நாள்

* ✻ சரீரம் சயனித்திருந்தும் அறிவுஸ்வானுபவத்தில் நிலைபெற்றிருப்பது யோக நித்திரை.
* ✻ ஜட வஸ்துக்களின் உதவியைக் கொண்டு அஜட வஸ்துவை அறிவதென்பது ஒருக்காலுமில்லை.
* ✻ அசத்தியத்தில் சத்தியம் பேசலாம்; சத்தியத்தில் சத்தியம் பேச முடியாது.


## 364 வது நாள்

* ✻ இல்லாததும், உள்ளதும் சேர்ந்த வஸ்துவில் சத்திய வஸ்து இருக்கிறது.
* ✻ இளைத்த சரீரம் மனம் இந்திரியமுடையவர்களுக்கு ஞானமும் யோகமும் சித்திக்கும்.
* ✻ கர்மத்தில் ஞானமிருக்கிறது; ஞானத்தில் கர்மம் இல்லை.

## 365 வது நாள்

* கிரஹஸ்தாஸ்ரமத்தைவிட்டு சன்னியாஸம் பெற்றுக் கொண்டவர்கள் மீண்டும் தன் உடலின் ஜன்ம பூமிக்கு பிரவேசிக்கக் கூடாதென்று கர்ம சன்னியாஸ சாஸ்திர சட்டம் கூறுகிறது.

* துவைத அனுபவத்தில் ஆனந்தமுண்டு; அத்வைத அனுபவத்தில் ஆனந்த மில்லை



## 366 வது நாள்

* அனுபவ வஸ்து, ஆனந்த வஸ்து, அனுபவிக்கிற வஸ்து இம்மூன்றின் உண்மையை அறிதல் விசிஷ்டாத்வைதம்.

* சுருதி சம்பந்தமாகப் பேசுவது, யுக்தியைக் கொண்டு வசனிப்பது, அனுபவத்தால் உபதேசிப்பது என்ற இந்த மூன்றுவித உபந்யாஸங்கள் பாரத கண்டத்தின் தேவக் கூட்டங்களிலும் மஹரிஷிகள் ஆஸ்ரமங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தன.